# வருடாந்த அறிக்கை 2011

2011

ஜனசெவண

எமது எதிர்காலம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு.

உள்ளடக்கம் பக்கம்


அ. பொது

எமது தொலைநோக்கு, எமது செயற்பணி, எமது குறிக்கோள்கள் 02
கூட்டிணைத்தல் தகவல்கள் 03
பணிப்பாளர் சபை 04
கூட்டிணைத்தல் முகாமைத்துவம் 05
எமது பிரதானமான செயற்பாடுகள் 06-07

ஆ. கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 08
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 08
உள்ளக நிர்வாகம் 08
நிறைவேற்று முகாமைத்துவம் 08-09
இடர் முகாமைத்துவம் 09
சுற்றாடல் பிரச்சினைகள் 10-11

இ. தொழிற்பாட்டு செயலாற்றுகை அறிக்கையிடல்

வீடமைப்பு அபிவிருத்தி 11-15
ஆதன முகாமைத்துவமும் சந்தைப்படுத்தலும் 16-18
பொறியியல் சேவைகள் 19-20
மனித வள முகாமைத்துவம் 21-27
சட்டங்கள் 28
கூட்டிணைத்தல் திட்டங்களும் மேற்பார்வையும் 29

ஈ. தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் மீளாய்வு

கடன் அறவிடல் செயலாற்றுகை 2011 - கிராம வீடமைப்பு 30
நகர வீடமைப்பு சாப்புகள;/கடன் தவணைகள் மற்றும் 31
வாடகை அறவிடுதல் - 2011 செயலாற்றுகை 32
நிதியியல் மீளாய்வு 33
தகவல் பிரசாரம் 33-34
தகவல் தொழில்நுட்பம் 35-36
ஓசன் வீவ் டிவலொப்மன்ற் கம்பனி 37-38

உ. நிதிக் கூற்றுகள்

ஐந்தொகை 39
வருமான, செலவு அறிக்கை 40-41
கணக்கீட்டுக் கொள்கைகள் 42-45
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 46-72

ஊ. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 73-82

பொது

## அறிமுகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகார சபையானது அதன் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 26 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 03 நகர அலுவலகங்கள் மூலம் நாடளாவிய ரீதியில் செயலாற்றி வருகின்றது.

## எமது தொலைநோக்கு

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுத்தல்.

## எமது செயற்பணி

வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பிலான ஜனசெவன மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை ஏற்புடைய அனைத்து தரப்பினர்களினதும் பங்களிப்புடன் திட்டமிட்டவாறு செயற்படுத்தல்.

## எமது குறிக்கோள்கள்

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கடன்.˙.உதவிகளை வழங்குவதன் ஊடாக புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கும் தர நியமமற்ற வாழ்விடங்களை மேம்படுத்துவதற்கும் உதவியளித்தல்.
- நடுத்தர வருமானம் பெறுவோருக்கு தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் தனியார்துறையுடனான கூட்டுமுயற்சியின் ஊடாக வீடுகளை வழங்குதல்.
- நகர வீடமைப்புத் திட்டங்களின் நவீனமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- முழு நாட்டையும் உள்ளடக்குகின்றவாறு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடமைப்பு நிர்மாணிப்புகளுக்கான மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- வீடமைப்புடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின்போது வெளிவாரி நிறுவனங்களுக்குத் தேவையான மதியுரைச் சேவைகளை வழங்குதல்.
- சிக்கனமான நிர்மாணிப்புத் தொழில்நுட்பத்தை பரப்புதல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளின் ஊடாக பயிற்றப்பட்ட தொழில்படையினரை உருவாக்குதல்.
- குடியிருப்பாளர்களின் ஆதன உரிமையை உறுதி செய்தல்.
- வீடமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளினதும் அலுவல்களை செயற்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.
- மேற்படி குறிக்கோள்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையானவாறு தகுந்த விதத்தில் செயலாற்றுதல்.

# கூட்டிணைத்தல் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| சட்ட நிலைமை | : | 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டம் |
| கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு | : | 1979 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை<br>செயலக அலுவலகம், இல. 34, சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை<br>கொழும்பு 02. |
| தொலைபேசி இலக்கம் | : | 2421606, 2431707, 2430410, 2431722<br>2421748, 2380874 |
| தொலை நகல் | : | 2434892 |
| மின் அஞ்சல் | : | gm@nhda.lk<br>dgmf@nhda.lk<br>facc@nhda.lk |
| இணையத் தளம் | : | www.nhda.lk |
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் |
| மதியுரை சட்டத்தரணிகள் | : | சட்ட மாஅதிபர்<br>சட்ட மாஅதிபர் திணைக்களம்<br>ஹல்ஸ்டோப்<br>கொழும்பு 12. |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>தாபனக் கிளை<br>அச்சிலன் சதுக்கம்<br>கொழும்பு 01<br><br>மக்கள் வங்கி<br>தலைமை அலுவலகக் கிளை<br>சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை<br>கொழும்பு 02 |

# பணிப்பாளர் சபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையானது அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 6 அங்கத்தவர்களையும் நிதி அமைச்சின் பிரதிநிதி என்றவாறு மேலுமொரு அங்கத்தவரையும் உள்ளடக்கியுள்ளதோடு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் ஒருவர் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

| பெயரும் முகவரியும் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|
| திரு. எஸ்.ஏ. ஜயந்த சமரவீர<br>மாவல தெற்கு<br>வாத்துவை | தலைவர் | தேசிய வீடமைப்பு<br>அபிவிருத்தி அதிகார சபை |
| திரு. ஏ.டபிள்யூ. தயானந்த<br>இல. 639/3/ஏ,<br>குணவர்தன மாவத்தை | உப தலைவர் | தேசிய வீடமைப்பு<br>அபிவிருத்தி அதிகார சபை |
| திரு. பத்ம உதயசாந்த<br>குணசேகர<br>தர்மோதய மாவத்தை<br>பொத்துவில் வீதி<br>மொனராகலை | செயற்பாட்டு<br>பணிப்பாளர் | தேசிய வீடமைப்பு<br>அபிவிருத்தி அதிகார சபை |
| திருமதி சாந்தனீ விஜேவர்தன<br>இல. 13 ஏ ஜனப்பிரிய<br>மாவத்தை பொருபன வீதி<br>இரத்மலானை | அங்கத்தவர் | அரச நிதிக் கொள்கைகள்<br>திணைக்களம் பொதுத்<br>திறைசேரி |
| மருத்துவர் வசந்த பண்டார<br>இல. 2/270, கொழும்பு வீதி<br>குருணாகல்<br>பங்கலாவ சந்தி, | அங்கத்தவர் | நிர்மாணிப்பு, பொறியியல்<br>சேவைகள், வீடமைப்பு<br>மற்றும் பொது வசதிகள்<br>அமைச்சு |
| சட்டத்தரணி ராஜா குணரத்ன<br>இல. 150/05<br>ஹைலெவல் வீதி<br>மஹரகம | அங்கத்தவர் | வீடமைப்பு ஆணையாளர்<br>நிர்மாணிப்பு, பொறியியல்<br>சேவைகள், வீடமைப்பு<br>மற்றும் பொது வசதிகள்<br>அமைச்சு |
| திரு. சந்தன சேசத் ஜயகொடி<br>இல. 33, யட்டாலதிஸ்ஸ<br>மாவத்தை<br>களனி | அங்கத்தவர் | மக்கள் இணைப்புச்<br>செயலாளர்<br>நிர்மாணிப்பு, பொறியியல்<br>சேவைகள், வீடமைப்பு<br>மற்றும் பொது வசதிகள்<br>அமைச்சு |

## கூட்டிணைத்தல் முகாமைத்துவம்

திரு. எல்.எஸ். பலன்சூரிய
பொதுமுகாமையாளர்
(2011.07.26 ஆம் திகதி வரை)

மேஜர் ஜெனரல் டபிள்யு.ஆர். வசந்த குமார யு.எஸ்.பீ.
பொதுமுகாமையாளர்
(2011.07.27 முதல் 2011.11.04 வரை)

பிரிகேடியர் ஏ.எல்.எஸ்.கே. பெரேரா ஆர்.எஸ்.பீ.
பொதுமுகாமையாளர்
(2011.11.14 முதல் 2012.05.14 வரை)

திரு. டீ.என். விஜேசிங்க
பிரதி பொதுமுகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்)
(2011.10.31 திகதி வரை)

திரு. ஆர்.எம்.எல்.பீ. எதிரிசிங்க
பிரதிப் பொதுமுகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்)
(2011.11.01 திகதி முதல்)

திரு. காமினீ பன்னிலவிதான
பிரதிப் பொதுமுகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)

திரு. கே.டபிள்யு.ஏ. தர்ம ஸ்ரீ காரியவசம்
பிரதிப் பொதுமுகாமையாளர் (தகவல், பிரசாரம்)

திருமதி எம்.எஸ். வீரசிங்க
பிரதிப் பொதுமுகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்பு)

திரு. ஈ.ஏ.டீ.எஸ். எதிரிசிங்க
பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி)

திரு. டபிள்யு.ஏ.டீ. சரத் குமார
பிரதிப் பொதுமுகாமையாளர்
(ஆதன முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல்)

திரு. டபிள்யு. தனசந்திர
உதவிப் பொதுமுகாமையாளர் (கூட்டிணைத்தல் திட்டமிடல்)

திருமதி ஏ.கே. புஷ்பா ரோஹினீ
உதவிப் பொதுமுகாமையாளர் (சட்டம்)

திரு. பீ.எம்.ஆர். மாரசிங்க
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திரு. மனுஜ கருணாரத்ன
பணிப்பாளர் சபை செயலாளர்

# எமது பிரதானமான செயற்பாடுகள்

எமது குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. வீடமைப்பு உதவிச் சேவைகளை வழங்கல்

வீடமைப்புத் தகைமைகளை ஆராய்தல்.
சமூகத்தை விழிப்புணர்வூட்டலும், ஒழுங்கமையச் செய்தலும்.
சனசமூக அபிவிருத்தி ஒழுங்கமைப்புகளை உருவாக்குதல்.
வீடமைப்பு.∴குடியமர்த்துகைத் திட்டங்களைத் தயாரித்தல்.
குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைத் தகவல்களைப் பரப்புதல்.
தேவையின் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்கல்.
நிர்மாணிப்புகளின் தரநியமத்தை.∴இணக்கத்தை அத்தாட்சிப்படுத்தும் பொருட்டு மேற்பார்வை செய்தல்.
உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கல்.∴ இணைப்பாக்கத்தை பேணிவருதல்.

2. காணித் துண்டுகளைப் பெற்றுக்கொடுத்தல்

பொருத்தமான நிலத்தை அடையாளம்காணல்.
தகுதியை ஆராய்தல்.
காணித் துண்டு வரைபடங்களைத் தயாரித்தல்.
தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
காணி பெறுனர்களை அடையாளம்காணலும் தெரிவு செய்தலும்.
தேவைப்படின் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல்.
தெரிவு செய்யப்பட்ட காணி பெறுனர்களுக்கு காணித் துண்டுகளை ஒப்படைத்தல்.

3. நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

தகுதியான இடங்களை அடையாளம்காணல்.
நில அளவைப் பணிகளை மேற்கொள்ளல்.
நிதிசார்ந்த இயலுமை மட்டத்தை தீர்மானித்தல்.
திட்டவரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்.
உரிமையை ஒப்படைத்தல்.

4. அரசதுறையும் தனியார்துறையும் கூட்டாக வீடமைப்பு நிர்மாணிப்புகளை விருத்தி செய்தல்

தகுதியான நிலங்களை அடையாளம்காணல்.
விருப்பம் தெரிவிக்கின்ற தரப்பினர்களை அழைத்தல்.
தகுதியான அபிவிருத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலும் முன்மொழிவுகளை பெறுதலும்.
முன்மொழிவுகளை மதிப்பிடலும் அபிவிருத்தியாளர்களைத் தெரிவு செய்தலும்.
கருத்திட்ட திட்டமிடல்களை உருவாக்கல்.
புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திடல்.
ஒருங்கிணைந்த கம்பனிகளை உருவாக்கல்.
நடைமுறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் தரத்தை சான்றுப்படுத்தல்.
சந்தைப்படுத்தலும் வீடுகளை விற்பனை செய்தலும்.
முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்.

5. வீடமைப்பு தொடர்பான மதியுரைச் சேவைகள்

மாவட்ட வீடமைப்பு மதியுரைச் சேவை நிலையங்களைத் தாபித்தல்.
தகைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
தேவையான சந்தர்ப்பங்களில் திட்டவரைபடங்களை வழங்குதல்.
அளவு.∴பொருட்கள் பட்டியல்.∴செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
திட்டவரைபடங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுதல்.
நிர்மாணிப்புகளின் மேற்பார்வை மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
நிர்மாணிப்புத் தரவுத் தளமொன்றை பேணிவருதல்.

6. குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பிரபல்யப்படுத்தல்

ஏற்புடைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் தகவல் பொருட்கள் மற்றும் மாதிரிகள் ஆகியவற்றை சேகரித்தல்.
மதியுரை நிலையங்களின் மூலம் புதிய தொழில்நுட்ப முறைகளையும் பொருட்களையும் அறிமுகப்படுத்தல்.

7. வீடமைப்புத் திட்டங்களின் பொதுப் பிரதேசங்கள், அதன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளுடன் கூடியதாக மாகாண மேலாண்மைகளுக்கு ஒப்படைத்தல்

பொதுப் பிரதேசங்கள்.'.திறந்த இடங்களின் எல்லைகளை அடையாளமிடல்.
நில அளவையாளர் வரைபடங்களைத் தயாரித்தல்.
மாகாண மேலாண்மைகளின் இணக்கப்பாட்டைப் பெறுதல்.
உறுதிகளின் மூலம் ஆதனங்களை ஒப்படைத்தல்.
வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தல்.

8. திறன் வளர்ச்சிக்கான பயிற்சியளிப்பு

தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடி பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
தொழில் பயிற்சி வாய்ப்புகளை அமைத்துக்கொடுத்தல்.
அடிப்படை உபகரண உதவிகளை வழங்குதல்.
செயற்பாட்டைப் பரிசோதித்தல்.
அனுகூலமான தொழில்களின் பொருட்டு உதவியளிப்பதற்காக தரவுத் தளமொன்றைப் பேணிவருதல்.
திறன்களைக் கொண்ட நபர்களின் தகவல்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலொன்றை பேணிவருதல்.

9. வீடமைப்புக் கையிருப்புகள் தொடர்பிலான தரவுகளைப் பேணிவருதல்

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மதியுரை நிலையங்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
மாகாண மேலாண்மைகளுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் கேரித்தல்.
மாவட்ட வீடமைப்புக் குழுக்களுக்கு தரவுகளைச் சமர்ப்பித்தல்.
குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை நிரல்படுத்தல்.
தரவுகளை அரை ஆண்டு ரீதியில் தரவுத் தளத்திற்குச் சமர்ப்பித்தல்.
எதிர்காலத் திட்டமிடல்களின் பொருட்டு தரவுகளைப் பயன்படுத்தல்.

நிறுவன ரீதியிலான நிர்வாகத்தின் உயர் மட்டம் வரை செல்வதற்கான தீவிர இடையறா அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ளோம். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு ஆகிய நிறுவனங்களின் மூலம் முன்மொழியப்பட்ட மிகப் பொருத்தமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு எப்போதும் முயற்சியெடுக்கப்படுவதோடு எமது வகைப்படுத்தலுக்குரிய எமது அமைச்சினால் வழங்கப்படுகின்ற அளவீடுகளுக்கு இணங்க செயற்பட்டு வருகிறோம்.

## பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபை ஒவ்வொரு மாதமும் கூடுகின்றது. வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்பீட்டளவிலான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் அதன் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மாற்றங்களை அடையாளங்கண்டு கொள்கைகளை மாற்றுவதற்குப் பொருத்தமான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டினுள் 25 கூட்ட அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பொதுமுகாமையாளரையும் நிறைவேற்றுத் தரமல்லாத 4 பணிப்பாளர்களையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உள்ளடக்கியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களாக சேவையாற்றியுள்ளனர்.

| | |
|---|---|
| 1. திருமதி சாந்தனீ விஜேவர்தன | - தலைவர் |
| 2. திரு. ஏ.டபிள்யு. தயானந்த | - அங்கத்தவர் |
| 3. சட்டத்தரணி ராஜா குணரத்ன | - அங்கத்தவர் |
| 4. திரு. கே.பீ. குணதாச | - அங்கத்தவர் |
| 5. திரு. ஈ.கே.கே.எஸ். எதிரிசிங்க | - அங்கத்தவர் |

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவ முறையின் சிறந்த நிலைத்திருத்தல் உறுதிசெய்யப்படுவதோடு கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையதான சட்ட விதிகளுக்கு இணங்க உள்ளக நிர்வாகத்தின் செயற்பாடு மீளாய்வு செய்யப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 9 கூட்ட அமர்வுகளை நடத்தியுள்ளது.

## உள்ளக நிர்வாகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தனது நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் உச்சப் பயன்பாட்டை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளக நிர்வாகக் கொள்கைகள் மற்றும் ஒருசில மதியுரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேபோன்று மூலோபாயங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

இதற்கு சமனான விதத்தில் பணிப்பாளர் சபை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையிடல் முறையின் ஊடாக உள்ளக நிர்வாகத்தை உறுதிசெய்வதோடு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே சமநிலையைப் பேணிவரும் பொருட்டு அத்தியாவசியமான தீர்மானங்களை மேற்கொள்கின்றது. விலைக் குழுக்களையும் திணைக்கள கொள்வனவு வழங்கல் குழுக்களையும் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நிறைவேற்று முகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்தை பிரதி பொதுமுகாமையாளர் ஒருவர் ஏற்றுள்ளதோடு, 07 உப அலுவலகங்களுடன் கூடிய 28 மாவட்ட அலுவலகங்களின் பொறுப்பு சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்/மாவட்ட முகாமையாளர் வசமுள்ளது. பிரதிப் பொதுமுகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்கள்/மாவட்ட முகாமையாளர்கள் பொதுமுகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதோடு, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பொதுமுகாமையாளர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

# ஆ

# கூட்டிணைத்தல் நிர்வாகம்

## இடர்நேர்வு முகாமைத்துவம்

பெருந்தொகையான சேவை வழங்குனர்களுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடமைப்பு வசதிகளை வழங்குகின்றதும் நாடு முழுவதிலும் பரவியுள்ள 26 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளதுமான இலங்கையின் ஒரேயொரு அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதன் பல்வேறான பங்குதாரர்களின் தேவைகளைப் பேணும் பொருட்டு நிதிசார்ந்த மற்றும் நிதிசாரா பல இடர்நேர்வுகளுக்கு முகம்கொடுக்க நேரிடுவதோடு, அதனை முன்கூட்டி முகாமைத்துவம் செய்து வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் இடர்நேர்வு முகாமைத்துவமானது பணிப்பாளர் சபையின் ஊடாகவே ஆரம்பிக்கப்படுகின்றது. அது பல்வேறான செயற்பாடுகளைக் கொண்டதாயுள்ளதோடு பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் அப்போதைக்குள்ள பொருளாதார மற்றும் தொழில்முயற்சி நிலைமைகளின் கீழ் அது முறைசார்ந்த விதத்தில் மீளாய்வு செய்யப்படுகின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக, அதன் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் ஆலோசனைகளின் பேரில் கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் நோக்கங்களும் நிறைவேற்றிக்கொள்ளப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இடர்நேர்வுகளுக்கு உள்ளாதல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் மற்றும் கட்டுப்படுத்தக் கூடியதான முறைமைகளின் பலவீனங்களை இனங்காணும் பொருட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடு அதிகார சபையின் கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுகின்றது. வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு நிலைமைகளின் போதுமாந்தன்மை தொடர்பிலான சுயாதீனமான கருத்துகளை காலக்கிரமத்துடன் முகாமைத்துவத்திற்கு அறிவித்தல் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

## திரவத்தன்மை இடர்நேர்வு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கைகள் தொடர்பிலான கடப்பாடுகளை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு இயலாமற்போகின்றபோது இந்த இடர்நேர்வுக்கு உள்ளாகின்றது. அவற்றின் காலம் கடந்துள்ள சந்தர்ப்பங்களில் நிதிசார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு நிதியங்கள் இருத்தலும் தேவைகள் எழுகின்றபோது அவற்றின் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதிசார் ஏற்பாடுகள் உள்ளதென்பதை உறுதி செய்தலும் இதில் உள்ளடங்குகின்றது.

திட்டமிடலுக்கான வழிகாட்டல், ஒழுங்குமுறையான தேவைகளின்படி செயலாற்றுதல், உடன்படிக்கைகளின் கடப்பாடுகள் மற்றும் வளர்ச்சி எதிர்பார்ப்புகளுக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான போதியளவு திரவத்தன்மை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாயுள்ளதென்பதை உறுதிசெய்தல் ஆகிய முதன்மையான விடயங்கள் பணிப்பாளர் சபைக்கும் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களுக்கும் முகாமைத்துவத்தின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிரே'ட முகாமைத்துவம் அதற்குரிய முதன்மையான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு,

- பணம் ஈட்டுவதுடன் தொடர்புடைய மாற்று வழிமுறைகளை போதியளவு உறுதி செய்தல்.
- அப்போதைக்குள்ள கடன்கள், முதலீடுகள் மற்றும் பணம் ஈட்டுகின்ற வழிமுறைகளை காலக்கிரமத்தின்படி மீண்டும் ஆராய்தல்.
- அப்போதைக்குள்ள விலைகளை மீளாய்வு செய்கின்ற அதேவேளை, போட்டியாளர்களது விலைகளைப் பற்றிய பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல்.
- கூட்டிணைத்தல் அளவீடுகளுக்கு இணங்க திரவத்தன்மை வீதங்களுக்கான வழிகாட்டல்கள்.

அளிப்புகள், உள்ளக ரீதியில் ஈட்டப்படுகின்ற நிதியங்கள் மற்றும் பணமாக மாற்றக்கூடிய குறுகியகால முதலீடுகளை நிர்வகிப்பதன் ஊடாக திரவத்தன்மையைப் பேணிவருவதை நாளாந்தம் மேற்கொள்கின்றது.

## சந்தை இடர்நேர்வு

விலை கூருணர்வுடைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளைப் பேணிவருகின்றபோது எழுகின்ற நட்டங்கள் தொடர்பில் இந்த இடர்நேர்வு உருவாகின்றதோடு, பிரதானமாக வட்டி வீதங்களின் மாற்றங்கள் மற்றும் காலத்தின்படி கட்டடப் பொருட்களின் விலைகளிலான அசைவுகளின் காரணமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வீடு தேவைப்படுகின்ற அனைத்து நபர்களுக்கும் வீடொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பணம் போதியதாயில்லாததன் காரணமாக சந்தை இடர்நேர்வுக்கு முகம்கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரிடுகின்றது.

கூட்டிணைத்தல் முகாமைத்துவ நோக்கங்களை ஈட்டிக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்ற ஏனைய பிரதானமான பங்குதார நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் சேவை வழங்குனர்களின் பணத்திற்கு ஏற்ற விதத்திலான சேவைக்கான பெறுமதியைப் பெற்றுக்கொடுத்து வீடமைப்புச் சந்தைக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்களை உச்சமட்டத்தில் கட்டுப்படுத்துதல் கூட்டிணைப்புச் சபையின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

## தொழிற்பாட்டு இடர்நேர்வு

வெளிவாரிப் போட்டி ரீதியிலான சக்திகளுக்கு முகம்கொடுப்பதற்கு சிரமமாயுள்ள அல்லது செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துகின்ற உள்ளகப் பலவீனங்களின் காரணமாக போதியதாயில்லாத அல்லது உள்ளக செயற்பாடுகளின் பெறுபேறாக இந்த இடர்நேர்வு உருவாகின்றது.

நிறுவனத்தினுள் சிறந்த முறையிலும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்படுகின்ற செயலூக்கம்மிக்க சுற்றாடலொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகள் மற்றும் விரிவான கொள்கைகளுடன் கூடிய முறைமையொன்று இடர்நேர்வுக் கட்டுப்பாட்டின் பொருட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் பேணிவரப்படுகின்றது.

பயனுறுதியான செயலூக்கம்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு ஒருசில விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தகவல்களின் பாதுகாப்பைப் பேணிக்காத்து அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்ட காலக்கிரமமான தரவுகளின் திரட்டலை அறிக்கையிடல் மற்றும் தயாரித்தல்.
- தகவல்களைப் பாதுகாக்கின்ற கொள்கைகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கடனை மீள அறவிடுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள்.

தொழிற்பாட்டு இடர்நேர்வை கட்டுப்படுத்தல் மத்திய முகாமைத்துவத்தின் முதன்மையானதொரு பொறுப்பாகும். கட்டுப்படுத்தப்பட்ட சூழலின் தனித்துவத்தைப் பேணிவரும் பொருட்டு நிதி, கணக்காய்வு மற்றும் ஏனைய உதவிச் சேவைப் பிரிவுகளின் மூலம் பெரும் பணி ஆற்றப்படுகின்றது.

பெறுமதியான பல சொத்துக்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாயுள்ளதால் தகுந்த உபாய வழிமுறைகளைப் பயன்படுத்துதல், தொடர்ச்சியான மீளாய்வுகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாக போட்டி ரீதியிலான சுற்றாடலினுள் வெற்றியடையலாம் என்பதை எதிர்பார்க்கக்கூடியதாயுள்ளது.

## சுற்றாடல் பிரச்சினைகள்

கட்டடங்களை நிர்மாணித்தல் சுற்றாடல் முறைமையினுள் பல விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கத்தை கூட்டாட்சிக் கட்டடங்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களில் மிகத் தெளிவாகக் காணக் கூடியதாயுள்ளது. சுற்றாடல் பாதுகாப்பானது அபிவிருத்திச் செயற்பாடுகளில் முக்கியமானதொரு அம்சமாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக்கூடியதாயுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மக்களுக்கு பாதுகாப்பானதும் சிறந்ததுமான சுற்றாடலொன்றை பெற்றுக்கொடுக்கின்றது. அதேநேரம், குடிநீர், போதியளவு பிரவேசப் பாதைகள், தொடர்ச்சியான மின்சார வழங்கல், மழை நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் முறைமைகள், திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் சட்ட விதிகளின் மூலம் கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு மிகச் சிறந்ததொரு சுற்றாடல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## வீடமைப்பு அபிவிருத்தி

“மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கிற்கமைய “ஜனசெவன“ பத்து இலட்சம் வீடுகள் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின் கீழ் இலங்கையின் பல்வேறான பிரதேசங்களிலும் வாழ்கின்ற வீடமைப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2011 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### “ரணவிரு“ கிராமம் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

பத்து இலட்சம் வீடுகளைக் கொண்ட 2011 ஜனசெவன வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடுகளை எதிர்பார்த்துள்ள பல்வேறு மக்கள் பிரிவினருக்கும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமும் மஹிந்த சிந்தனை எதிர்காலத் தொலைநோக்குக்கு இணங்குகின்றவாறு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் கௌரவ அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட மட்டத்தில் பிரதேசத்தில் உயிர்த் தியாகம் செய்த படை வீரரொருவரை நினைவுகூர்வதை முன்னிட்டு அப்பெயரில் கருத்திட்டத்தைப் பெயரிட்டு இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, மிகவும் பொருத்தமான குடியிருப்புகளைத் தெரிவு செய்து அதனைத் திட்டவட்டமானதொரு கால கட்டத்தினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றபோது வீதிகள், நீர் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய பிரதேசமொன்றைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாண்டினுள் 19 மாவட்டங்களில் 60 கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அதனூடாக 1771 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் சார்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ரூபா 192.972 மில்லியன் பணத்தொகை செலவிடப்பட்டுள்ளது.

### “விசிறி“ வீடமைப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

மஹிந்த சிந்தனை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் பரவியுள்ள வீடற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அளவீடுகளுக்கு இணங்குகின்றவாறு ஒட்டுமொத்தமான கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் சமுதாயப் பங்களிப்புடன் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வீடமைப்புத் தேவைகள் உள்ள வீடு பெறுனர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தலும், தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்துவதற்காக வீடமைப்புக் கடன்களை வழங்குதலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றது. தீவிர வீடமைப்புத் தேவையைக் கொண்ட வீடொன்றை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் அல்லது பணத்தைச் சேகரித்து வைத்துள்ள நபர்களுக்கு இந்தகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் இறுதியளவில் 8153 வீட்டுக் கூறுகளை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, இதற்கென பின்வரும் மூலங்களின் ஊடாக ரூபா 873.287 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| திறைசேரி நிதியங்கள் | - ரூபா 494.044 மில்லியன் |
| உள்ளக நிதி உருவாக்கம் | - ரூபா 379.243 மில்லியன் |

### ஜனசெவன உபஹார தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்கள் உட்பட நடுத்தர வருமானம் பெறுகின்றவர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்கின்ற அணுகுமுறையொன்றாக வர்த்தக வங்கிகளின் உதவியுடன் வீடமைப்புக் கடன்களை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இதில் அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஆவணங்களை சமர்ப்பிப்பதன் ஊடாக தனிநபர் பிணையின் கீழ் ரூபா 500,000/- வரையிலான கடன் தொகையொன்று வழங்கப்படும். இதன் கீழ் புதியதொரு வீட்டை நிர்மாணிப்பதற்கும் அப்போதைக்குள்ள வீட்டை திருத்துவதற்கும் வீடமைப்புக் கடன் வழங்கப்படும் என்பதோடு, தொடர் மாடி வீடுகளைத் திருத்துவதற்கும் கடன் வழங்கப்படும். ஜனசெவன உபஹார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டினுள் 5831 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இதற்கென ரூபா 1411.562 மில்லியன் தொகை செலவிடப்பட்டது.

## உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம்

“ஜனசெவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின்” உப நிகழ்ச்சித்திட்டமொன்றாக “ஜனசெவன உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம்” 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் எந்தவொரு வங்கியிலிருந்தும் கடன் தொகையொன்றைப் பெற்றுக்கொள்ள இயலாதுள்ள அரச மற்றும் தனியார் துறை தொழில்களில் ஈடுபடுகின்ற மக்கள் பிரிவினர் உள்ளடங்குகின்றனர்.

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கட்டங்களை உள்ளடக்கியதாயுள்ளது.

### ஜனசெவன உபஹார கட்டம் 01

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மூன்று அரச வங்கிகளால் ரூபா 710 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அவை,

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 250 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 260 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2389 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஜனசெவன உபஹார கட்டம் 02

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 06 அரச வங்கிகளால் ரூபா 1500.0 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அவை,

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 300 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 260 மில்லியன் |
| • அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | ரூபா 250 மில்லியன் |
| • பிரதேச அபிவிருத்தி வங்கி | ரூபா 100 மில்லியன் |
| • வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் ட்டுத்தாபன வங்கி | ரூபா 250 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 4736 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்காகவும் ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, இதன் பொருட்டு 06 அரச வங்கிகளால் ரூபா 3800.0 நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| • மக்கள் வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • இலங்கை வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • தேசிய சேமிப்பு வங்கி | ரூபா 1000 மில்லியன் |
| • அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | ரூபா 250 மில்லியன் |
| • பிரதேச அபிவிருத்தி வங்கி | ரூபா 250 மில்லியன் |
| • வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | ரூபா 300 மில்லியன் |

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 12666 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று 2013 ஆம் ஆண்டின் பொருட்டும் மேற்படி அரச வங்கிகளின் பங்களிப்போடு ரூபா 4000.0 மில்லியன் ஜனசெவன உபஹார நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதைத் தவிர 2012 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக மக்கள் வங்கியுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒன்றிணைந்து ரூபா 120.0 மில்லியன் கடன் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வட மாகாணத்தில் மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கி நிதி ஏற்பாட்டின் மூலம் 540 வீட்டுக் கூறுகளின் பொருட்டு ரூபா 345.0 மில்லியன் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

### சிரம சவிய தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் நிர்மாணிப்புத் துறைக்கு பல்வேறு தொழில்களின் கீழ் பங்களிப்புச் செய்கின்ற பயிற்றப்பட்ட ஊழியர்களின் தொழில்சார் திறமைகளை வளர்த்தலும் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு வருதலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில், உரிய பயிற்சியின்றி தமது தொழிலில் ஈடுபடுகின்ற தொழில்சார்ந்தோருக்கு (ஆரம்ப தச்சு, மேசன் தொழில்புரிவோர்) நாட்டிலுள்ள முன்னிலை வகிக்கும் வளப் பகிர்வு நிறுவனங்களின் ஊடாக,

- தொழிலுக்கு ஏற்புடையதான கோட்பாட்டு ரீதியிலான மற்றும் நடைமுறை ரீதியிலான பயிற்சியை பெற்றுக்கொடுத்தல்.
- தேசிய தொழில்சார் தகைமைச் (NVQ) சான்றிதழை பெற்றுக்கொள்ளும் பொருட்டு தொழில்சார்ந்தோரை ஊக்குவித்தல் மற்றும் அதன் மூலம் சமூக அங்கீகாரம் பெற்ற பயிற்றப்பட்ட தொழில்சார்ந்தோராக ஆக்குதல்.
- சுற்றாடல் நேயம்மிக்க வீடமைப்பு நிர்மாண முறையியல்களைப் பற்றி அவர்களை விழிப்புணர்வூட்டி அந்த முறையியல்களை பிரபல்யப்படுத்தும் பொருட்டு அவர்களை ஈடுபடுத்துதல்.
- சுற்றாடல் நேயம்மிக்க நிர்மாணிப்பு முறையியல்களைப் பயன்படுத்தி தேவைக்கேற்றவாறு தமது வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

இதற்கமைய 2011 ஆம் ஆண்டினுள் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 905 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு இதற்கென ரூபா 82.125 மில்லியன் செலவிடப்பட்டது.

## சசுனென் செவன தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

கிராமத்திலிருந்து பன்சாலைக்கும் பன்சாலையிலிருந்து கிராமத்திற்கும் என்ற தொனிப்பொருளை நிறைவேற்றிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு 2600 ஆம் சம்புத்த ஜயந்தி ஆண்டு விழாவை முன்னிட்டும் அதனைக் கொண்டாடும் பொருட்டும் இலங்கையினுள் காணப்படுகின்ற அண்ணளவாக 10210 பன்சாலைகள் மற்றும் புண்ணிய தலங்களைச் சார்ந்து வாழ்கின்ற மிக வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டு, ஒரு பன்சாலையின் சார்பில் ஒரு வறிய குடும்பத்திற்கு வீடொன்றைக் கட்டிக் கொடுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் உள்ள 10210 பன்சாலைகளை உள்ளடக்கியதாக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, முதலாவது கட்டமாக 2011 ஆம் ஆண்டினுள் 528 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ரூபா 34.885 மில்லியன் பணத் தொகை செலவிடப்பட்டது.

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ளதும் அதேபோன்று வீடொன்றைக் கட்டிக் கொள்வதற்கான ஆர்வம் உள்ளதுமான மிக வறிய குடும்பங்கள் இதன் பொருட்டு தெரிவு செய்யப்படும். இது தர்மகர்த்தாக்கள் சபையின் முழுமையான மேற்பார்வையின் கீழ் உரிய கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்களின் தலையீட்டின் கீழ் நடைபெறும். வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவை உள்ளதும் காணியொன்றை சொந்தமாகக் கொண்டுள்ளதுமான குடும்பமாயிருத்தல் கட்டாயமாகும். குடும்பத்தைத் தெரிவு செய்கின்ற இறுதி விதப்புரையானது அக் குடும்பம் உரித்தாயுள்ள பன்சாலையின் தலைமைப் பிக்கு உள்ளிட்ட தர்மகர்த்தாக்கள் சபையினால் வழங்கப்படுதல் வேண்டும். இதில் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான ஆரம்பத் தயார் நிலையைக் கொண்டுள்ள குடும்பங்கள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்படும்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடமைப்புத் திட்டவரைபடமொன்று வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்புத் தொழில்நுட்ப உதவியும் வழங்கப்படும்.

வீடு நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தைச் சார்ந்ததாக நிர்மாணிப்புக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறையியல்கள் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்பு மேற்பார்வை நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படும்.

தர்மகர்த்தாக்கள் சபை, கிராமவாசிகள் மற்றும் நலன்பெறுனர் குடும்பங்களால் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## ஜனசெவன சரண தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ள வறிய குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடொன்றைக் கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் ஒரு குடும்பத்திற்கு உயர்ந்தபட்சம் ரூபா ஓரிலட்சம் உதவித் தொகை வழங்கப்படும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2011 ஆம் ஆண்டில் 33 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் பொருட்டு ரூபா 2.524 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ஆதிவாசிகளுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந்நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்கின்ற பழங்குடியினர் சமுதாயத்தினருக்கு நிரந்தரமான வாழ்விடங்களை நிர்மாணித்துக் கொடுத்து அவர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் கலாசார, கலை அலுவல்கள் அமைச்சின் நிதியியல் பங்களிப்பின் ஊடாக இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டமாக மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 4 கிராமங்களில் 100 பழங்குடியினர் குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| மாவட்டம் | கருத்திட்டம் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மட்டக்களப்பு | குன்வன்குளம் | 30 |
| மொனறாகலை | ரத்துகல | 20 |
| அம்பாறை | பொல்லெபெத்த | 30 |
| அம்பாறை | ஹென்னானிகல | 20 |

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்காக ரூபா 124,000.:- நிதி உதவி வழங்கப்படுவதோடு, பழங்குடி சமுதாயத்தினரின் வாழ்க்கை முறை மற்றும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்ட கருத்திட்டங்களின் திட்டவரைபடத்திற்கேற்ப கருத்திட்டங்களின் அனைத்து வீடுகளையும் நிர்மாணிப்பதற்கு உத்தேசமாயுள்ளது. இந்நிகழச்சித்திட்டத்தின் கீழ் 04 கருத்திட்டங்களுக்காக ஏற்கனவே ரூபா 3.400 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## வெளிவாரி நிதியப் பங்களிப்பு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

தேசிய மட்டத்தில் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற நிதியங்களுக்குப் புறம்பாக மாவட்ட மட்டத்தில் பெறப்படுகின்ற மாகாண சபைகளின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்கள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளின் நிதிசார் பங்களிப்பின் ஊடாக இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டினுள் வெள்ளப் பெருக்கு உதவி நிகழ்ச்சித்திட்டம், மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக 7115 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு, பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்கள் ஆகிய மூலங்களின் ஊடாக ரூபா 309.190 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## தயட்ட கிருள நிகழச்சித் திட்டம் - அனுராதபுரம் மாவட்டம்

தயட்ட கிருள 2012 கண்காட்சிக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் சமாந்திரமாக அனுராதபுரம் மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் கீழ் வீடுகளின் மேம்பாட்டுக்கான அல்லது புதிதாக வீடொன்றை நிர்மாணிக்கும் தேவையைக் கொண்ட குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்கள் மற்றும் உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதன் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் 558 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டதோடு, இதன் பொருட்டு திறைசேரி நிதி ஏற்பாடு ரூபா 59.125 மில்லியன் மற்றும் மக்கள் வங்கி நிதி ஏற்பாடு ரூபா 82.918 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர தயட்ட கிருள நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்திரமாக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு அதிக கால கட்டத்தினுள் இந்நாட்டில் காணப்பட்ட யுத்த நிலவரத்தினுள் பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக தமது வீடுகள் அழிவடைந்த குடும்பங்களுக்கு தமது கிராமங்களில் நிரந்தரமான வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் நோக்கத்துடன் “பிரணாம“ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இக் குடும்பங்களில் பெரும்பாலானவை விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட எளிமையான வாழ்க்கையை நடத்தியவர்களாவர். இவர்கள் வசித்த கிராமங்கள் அக்காலகட்டத்தில் தொடர்ந்து பயங்கரவாத தாக்குதல்களுக்கு உள்ளாகி வீடுவாசல்களும் தோட்டங்களும் அழிவடைந்து வருமான வழிகள், பிள்ளைகளின் கல்வி மற்றும் அன்றாட வாழ்க்கையை பேணிவருவதில் சிரமத்துக்குள்ளாகி மிகவும் க`டமான வாழ்க்கையை நடத்தி இக் கிராமங்களிலேயே தங்கியிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்கு தோள்கொடுத்துள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே அனுராதபுரம் மாவட்டத்தில் பதவிய பிரதேச செயலாளர் பிரிவில் உரேவ ஓமாரகட கிராமம், கெபித்திகொல்லேவ வாகல்கட கிராமம் மற்றும் கம்பிளிவெவ கோனவெவ கிராமம் ஆகியவற்றில் 156 குடும்பங்களுக்கு ரூபா 25.000 மில்லியன் பணத் தொகை செலவிடப்பட்டு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், தயட்ட கிருள நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்திரமாக மகவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் 31 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவியாக ரூபா 3.040 மில்லியன் வழங்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 47 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக கட்டடப் பொருட்கள் உதவியாக வழங்கப்பட்டன.

## தோட்ட நிகழ்ச்சித் திட்டம்

தோட்டங்களில் லயின் அறைகளில் குறைந்தபட்ச வசதிகளின் கீழ் வாழ்கின்ற சமுதாயத்தினருக்கு அடிப்படை வசதிகளைக் கொண்ட புதிய வீடொன்றின் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். தேசத்தைக் கட்டியெழுப்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு ஆகியன இதற்கான நிதிசார் பங்கிப்பை வழங்குகின்றன. இந் நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் 13 மாவட்டங்களைத் தழுவியதாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடந்த ஒருசில ஆண்டுகளினுள் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு எஞ்சியிருந்த 390 வீட்டுக் கூறுகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, இதற்கென ரூபா 13.635 மில்லியன் செலவிடப்பட்டது.

<u>தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை</u>

னசெஜவன வீடமைப்பு வேலைந்நிட்டம

| "ஜன செவன" வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | ஆண்டு இலக்கு | | | | | | அடைவு (2011.12.31 ஆம் திகதி உள்ளவாறு) | | | | | | | பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பௌதீக | நிதியியல் (ரூபா மில்.) | | | | | பௌதீக | | நிதியியல் (ரூபா மில்.) | | | | | |
| | அலகு எண்ணிக்கை | மொத்தம் | திரண்ட நிதியம் | நிறுவன சோர்க்கைகள் | ஏனையவை | செவன | ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் | பூர்த்தி செய்யப்பட்ட அலகுகள் | திரண்ட நிதியம் | நிறுவன சோர்க்கைகள் | ஏனையவை | செவன | மொத்தம் | |
| **1 கிராமிய மற்றும் பகுதியளவு நகர நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | | | | | | | | 715.0 |
| i. ஜன செவன "விரு உபஹார" கருத்திட்டம் | 2,000 | 225.0 | 125.0 | 100.0 | | | 1,771 | 565 | 161.42 | 34.56 | - | - | 195.98 | |
| ii.செவன சிரம சக்தி | 1,000 | 100.0 | 75.0 | 25.0 | | | 905 | 512 | 59.89 | 22.24 | - | - | 82.13 | |
| iii. விசிறி வீடமைப்பு | 7,000 | 850.0 | 600.0 | 250.0 | | | 8,153 | 5,572 | 494.04 | 379.24 | - | - | 873.28 | |
| **ஆ. செவன உபஹார நிகழ்ச்சித் திட்டம்** | 6,500 | 2,210.0 | | | 2,210.0 | | 5,722 | 2,736 | - | | 1,396.98 | | 1,396.98 | |
| அதே - வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | | | | | | | 109 | | | | 14.58 | | | |
| 2 தொடர்ந்துவரும் வீடமைப்புகள் 2010 | 1,769 | 88.0 | | 88.0 | | | | 1,795 | | 83.49 | | | 83.49 | |
| 3 தயட்ட கிருள வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மொனறாகல | 1,331 | 94.0 | | | 94.0 | | 1,331 | 1,036 | | | 94.37 | | 94.37 | |
| அநுராதபுரம் | 1,138 | 246.8 | 86.8 | | 135.0 | 25.0 | 461 | 23 | 11.26 | 16.41 | - | 1.67 | 29.34 | |
| 4 ஜனசெவன உதவி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | | - | | | | | | | | | | | - | 115.0 |
| அ. செவன சரண | 300 | 30.0 | | | | 30.0 | 33 | 19 | | | | 2.52 | 2.52 | |
| ஆ. செவன தாபரிப்பு வீடமைப்பு | 3 | 1.2 | | | 1.2 | | 2 | 2 | | | 1.10 | | 1.10 | |
| இ. சகனெனி செவன | 550 | 55.0 | | | | 55.0 | 528 | 137 | | | | 34.89 | 34.89 | |
| **5 சஹஸ்ர லங்கா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்** | | - | | | | | | | | | | | - | |
| அ. முதலீட்டுக் கருத்திட்டம் | 770 | 100.0 | | | 100.0 | | 4 | | | | 11.087 | | 11.087 | |
| ஆ. மீள் தாபிப்புக் கருத்திட்டம் | 48 | 14.6 | 14.6 | | | | | | | | | | | |
| **6 சஹசவிய நிகழ்ச்சித்திட்டம்** | | - | | | | | | | | | | | - | |
| அ. வெள்ளப்பெருக்கு அனர்த்தம் | 6,484 | 669.3 | | | 669.3 | | 6,466 | 94 | | | 248.47 | | 248.47 | |
| அ. புனரமைப்பு பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் வெ | 366 | 36.6 | | | 36.6 | | 749 | 354 | | | 64.12 | | 64.12 | |
| 7 வெளிவாரி நிதியம் (தொடர்ந்துவரும்) | 442 | 15.0 | | | 15.0 | | | 385 | | | 14.313 | | 14.313 | |
| 8 தோட்ட வீடமைப்பு (தொடர்ந்துவரும்) | 1,378 | 183.0 | - | - | 183.0 | | | 390 | | | 13.64 | | 13.64 | |
| 9 செவன விசிறி (தொடர்ந்துவரும்) | 250 | 14.0 | | | | 14.0 | 3 | 224 | | | | 10.31 | 10.31 | |
| 10 ஜன கிருள (தொடர்ந்துவரும்) | 310 | 26.6 | | | | 26.6 | 39 | 270 | | | | 25.99 | 25.99 | |
| 11 ரணவிரு (தொடர்ந்துவரும்) | 80 | 2.8 | | | | 2.8 | 1 | 71 | | | | 2.87 | 2.87 | |
| 12 மீனவர் வீடமைப்பு தொடர்ந்துவரும் | 107 | 20.0 | | | 20.0 | | | 93 | | | 18.00 | | 18.00 | |
| **உப மொத்தம்** | **31,826** | **4,981.9** | **901.4** | **463.0** | **3,464.1** | **153.4** | **26,277** | **14,278** | **726.61** | **535.94** | **1,876.66** | **78.25** | **3,202.88** | **830** |
| ii. செவன பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் | 500 | | | | | | | | | | | | | |
| iii. நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம் | 3,000 | 255.0 | 255.0 | - | - | | | | 125.73 | - | - | | 125.73 | **230.0** |
| iv. உரிமை உறுதிகள் வழங்குதல் | 3,000 | - | - | - | - | | | 2,151 | | - | - | | | |
| v. கூட்டாட்சி பராமரிப்பு அலகு | - | 9.3 | 9.3 | - | - | | | | 9.30 | - | - | | 9.30 | **9.3** |
| vi. காணி நட்டஈடு வழங்குதல் | - | 50.0 | 50.0 | - | - | | | | 50.38 | - | - | | 50.38 | **50.0** |
| **உப மொத்தம்** | **6,500** | **314.3** | **314.3** | **-** | **-** | **-** | **-** | **2,151** | **185.41** | **-** | **-** | **-** | **185.41** | **289.30** |
| **மொத்தம்** | **38,326** | **5,296.2** | **1,215.7** | **463.0** | **3,464.1** | **153.4** | **26,277** | **16,429** | **912.02** | **535.9** | **1,876.66** | **78.25** | **3,388.29** | **1,119.3** |

# ஆதன முகாமைத்துவம்

ஆதன முகாமைத்துவப் பிரிவு பின்வரும் துறைகளை உள்ளடக்கியதாக 2011 ஆம் ஆண்டில் இயங்கியது.

1. ஆதன முகாமைத்துவப் பிரிவு
2. வீடு விற்பனைப் பிரிவு
3. காணிகள் பிரிவு
4. நில அளவைப் பிரிவு
5. விலை மதிப்பீட்டுப் பிரிவு

## ஆதன முகாமைத்துவப் பிரிவு

இந்த அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து வீடமைப்புத் திட்டங்களுக்கும் ஏற்புடைய முகாமைத்துவ அலுவல்கள் மாவட்ட அலுவலகங்களின் இணைப்பாக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, பின்வரும் பணிகள் 2011 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

01. நாட்டின் அனைத்து வீடமைப்புத் திட்டங்களிலுமுள்ள, பல்வேறு கால கட்டங்களிலும் அமைக்கப்பட்ட அனைத்து வீடமைப்புத் திட்டங்களினதும் பொதுப் பிரச்சினைகளுக்கு மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து ஏற்புடைய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைகளுக்கு இணங்க தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

02. அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்கள் கையுதிர்க்கப்படுகின்றபோது, இதன் பொருட்டு வீடமைப்பு அதிகார சபைச் சட்டத்தின் 8/1 ஆம் பிரிவின் பிரகாரம் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று, அதற்கிணங்க குறித்த ஆதனங்களைக் கையுதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும்.

03. குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மாடி வீடுகளை அறுதிஉரிமை அடிப்படையில் வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

04. வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வளாகங்களுக்குரிய குத்தகைப் பணத்தை அறவிடுதல்.

05. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு நகர வடக்கு மற்றும் தெற்கு அலுவலக ஆளுகைப் பிரதேசங்களில் காணிகள் மற்றும் வீடமைப்பு தொடர்பான பிரச்சினைகளின் பொருட்டு ஏற்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க தீர்வுகளை வழங்கல்.

06. மேம்படுத்தப்பட்ட நகர வீடமைப்புத் திட்டங்களின் காணி பெறுனர்களுக்கு அறுதிஉறுதிகள் வழங்குகின்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.

07. வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களுக்கும் உரிய யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்குரிய வீடமைப்புத் திட்டங்களில் உள்ள பொதுப் பிரச்சினைகளுக்கு கொள்கை ரீதியிலான தீர்வுகளை வழங்குதல்.

08. பக்கத்திலுள்ள காணித் துண்டுகளைக் கையுதிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

09. அனைத்து மாவட்டங்களுக்கும் உரிய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தல், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து நட்டஈடு செலுத்துகின்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.

## 02 வீடு விற்பனைப் பிரிவு

முன்னைய ஆண்டுகளில் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீடமைப்புத் திட்டங்களில் எஞ்சியிருந்த வீடுகளில் ஒரு வீட்டையும் ஒரு கடையையும் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் ஒரு வீட்டை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வீடுகளை விற்பனை அடிப்படைக்கு மாற்றும்போது செலுத்தப்பட்ட பணம் மற்றும் முன்னைய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட வீடுகளிலிருந்து பெறப்பட்ட பணம் உள்ளடங்கலாக ரூபா 63,805,743.00 பணத் தொகை வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

## 03. காணி கொள்ளல் விற்பனைப் பிரிவு

1. காணி கொள்ளல் மற்றும் விற்பனைப் பிரிவின் கடமைப் பொறுப்புகள்:

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான காணி கொள்ளல் நடவடிக்கைகள் / வீடமைப்பு நோக்கங்களுக்காக காணிகளை விற்பனை செய்தல் மற்றும் ஏனைய தேவைகளுக்காக காணிகளைக் குத்தகை அடிப்படையில் கையுதிர்த்தல்.

II. அத்துமீறியவர்களை ஒழுங்குமுறையாக்கல், பக்கத்திலுள்ள காணிகளை கையுதிர்த்தல்.

2. இலக்குகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்

கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தியடையாதுள்ள காணிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் வீடமைப்புக் கருத்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்ட காணிகளில் காணப்படுகின்ற வெற்றுக் காணிகள், பக்கத்திலுள்ள காணிகள் மற்றும் அத்துமீறிய காணிகளை இனங்காணும் பொருட்டு 2010 ஆம் ஆண்டினுள் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வினை இவ்வாண்டினுள் பூர்த்தி செய்து அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டமை.

3. இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளல்

மூன்று காணிகளின் கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

4. இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்தமைக்கான தடைகள்

I. 55 தனியார் காணிகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி என்ற வகையில் ரூபா 179,345,257.35 பணத் தொகை 2011.01.01 ஆம் திகதியில் செலுத்த வேண்டியிருந்ததோடு, மேலும் ரூபா 7,577,919.41 பணத் தொகையை நட்டஈடாகவும் வட்டியாகவும் ஆண்டினுள் செலுத்தும்படி பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் ரூபா 27,852,200.52 நட்டஈடாகவும் வட்டியாகவும் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை நட்டஈடு மற்றும் வட்டி அறிவிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய பணத் தொகையில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காகவே இப்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளதோடு, முழுமையான நட்டஈடு அல்லது வட்டித் தொகையை ஒரே தடவையில் செலுத்துவதற்கு வருடாந்த நிதி ஏற்பாடு போதியதாக இருக்கவில்லை.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 44 காணிகளின் பொருட்டு ரூபா 55,075,741.21 பணத் தொகை செலுத்த வேண்டியிருந்ததோடு, அதில் 23 காணிகளுக்காக அறிவிக்கப்பட்டிருந்த முழுப் பெறுமதியையும் ஆண்டினுள் செலுத்துவதற்கு ரூபா 21,474,674.00 பணத் தொகை செலவிடப்பட்டதோடு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு மேற்படி 23 காணிகளினதும் ஒப்படைப்பு தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

5. ஆண்டினுள் பெறப்பட்ட வெற்றிகள் :

கொள்ளப்பட்ட காணிகளின் எண்ணிக்கை

| அரச | தனியார் | காணி சீர்திருத்த ஆணைக்குழு | ஏனைய நிறுவனங்கள் |
|---|---|---|---|
| 01 | - | - | 02 |

காணி கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட பணத் தொகை

| அரச | தனியார் | காணி சீர்திருத்த ஆணைக்குழு | ஏனைய நிறுவனங்கள |
|---|---|---|---|
| 01 | 27,392,200.52 | 21,474,674.00 | 460,000.00 |

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 23 காணிகளுக்கு முழுமையாகச் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதோடு, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒரு காணிக்கு கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. இக் காணிகளை சட்ட ரீதியாக ஒப்படைக்கின்ற பணிகள் மேற்படி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீடமைப்புத் திட்டங்களில் காணப்படுகின்ற வெற்றுக் காணிகள் மற்றும் அத்துமீறி அனுபவிக்கப்பட்டு வருகின்ற காணிகள் தொடர்பான ஆய்வொன்று நடத்தப்பட்டு இனங்காணப்பட்டுள்ள காணிகளை கையுதிர்ப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 04. நில அளவைப் பிரிவு

வீதி விஸ்தரிப்பு போன்ற வீடமைப்புத் திட்டங்களுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் நில அளவைப் பணிகளும் நில அளவைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டில், கூட்டாட்சி வரைபடங்களைத் தயாரித்தல், சாதாரண வரைபடங்களைத் தயாரித்தல், வரைபடங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை வழங்கல், வீடமைப்புத் திட்டங்களிலுள்ள வீடு பெறுனர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயித்துக் கொடுக்கும் பொருட்டு அவர்களிடமிருந்து பணம் அறவிடுதல் ஆகியன மூலம் ரூபா 183,292.00 பணத் தொகை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வருமானமாக ஈட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்களின் வேண்டுகோளின் பேரில் வேண்டப்படுகின்ற வரைபடங்களை வழங்குதல், அவர்கள் நில அளவைப் பணிகள் தொடர்பில் விசாரிக்கின்றபோது அவற்றுக்கு பதிலளித்தல், தலைமை அலுவலகத்தின் ஏனைய பிரிவுகளால் காலத்திற்குக் காலம் வேண்டப்படுகின்ற தேவையான வரைபடங்களை வழங்குதல், அவர்களது கடிதங்களுக்கு பதிலளித்தல் மற்றும் தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்தல். மேலும் தற்போது தலைமை அலுவலகத்தில் நில அளவையாளர்கள் பணிபுரியாதமையால் நில அளவையின் பொருட்டு உரிமம்பெற்ற நில அளவையாளர்களிடமிருந்து மாவட்ட முகாமையாளர்களால் விலை கோரல்கள் பெறப்பட்ட பின்னர் அங்கீகாரத்திற்காக அவை அனுப்பப்படுகின்றபோது பிரதி பொதுமுகாமையாளர் (ஆதன முகாமைத்துவம் மற்றும் விற்பனை) மற்றும் பொதுமுகாமையாளரிடம் ஏற்புடைய அங்கீகாரத்தைப் பெற்று அவற்றை மாவட்ட முகாமையாளர்களுக்கு அனுப்புதல் மற்றும் அன்றாடம் மேலெழுகின்ற நில அளவைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.

## 05 விலை மதிப்பீட்டுப் பிரிவு

01. காணித் தொழிற்பாட்டுக் கடமைகளுக்காக களப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் களுத்துறை, கம்பஹா, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு ஏற்புடையதான 108 காணித்துண்டுகள் பற்றிய தகவல்களை அறிக்கையிடல்.
02. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெள்ளன்கொல்ல மற்றும் எல்விட்டிகல வீடமைபுத் திட்டங்களின் 27 வீடுகளுக்கான விலை மதிப்பீட்டு அறிக்கைளைப் பெற்றுக்கொடுத்தல்.
03. மருதானை நாலாந்தா பிளேஸ் மற்றும் தியவன்னா கார்டினில் 22 ஆதனங்களுக்கான மீள்தாபிக்கப்பட்ட விலை மதிப்பீடுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
04. பல்வேறான 15 ஆதனங்களுக்கான தற்போதைய விலை மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
05. நான்கு ஆதனங்களுக்கான பெயரளவு விலை மதிப்பீட்டினைப் பெற்றுக்கொடுத்தல்.
06. குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்களில் 244 ஆதனங்களுக்கான விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொடுத்தல்.
07. ஆதனங்களின் ஒழுங்குகுமுறையாக்கல் மற்றும் குடியிருப்புத் தரப்பினர்களின் 54 ஆதனங்களுக்கு விலை மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.
08. இரண்டு ஆதனங்களுக்கான உரித்துரிமையை விலை மதிப்பிடல்.
09. 10 கடை அறைகள் மற்றும் 02 வீடுகளுக்கு மீள் விலை மதிப்பிடல்.
10. பொது ஆதனங்கள், தொலைபேசிக் கோபுரங்கள் மற்றும் கராஜ் ஆகியவறறுக்கான விலை மதிப்பீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.
11. தேசிய வீடமைப்பு ஆணையாளரின் 31 ஆதனங்களுக்கு வீட்டு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் பிரகாரம் விலை மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

### 2011 ஆம் ஆண்டினுள் ஆதன முகாமைத்துவப் பிரிவு பெற்றுள்ள முன்னேற்றம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பழைய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன.

i. காணி கையுதிர்ப்பு - 2011.˙.ஆ.முகா.˙.01
ii. மூன்றாவது தரப்பினருக்கான காணி கையுதிர்ப்பு - 2011.˙.ஆ.முகா.˙.02
iii. காணி குத்தகைக்கு விடுதல் - 2011.˙.ஆ.முகா.˙.03
iv. வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் கையுதிர்ப்பு - 2011.˙.ஆ.முகா.˙.04
v. மூனறாவது தரப்பினருக்கான காணி கையுதிர்ப்பு - 2011.˙.ஆ.முகா.˙.05
vi. விசேடமான காரணங்களின் மீது வீடுகளை குத்தகைக்கு விடுதல் - 2011.˙.ஆ.முகா.˙.06
vii. மாடி வீடுகளை கையுதிர்த்தல் - 2011.˙.ஆ.முகா.˙.07
viii. மாடி வீடுகளை மூன்றாவது தரப்பினருக்கு கையுதிர்த்தல் - 2011.˙.ஆ.முகா.˙.08
ix. மாடி வீடுகளை குத்தகைக்கு விடுதல் - 2011.˙.ஆ.முகா.˙.09
x. கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை குத்தகைக்கு விடுதல் - 2011.˙.ஆ.முகா.˙.10
xi. பொது ஆதனங்களை கையுதிர்த்தல் - 2011.˙.ஆ.முகா.˙.11

பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புப் பிரிவு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாக 2011 ஆம் ஆண்டில் குடியிருப்பு அபிவிருத்தியின் பொருட்டு பங்களிப்புச் செய்தது.

1. பொறியியல் பிரிவு
2. கட்டடக் கலைப் பிரிவு
3. தொகை மதிப்புப் பிரிவு
4. திட்டமிடல் பிரிவு
5. மின்சாரப் பிரிவு
6. பராமரிப்புப் பிரிவு

பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அனைத்து மக்கள் பிரிவினரினதும் வீடமைப்பு நோக்கங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இயலுமாயிருந்தது.

## மாடி வீடுகளின் மறுசீரமைப்பு (நகமு புரவர)

1979 ஆம் ஆண்டு முதல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினாலும் அதற்கு முன்னர் ஏனைய அரச நிறுவனங்களாலும் நிர்மாணிக்கப்பட்ட மாடி வீடுகளின் குடியிருப்பாளர்களிடமிருந்து கிடைக்கின்ற வாடகையுடன் ஒப்பிடுகின்றபோது, மேற்படி மாடி வீடுகளின் பராமரிப்புச் செலவு மிக அதிகமாயுள்ளதால், உரிய பராமரிப்பு மேற்கொள்ளப்படாதிருந்தமையால் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இதில் பல வீடுகள் குடியிருப்பாளர்களால் கொள்வனவு செய்யப்படாமையின் காரணமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்து அந்த வீடுகளின் பராமரிப்பை அக் கூட்டுத்தாபனங்களுக்கு ஒப்படைப்பதற்கு அதிகார சபைக்கு இயலாமலுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாடி வீடுகளை நவீனமயப்படுத்தி மீள்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மேற்படி கட்டடங்களில் உள்ள அடிப்படைத் திருத்த வேலைகளையும் சேவைகளையும் நிறைவு செய்து தருவதாயிருப்பின், சிறு பராமரிப்புப் பணிகளை வீடுபெறுனர்கள் உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவிள்ளனர்.

இவ்விடயங்களைக் கவனத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நகமு புரவர நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதானமான நோக்கமாக, பழைய வீடமைப்புத்திட்டங்கள் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைத்து முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்து அதனூடாக வீடு பெறுநர்களுக்கு தமது வீடுகளின் பராமரிப்பை ஒப்படைத்தலும் பொது உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பை ஏற்புடைய உள்;ராட்சி நிறுவனத்திற்கு ஒப்படைத்தலுமே காணப்பட்டது.

மாடி வீடுகளின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கெத்தாராம, மாளிகாவத்தை மற்றும் சொய்ஸாபுர வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளின் திருத்தப் பணிகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வீடுகளில் குடியிருப்பவர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றபோதே திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு நேரிட்டமையால் அதனை ஓரளவு மந்தகதியில் மேற்கொள்வதற்கு நேரிட்டது.

கெத்தாராம வீடமைப்புத் திட்டத்தின் திருத்தப் பணிகள் 2011 சனவரி மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, அது ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்டமையால், இதன் மூலம் 60 க்கு மேற்பட்ட வீடுபெறுனர்களுக்கு நலன்களை பெறுவதற்கு இயலுமாயிருந்தது.

மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தின் மீள்தாபிப்பு நடவடிக்கைகள் ரூபா 160 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, அங்கு காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகள் மற்றும் கடந்த 40 ஆண்டுகளினுள் உரிய விதத்தில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் காரணமாக அதன் திருத்தப்பணிகளை மேற்கொள்கின்றபோது பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. மேற்படி மீள்தாபிப்புப் பணிகளின் காரணமாக இவ்வீடமைப்புத் திட்டங்களில் குடியேறியுள்ள 1512 குடியிருப்பாளர்களுக்கு இதன் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயிருக்கும். சொய்ஸாபுர வீடமைப்புத் திட்டத்தின் திருத்தப் பணிகள் இவ்வாண்டின் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி ரூபா 49 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டதோடு இந்த இரண்டு வீடமைப்புத் திட்டங்களினதும் மீள்தாபிப்பு நடவடிக்கைகளை 2012 ஆம் ஆண்டினுள் மேற்கொண்டு செல்வதற்கு உத்தேசமாயுள்ளது.

## கொழும்பை அண்டியதான வீடமைப்புத் திட்டங்களின் அவசர திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

கொழும்பு நகர்சார்ந்த பிரதேசங்களில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அநேகமான வீடமைப்புத் திட்டங்களுக்கு சேவை வழங்குதல் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினாலும் கொழும்பு மாநகர சபையினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

# பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புகள்

வீடுகள் விற்பனை செய்யப்பட்டு அல்லது வாடகை அடிப்படையில் உள்ள போதிலும் அவ்வீடமைப்பு முறைமையினுள் நீர்க் குழாய் முறைமைகள், சாக்கடை முறைமைகள் மற்றும் மனுக் குழிகள், பம்பி நிலையங்களின் பராமரிப்புப் பணிகளும் இன்று வரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. நீர் வழங்கல் முறைமை தொடர்பில் அடிக்கடி முறைப்பாடுகள் கிடைப்பதன் காரணமாக, அவசர திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளில் நேரடியாகத் தொடர்புகொள்ளக் கூடியவாறு திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு அலகொன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் தாபிக்கப்பட்டு நாளின் 24 மணித்தியாலமும் இயங்கி வருகின்றது. மேற்படி அலகின் மூலம் மாதத்திற்கு சராசரியாக 100க்கு மேற்பட்ட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்கென ரூபா 1.30 மில்லியன் தொகை (அண்ணளவாக) செலவிடப்படுகின்றது. மேலும், சாக்கடை முறைமை மற்றும் சாக்கடைப் பம்பி நிலையம் மற்றும் கழிவகற்றல் ஒப்பந்தகாரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு 2011 ஆம் ஆண்டினுள் ரூபா 4.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

### மாவட்ட அலுவலகங்களுக்கான கட்டடங்களை நிர்மாணித்தல்

யுத்த நிலைமை காணப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாவட்ட அலுவலகங்கள் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பேணிவரப்பட்டமையால், நீண்ட காலமாக இவற்றிற்கு வாடகை செலுத்துகின்றபோது பெரும் பிரச்சினையுடன் கூடிய நிலைமைகளும் அலுவலகங்களினுள் குறைந்த இடவசதியின் காரணமாக இவற்றில் சேவையாற்றிய பணியாட்டொகுதியினருக்கு பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்கவும் நேரிட்டது. ஆதலால் முதலாவது கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கென அலுவலகக் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் 2010 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு 2011 பெப்ரவரி 05 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

### சஹஸ்ரலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

சஹஸ்ரலங்கா வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது நடுத்தர வகுப்பு வருமானம் பெறுகின்றவர்களுக்காக அவர்களது வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தாபிக்கப்பட்ட முறையியல் ரீதியிலானதொரு நிகழ்ச்சித்திட்டமாகும். அரச, தனியார் இணைந்த முறை மற்றும் முன்கூட்டி விற்பனை செய்யும் அடிப்படையில் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எல்விட்டிகல வீடமைப்புத் திட்டத்தில் ரூபா 32 மில்லியன் பெறுமதியிலான 04 வீட்டுக் கூறுகளைக் கட்டியெழுப்பும் பணி 2011 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

குருணாகல் வெலன்கொல்ல தோட்டத்தில் 23 வீட்டுக் கூறுகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு அடிக்கல் நாட்டுதல் 2011 நவெம்பர் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதோடு அதன் மதிப்பிடப்பட்ட நிதிசார் பெறுமதி ரூபா 180 மில்லியனாகும்.

லுவிசாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் 05 வீட்டுக் கூறுகளைக் கட்டியெழுப்பும் பணி 2011 திசெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு அதன் மதிப்பீட்டுத் தொகை ரூபா 4.7 மில்லியனாகும்.

சுலோஹித்தபுர வீடமைப்புக் கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 23 மில்லியன் பெறுமதியிலான 16 வீட்டுக் கூறுகளின் மீள்தாபிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் அவசர திருத்தங்கள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் 01,06,07,08 மற்றும் 09 ஆம் மாடிகளில் உள்ள அலுவலக வளாகங்களின் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ளல் இவ்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென மதிப்பிடப்பட்ட பணத் தொகை ரூபா 23 மில்லியனாகும். நில மாடியிலான திருத்த வேலைகள் இன்னமுமே நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர மின்சாரப் பிரிவு மற்றும் பராமரிப்புப் பிரிவு அத்தியாவசியமான சேவைகளை வழங்குகின்றது.

### ஏனைய செயற்பாடுகள்

கொழும்பை அண்டியதாயுள்ள பிரதீபா மண்டபங்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பிரதானமான வருமானம் ஈட்டித்தரும் வழியொன்றாகும். இதற்கமைய, மாளிகாவத்தை சிறிய பிரதீபா மண்டபத்தின் அவசர திருத்த வேலைகள் ரூபா 1.5 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் 2011 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

2010 திசெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கதிர்காமம் சுற்றுலா பங்களாவின் நவீனமயமாக்கல் பணிகள் ரூபா 3.5 மில்லியன் செலவில் 2011 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது.

அனுராதபுரம் சுற்றுலா பங்களாவின் அவசர திருத்த வேலைகள் ரூபா 7.5 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் 2011 ஒக்றோபர் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு வேலைகளுககான மதிப்பீடுகளை பரிசோதித்து அங்கீகரித்தலும் பொறியியல் சேவைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

# மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாயுள்ளது.

1. மனித வளப் பிரிவு
2. நிர்வாகப் பிரிவு
3. ஒழுக்காற்றுப் பிரிவு
4. போக்குவரத்துப் பிரிவு
5. வழங்கல் பிரிவு
6. பயிற்சிப் பிரிவு
7. பதவிநிலையினர் வீடமைப்புப் பிரிவு
8. பாதுகாப்புப் பிரிவு

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அமைப்பு

தலைமை அலுவலகத்தின் பணியாட்டொகுதியானது, தலைவர்/ உப தலைவர்/ பொதுமுகாமையாளர்/ செயற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் 09 பிரதி பொதுமுகாமையாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர 25 மாவட்ட அலுவலகங்களும், 02 கொழும்பு நகர அலுவலகங்களும் மற்றும் கல்முனை உப அலுவலகமும் தாபிக்கப்பட்டுள்ளன.

02. 2011 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதி

| | | |
|---|---|---|
| I. | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் | = 114 |
| II. | மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | = 143 |
| III. | இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | = 913 |
| IV. | முதனிலை மட்டம் | = 205 |
| | மொத்தம் | = 1375 |

03. 2011.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட பணியாட்டொகுதியினர் பற்றிய விபரங்கள்

| | | |
|---|---|---|
| I. | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் | = 67 |
| II. | மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | = 119 |
| III. | இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | = 1411 |
| IV. | முதனிலை மட்டம் | = 276 |
| | மொத்தம் | = 1873 |

04. 2011 ஆம் ஆண்டில் பின்வருமாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது

I. சேவையிலிருந்து ஓய்வுபெற்று மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

நிறைவேற்று - 01
நிறைவேற்றல்லாத - 03

II. நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

நாளாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் - 29

III. நிரந்தர சேவைக்கு ஆட்சேர்த்தல் - இல்லை

05. பதவி உயர்வுகள்

2011 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் | = 58 |
| 2) | மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | = 25 |
| 3) | இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | = 368 |
| 4) | முதனிலை மட்டம் | = 90 |
| | மொத்தம் | = 541 |

06. ஓய்வுபெறச் செய்தல்

2011 ஆம் ஆண்டினுள் ஓய்வு பெறச் செய்யப்பட்ட மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவை முடிவுறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் | = 01 |
| 2) | மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | = 11 |
| 3) | இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | = 82 |
| 4) | முதனிலை மட்டம் | = 18 |
| | மொத்தம் | = 112 |

07. 2011 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்துள்ள பணியாட்டொகுதியினர் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | சிரேʼட முகாமைத்துவ மட்டம் | = - |
| 2) | மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | = 08 |
| 3) | இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | = 20 |
| 4) | முதனிலை மட்டம் | = - |
| | மொத்தம் | = 28 |

08. தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சியளித்தல். 2011 ஆம் ஆண்டினுள் பின்வருமாறு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

| | 2010 இல் ஆட்சேர்க்கப்பட்டு 2011 இல் பூர்த்தியடைந்த | 2011 இல் ஆட்சேர்க்கப்பட்ட |
|---|---|---|
| 1. சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர்/ செயலாளர் | 02 | 02 |
| 2. கனணிப் பயிற்சி | 12 | 11 |
| 3. மின் தொழில்நுட்பம் | 03 | - |
| 4. கணக்கீட்டு / கணக்கு எழுதுவினைஞர் | 02 | 02 |
| 5. தொகை மதிப்பீட்டாளர் | 02 | 03 |
| 6. வரைபடக் கலைஞர்/ கட்டடக் கலைஞர்/ | - | 06 |
| 7. பொறியியல் வரைபடக் கலை | - | - |
| 8. தகவல் தொழில்நுட்பம் | 02 | 03 |
| 9. எழுதுவினைஞர் | - | 01 |
| 10. முகாமைத்துவப் பயிற்சி (பட்டப் பயிலுனர்கள்) | - | 07 |
| மொத்தம் | 23 | 35 |

09. இவ்வதிகார சபையில் சேவையில் ஈடுபட்டிருந்தபோது 2011 இல் மரணமடைந்தவர்கள் பின்வருமாறு

1. திருமதி எம்.இஸட்.இஸட். நிசாரா - உதவி முகாமையாளர் - VI
2. திரு. பி. விஜேவர்தன - பாதுகாப்பு உத்தியோகத்தர் - VII II "அ" தரம்
3. திரு. டபிள்யு.ஜீ. சாந்த - மோட்டார் தொழில்நுட்பவியலாளர் - VIII தரம்
4. திரு. எஸ்.ஏ. சிறிசேன - தொழில்நுட்ப உத்தியோகத்தர் - VII "அ" தரம்

## நிர்வாகப் பிரிவு

2011 ஆம் ஆண்டில் நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு.

1. 2011 ஆம் ஆண்டுக்காக ஊழியர்களுக்கு பணிக்கொடையாக ரூபா 1000/- மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 2000/- செலுத்தப்பட்டது. மருத்துவ நலவுரிமைகளும் பொதுவான விதத்தில் செலுத்தப்பட்டுள்ளன.
2. இடர் கடன், உணவுப் படி, லீவு நாட்களுக்கான கொடுப்பனவு, வாகன வாடகைக் கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ விடுதிக் கொடுப்பனவு மற்றும் வாடகைக் கொடுப்பனவு வழமையானவாறு செலுத்தப்பட்டுள்ளது.

## பதவிநிலையினர் வீடமைப்புக் கடன்கள்

2011 ஆம் ஆண்டுக்காக ரூபா 84.250 மில்லியன் பதவிநிலையினர் வீடமைப்புக் கடனுக்கான நிதி ஏற்பாடாகக் கிடைத்தது. தலைமை அலுவலகத்தின் பொருட்டு ரூபா 27.000 மில்லியனும் மாவட்ட அலுவலகங்களுக்கு ரூபா 57.250 மில்லியனும் என்றவாறாகும்.

02. மேற்படி நிதி ஏற்பாடுகளிலிருந்து பின்வருமாறு வீடமைப்புக் கடன்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

| தரம் | தலைமை அலுவலகம் ரூபா | மாவட்ட அலுவலகம் ரூபா | செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|
| 1 - VI | 3,797,000 | 900,000 | 4,697,000 | |
| VII – VII ஏ | 1,347,330 | 3,769,100 | 5,116,430 | |
| VIII –IX | 2,582,600 | 8,110,950 | 10,693,550 | X |
| | 1,400,000 | 200,000 | 1,600,000 | |
| | 9,126,930 | 12,980,050 | 22,106,980 | |

03. அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு, செலவிடப்பட்ட தொகை மற்றும் எஞ்சிய தொகை பின்வருமாறு.

| அலுவலகம் | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா | செலவிடப்பட்ட தொகை ரூபா | எஞ்சிய தொகை ரூபா |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 27,000,000 | 9,126,930 | 17,873,070 |
| மாவட்ட அலுவலகம | 57,250,000 | 12,980,050 | 44,269,950 |
| | 84,250,000 | 22,106,980 | 62,143,020 |

| | |
|---|---|
| 2011 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்தில் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை | - 23 |
| 2011 ஆம் ஆண்டில் மாவட்ட அலுவலகத்தில் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | - 34 |
| மொத்தம் | - 57 |

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை முன்னிட்டு மனித வளங்களை நெறிப்படுத்துகின்றபோது எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தையை அதே விதத்தில் பேணிவருவதற்கு இயலாமற்போகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒழுக்கம் பேணும் பணியாட்டொகுதியொன்றை உருவாக்கும் பொருட்டு பணியாட்டொகுதியினருக்கு விழிப்புணர்வூட்டல் ஆகியன ஒழுக்காற்று நடவடிக்கைகள் பிரிவின் அடிப்படைக் கடமைப் பொறுப்பாகும்.

02. இங்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுக்காற்றுப் பிரமாணங்கள், தாபனக் கோவையின் 11 வது தொகுதி, நிர்வாக முறைக் கோவை, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் அதிகாரசபையினுள் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் அளவுகோல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

03. 2011 ஆம் ஆண்டில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பிரிவின் கடமைப் பொறுப்புகள் மற்றும் இலக்கிடப்பட்ட கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு.

- உயர்ந்த விதத்திலான நடத்தையைக் கொண்ட தத்தமது கடமைகள் மற்றும் பொறுப்புகளை இனங்கண்டு ஒழுக்கம் பேணுகின்றவாறு செயலாற்றுகின்ற ஊழியர்களை உருவாக்குவதற்கு உதவியளித்தல்.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு அல்லது பாதுகாப்புப் பிரிவின் மூலம் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விதப்புரைகளுக்கு இணங்க ஒழுக்கத்துக்கு முரணான செயல்களில் (கடுமையான மற்றும் சிறிய தவறான செயல்கள்) ஈடுபட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு.̇.ஊழியர்களுக்கு எதிராக குற்றப் பத்திரங்களை வழங்கல், விடுவிப்புக்கான காரணத்தை விசாரித்து கடிதங்களை வழங்கி ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- கடும் தவறுகள் தொடர்பில் குற்றப் பத்திரிகைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு.̇. ஊழியர்களுக்கு எதிராக முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கான விசாரணைச் சபைகளை நியமிப்பதற்கு விதப்புரை செய்தல் மற்றும் முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல.

- முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணையின் இறுதியில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தரால் வழங்கப்படுகின்ற அறிக்கையை ஆராய்ந்து முகாமைத்துவத்திற்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இறுதித் தீர்மானத்தின் பிரகாரம் ஒழுக்காற்றுக் கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- சிறு தவறுகள் தொடர்பில் முறைசார்ந்த விடுவிப்புக்கான காரணங்கள் விசாரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் விதப்புரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் மீது ஒழுக்காற்றுக் கட்டளைகளை வழங்குதல்.

- இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்கள்.̇.ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக ஊழியர் ஒழுக்காற்று மேன்முறையீட்டுக் குழு, தொழில் நியாய சபை, தொழில் திணைக்களம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை வழங்குதல்.

- இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்கள்.̇.ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று அறிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் அது தொடர்பான தகவல்களை முகாமைத்துவத்தின் விசாரிப்புகளுக்கு ஏற்ப சமர்ப்பித்தல்.

- மனித வள முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் பதவிநிலையினர் வீடமைப்புக் கடன் ஆகிய பிரிவுகளிலிருந்தான விசாரிப்புகளுக்கு ஏற்ப இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர்கள்.̇. ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்கல்.

- ஒழுக்காற்று விசாரணைச் சபையின் அங்கத்தவர்களுக்கு பயணச் செலவுகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- ஒழுக்காற்று நடவடிக்கை முகாமைத்துவம் தொடர்பில் பணியாட்டொகுதியினருக்கு விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை பற்றிய செயலமர்வுகளை நடத்துதல்.

04. இதற்கிணங்க 2011 ஆம் ஆண்டினுள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பிலான பொழிப்பு அறிக்கை பின்வருமாறு.

# ஒழுக்காற்று நடவடிக்கைகள்

## பெரும் தவறான செயல்கள

| தொடர் இல. | விபரம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மொத்த அறிக்கையிடல் | | |
| | 1.1 2011.01.01 திகதியில் அறிக்கையிடப்பட்டவை | 38 | 44 |
| | 1.2 2011 ஆம் ஆண்டினுள் அறிக்கையிடப்பட்டவை | 06 | |
| 02 | 2011.01.01 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | | |
| | 1.1 2011 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த முறைசார்ந்த ஒழுங்காற்று நடவடிக்கைகள் | 09 | 17 |
| | 1.2 2011.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | 08 | |
| 03 | 2011.01.01 திகதியில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தோர் எண்ணிக்கை | | 17 |
| 04 | 2011 ஆம் ஆண்டினுள் வேலை இடைநிறுத்தப்பட்டோர் எண்ணிக்கை | | 01 |
| 05 | 2010 ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்ட முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | | |
| | 1.1 2011 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த முறைசார்ந்த ஒழுங்காற்று நடவடிக்கைகள் | 02 | 07 |
| | 1.2 2011.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் | 05 | |
| 06 | 2011 ஆம் ஆண்டினுள் ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | | 10 |
| 07 | 2011 ஆம் ஆண்டினுள் சேவை நீக்கம் செய்யப்பட்டோர் | | இல்லை |
| 08 | முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளின்றி தண்டனைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | | 06 |
| 09 | 2011 ஆம் ஆண்டினுள் விடுவிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் / ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து விடுதலை பெறுதலின் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட எண்ணிக்கை | | 09 |
| 10 | 2011 ஆம் ஆண்டினுள் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட எண்ணிக்கை | | 05 |
| 11 | 2011.12.31 ஆம் திகதியில் முடிவடையாதிருந்த மொத்த ஒழுக்காற்று விடயங்களின் எண்ணிக்கை | | 19 |

## சிறு தவறான நடத்தைகள்

| தொடர் இல. | விபரம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2011.01.01 ஆம் திகதியளவில் முடிவடையாதிருந்த எண்ணிக்கை | | |
| | 1.1 2011 ஆம் ஆண்டினுள் முடிவடைந்த எண்ணிக்கை | 03 | 03 |
| 02 | 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எண்ணிக்கை | | |
| | 1.1 முடிவடைந்த எண்ணிக்கை | 07 | 12 |
| | 1.2 முடிவடையாத எண்ணிக்கை | 05 | |
| 03 | தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டு ஒழுக்காற்று விடயங்கள் முடிவுறுத்தப்படல் | | 02 |
| 04 | விடுவிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடயங்களை ஏற்றுக்கொண்டு ஒழுக்காற்று விடயங்கள் முடிவுறுத்தப்படல் | | 05 |
| 05 | எச்சரிக்கை ∴ கடுமையாக எச்சரிக்கை செய்தல் | | 03 |

## வகுக்கப்பட்ட இலக்குகள்

01. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்புப் பிரிவு என்ற வகையில் அதிகார சபைக்குச் சொந்தமான அசையும்/அசையாச் சொத்துக்கள் மற்றும் மனித வளங்களைப் பாதுகாத்தல், நிறுவனத்தின் நற்பெயரையும் ஊழியர்களின் ஒழுக்கத்தையும் பாதுகாத்தலின் பொருட்டு முழுப் பலத்தையும் முறையியல்களையும் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

02. 2010 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியாகின்றபோது இலங்கையினுள் நிலவிய பயங்கரவாதச் செயற்பாடுகள் முடிவடைந்திருந்த போதிலும், நிறுவன ரீதியில் பாதுகாப்புச் சேவைகளை ஆரம்பத்தில் இருந்த நிலைமையிலேயே பேணிவருவதற்கு நேரிட்டது.

03. 2010 சனவரி மாதமளவில் பாதுகாப்புப் பணியாட்டொகுதியின் ஊழியர் எண்ணிக்கை தலைமை அலுவலகம்.'. மாவட்ட அலுவலகங்கள் உள்ளிட்டதாக 164 ஆக இருந்ததோடு, தற்போது 57 வயது பூர்த்தியடைந்தமையினால் ஓய்வு பெறச் செய்யப்பட்டமை மற்றும் இறந்தமையின் காரணமாக 138 வரை குறைவடைந்துள்ளது. இவ்வாறான நிலைமையின் கீழ் கூட பாதுகாப்புச் சேவைகளை தொடர்ந்து பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

04. தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற ஒருசில சேவை நிலையங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்வேறான பாதுகாப்பு முறைகளை பயன்படுத்தி பாதுகாப்பை உறுதி செய்தனர். இவ்வாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்ட சேவை நிலையங்கள் வருமாறு.

- I. ஜல்தர அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம்
- II. மாளிகாவத்தை பெரிய / சிறிய பிரதீபா மண்டபம்
- III. முகத்துவாரம் / குணசிங்கபுர பிரதீபா மண்டபம்
- IV. நாராஹேன்பிட்ட 117 ஆம் தோட்ட வீடமைப்புத் திட்டம்
- V. சொய்சாபுர வலய அலுவலகம்
- VI. இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணி

## இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்

01. தலைமை அலுவலகம் உள்ளிட்ட வீடமைப்புச் செயலகத்தில் அமைந்துள்ள அலுவலகங்களுக்கு வருகை தருகின்ற அனைத்து வாகனங்கள், நபர்கள் மற்றும் பயணப் பொதிகளை பரிசோதித்தல்.

02. பாதுகாப்புப் பிரிவின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பில் பாதுகாப்பு ஆளணியினரை விழிப்புணர்வூட்டும் பொருட்டு அறிவுரை வகுப்புகளை நடத்தல் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து சேவை நிலையங்களுக்கும் தேவையான கடமைசார்ந்த அறிவுரைகளை எழுத்து மூலம் வழங்குதல் மற்றும் அத்தகைய அறிவுரைகள் தொடர்பில் பிரிவுத் தலைவர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களை விழிப்புணர்வூட்டல்.

03. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுத்தல் மற்றும் மோசடிச் செயல்கள் மற்றும் நட்டமேற்படுத்துகின்ற நோக்கத்துடன் நடைபெறுகின்ற செயல்கள் தொடர்பாகக் கண்டறிந்து அறிக்கையிடல் மற்றும் ஒழுக்கத்தைப் பேணிவருவதற்கு உதவியளித்தல்.

04. ஊழியர்கள் கடமைக்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதல் தொடர்பான பதிவுகளை பேணிவருதல் மற்றும் அத்தகைய கருவிகளின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுத்தல்.

05. உயர் பாதுகாப்பு வலயங்களில் அமைந்துள்ள நிறுவனங்கள், கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தின் தலைமையில் பேணிவரப்படுகின்ற பாதுகாப்புக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல் மற்றும் அதில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் மற்றும் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு அமைய செயலாற்றுதல், அது தொடர்பில் பாதுகாப்பு ஆளணியினரை விழிப்புணர்வூட்டல்.

06. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு நிர்வாக மேலாண்மையின் தீர்மானத்தின் பேரில் சேவை நிலையங்களுக்கு பாதுகாப்பு ஆளணியினரை ஈடுபடுத்துவதைக் குறைத்தல், மேலதிக நேர கடமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

07. வீடமைப்புச் செயலகக் கட்டடத்தின் பாதுகாப்பின் பொருட்டு துப்பாகிகளுடன் கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தல்.

08. அவசர தீ விபத்துகளுக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான அதிசக்திவாய்ந்த தீயணைப்பு நீர்க் குழாய் முறைமையொன்றின் தேவையை மீண்டும், மீண்டும் வலியுறுத்தலும் அதனைச் செயற்படுத்துவதற்கான வேண்டுகோள்களைச் சமர்ப்பித்தலும்.

09. நீதிமன்றக் கட்டளைகளைப் பெற்றுள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுகின்ற நடவடிக்கைகளின் பொருட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்தல் மற்றும் வெற்று உரிமை பொறுப்பேற்கப்பட்ட மேற்படி வீடுகளில் மீண்டும் பிரவேசிப்பதைத் தடுக்கும் பொருட்டு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல் (ஹிம்புட்டு உயன - சொய்ஸாபுர வீடமைப்புத் திட்டங்களில் இந் நடவடிக்கைகளை விசேட சந்தர்ப்பங்களாகக் கருதி நிறைவேற்றுவதற்கு நேரிட்டது).

# பாதுகாப்புச் சேவை

## போக்குவரத்துப் பிரிவு

வகுக்கப்பட்ட இலக்குகள்

01. போக்குவரத்து ஒதுக்கத்தின் பேருந்து.்.வான் வண்டிகளை நலனோம்புகை அடிப்படையில் வழங்குவதற்காக (உத்தியோகத்தர் போக்குவரத்து உட்பட) ரூபா 13,02,480/- தொகை மதிப்பிடப்பட்டது.

02. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் திருத்தும் பொருட்டு ரூபா 5,000,000/- தொகை மதிப்பிடப்பட்டது.

03. வாகனக் காப்புறுதிக் கட்டணமாக ரூபா 2,500,000/- தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

04. போக்குவரத்து ஒதுக்கத்தின் அனைத்து வாகனங்களுக்கான எரிபொருளின் பொருட்டு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 7,000,000/- ஆகும்.

05. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து வாகனங்களுக்கும் வருமான உரிமப் பத்திரத்திற்காக ரூபா 500,000/- மதிப்பிடப்பட்டது.

இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்

01. போக்குவரத்து ஒதுக்கத்தின் பேருந்து.்.வான் வண்டிகள் நலனோம்புகை அடிப்படையில் வழங்கப்பட்டதன் மூலமும் உத்தியோகத்தர் போக்குவரத்தின் மூலமும் பெறப்பட்ட வருமானம் ரூபா 836,267/- ஆகும். உத்யோகத்தர் போக்குவரத்து பேருந்து வண்டிகளில் பயணம் செய்கின்ற உத்தியோகத்தர்கள் குறைவைடைந்ததன் காரணமாக, பெற்ற வருமானம் குறைவடைந்துள்ளது.

02 அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களினதும் திருத்தம் மற்றும் பராமரிப்பின் பொருட்டு ரூபா 4,831,421.்.- தொகை செலவிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட தொகையை விடக் குறைவடைந்துள்ளது.

03. வாகனக் காப்புறுதிக் கட்டணமாக ரூபா 1,715,925/- தொகை செலுத்தப்பட்டுள்ளதால், மதிப்பிடப்பட்ட தொகையை விடக் குறைந்த பெறுமானத்தை இது கொண்டுள்ளது.

04. போக்குவரத்து ஒதுக்கத்தின் அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருளின் பொருட்டு ரூபா 7,188,860/- தொகை செலவிடப்பட்டுள்ளது. இத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகரித்துள்ளது.

05. அதிகார சபையின் அனைத்து வாகனங்களுக்கும் வருமான உரிமப் பத்திரத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 420,000/- ஆகும்.

## பயிற்சிப் பிரிவு

பயிற்சிப் பிரிவு

| 1. வகுக்கப்பட்ட இலக்குகள் | எண்ணிக்கை |
|---|---|
| 1.1 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (05) | 247 |
| 1.2 வெளிவாரிப் பயிற்சிப் பாடநெறிகள் (உள்நாட்டு) (14) | 49 |
| 1.3 தன்விருப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - பாடநெறி (11) | 17 |

2. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றபோது, நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கும் நிறைவேற்றப்பட்ட நோக்கங்களுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு ஊழியர் பயிற்சியளிப்பின் மூலம் செய்யக்கூடியதான கடமைப் பொறுப்பை அடையாளம்கண்டு அதற்கென பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

தாம் செயலாற்றுகின்ற துறை தொடர்பில் பெறப்பட்ட அறிவின் ஊடாக செயற்றிறனை அதிகரிக்கச் செய்து தற்போது முகம்கொடுக்க நேரிடுகின்ற சவால்கள் மற்றும் அதற்கு முகம்கொடுக்கின்ற முறையியல்களைக் கடைப்பிடித்து தொலைநோக்குடன் கூடிய செயற்பாட்டுக் குழுவொன்றை மேற்படி பயிற்சிபெறுபவர்களிலிருந்து உருவாக்குதல்.

மாவட்ட அலுவலகங்கள் உள்ளடங்கலாக, ஒட்டுமொத்தமான பணியாட்டொகுதியினருக்கும் ஆங்கிலம்.்.தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்கள் உட்பட தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை நேர அட்டவணையின் அடிப்படையில் உயர்ந்தபட்சம் 10 நாட்களுக்கு உட்பட்டவாறு 29 உத்தியேகாத்தர்களுக்கு கற்கை லீவு வழங்கப்பட்டு பாடநெறிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

## 2011 ஆம் ஆண்டில் மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகப் பிரிவு பெற்றுள்ள வெற்றிகள்

2011 ஆம் ஆண்டினுள் மேற்படி துறையின் ஊடாக மனித வள முகாமைத்துவப் பிரிவு பெற்றுள்ள விசேட வெற்றிகள்.

### 1. மனித வளப் பிரிவு

### 1.1 உள்ளகப் பதவி உயர்வுகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் III, IV மற்றும் V தரங்களிலான முகாமைத்துவத் துறையின் பதவிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பதவிகளுக்கும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் உள்ளகப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, முறைசார்ந்த நேர்காணல் பரீட்சையின் ஊடாக பின்வருமாறு 541 உள்ளகப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமையின் ஊடாக ஊழியர் ஊக்குவிப்புச் செயற்பாட்டில் விசேட வெற்றிகள் பெறப்பட்டுள்ளன.

| பதவி மட்டம் | | பதவி உயர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஊழியர் முகாமைத்துவ மட்டம் | - | 58 |
| மூன்றாம் நிலை முகாமைத்துவ மட்டம் | - | 25 |
| இரண்டாம்நிலை முகாமைத்துவ மட்டம் | - | 368 |
| முதனிலை மட்டம் | - | 90 |
| மொத்தம் | | 541 |

1.2 ஊழியர் மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டல்

ஊழியர்களின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் போன்ற பல்வேறான தேவைகள் நிறைவேறாமை மற்றும் தவறான நடத்தைகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுக் கட்டளைகளை நியாயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு முறைசார்ந்ததொரு செயற்பாடு இன்மையின் காரணமாக விரக்தி நிலைக்கு உள்ளாகியுள்ள ஊழியர்களின் மேன்முறையீட்டை ஆராயும் பொருட்டு பின்வரும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய ஊழியர் மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தேசிய வீடமைப்பு ஆணையாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் | - | குழு உறுப்பினர் |
| உப தலைவர் | - | குழு உறுப்பினர் |
| செயற்பாட்டு பணிப்பாளர் | - | குழு உறுப்பினர் |
| சட்ட உத்தியோகத்தர் (அழைப்பாளர்) | - | குழச் செயலாளர் |

2011 ஆம் ஆண்டினுள் மீளாய்வு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

நீண்ட காலமாக தீர்வுகள் வழங்கப்படாது தேங்கியுள்ள ஊழியர் முறைப்பாடுகளின் பொருட்டு மேற்படி குழுவின் மூலம் நியாயமான தீர்வுகள் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக ஊழியர் ஊக்குவிப்புச் செயற்பாட்டில் புதியதொரு போக்கை பெற்றுக்கொள்ளல் மனித வள முகாமைத்துவப் பிரிவு பெற்றுள்ள விசேடமானதொரு வெற்றியாகும்.

1.3 முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் ஏற்பாடுகளின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வுகளை செலுத்துதல்

முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் ஏற்பாடுகளின் கீழ் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு, அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைபடுத்தும் வரை, கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வுகளை 2007 ஆம் ஆண்டிலிருந்து சம்பளப் படிகளில் அமர்த்தி 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைச் சம்பளத்துடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நலன்பெற்றோர் எண்ணிக்கை 220 ஆகும்.

### 2. பயிற்சிப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அநேகமாக நடுத்தர முகாமைததுவ மட்டத்திற்கு மேலுள்ள பதவிகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததோடு, புதியதொரு போக்கை வழங்கி எழுது வினைஞர் மற்றும் சம தரங்களின் ஊழியர்கள் மற்றும் முதனிலை வகையிலான ஊழியர்கள் பல்வேறான துறைகளின் கீழ் பயிற்சி பெறுவதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டனர்.

இதற்கமைய 2011 ஆம் ஆண்டினுள் பின்வருமாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| தொடர் இல. | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | நடைமுறைப் படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஊழியர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 05 | 247 | 73,000/- |
| 02 | வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 14 | 49 | 171,450/- |
| 03 | தன்னார்வ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 11 | 14 | 351,800/- |
| | மொத்தம் | 30 | 310 | 596,250/- |

இதற்கமைய மிக நீண்ட காலமாகவும் அதேபோன்று முழுச் சேவைக் காலத்தினுள்ளும் எவ்விதப் பயிற்சிக்கும் அனுப்பப்படாதிருந்த ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டினுள் பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டமையின் மூலம் பயிற்சி பெற்ற முனைப்புடன் கூடியதும் அதேபோன்று திருப்திகரமானதுமான ஊழியர்களை உருவாக்குவதன் ஊடாக செயலாற்றலைத் துரிதப்படுத்துவதற்கு இயலுமாயிருந்தமை மனித வள முகாமைத்துவப் பிரிவு பெற்ற மேலுமொரு வெற்றியாகும்.

### 3. போக்குவரத்துப் பிரிவு

மாவட்ட முகாமையாளர்களுக்காக போக்குவரத்துப் பிரிவின் மூலம் 18 கெப் வண்டிகளும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக 134 மோட்டார் சைக்கிள்களும் பெறப்பட்டுள்ளதோடு, இது 2011 ஆம் ஆண்டில் பெறப்பட்டதொரு வெற்றியாகும்.

## சட்டம பிரிவ்

### சட்டம்

ஏனைய பிரிவுகளைப் போன்றே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றபோது சட்டப் பிரிவினால் அதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன. முக்கியமாக காணிகள் மற்றும் வீடுகளுக்கான அறுதி உறுதிகளை வழங்குதல், அத்தகைய ஆதனங்களை ஒப்படைக்கின்றபோது தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ஆதனங்கள் தொடர்பில் பொதுவாக சமூகத்திற்கு பாதிப்புகள் ஏற்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல், வெளித் தரப்பினர்களால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற மனித உரிமை முறைப்பாடுகள் தொடர்பாக செயலாற்றுதல், கடன் மற்றும் வாடகைத் தவணைத் தொகைகளை செலுத்தாதிருக்கின்ற நிலுவை கடன், வாடகைத் தவணை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அதிகார சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய பல்வேறான கடமைகள் சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

### உறுதிகளை வழங்கல்

மொத்தப் பணத்தையும் செலுத்தியுள்ள வீடமைப்புத் திட்டங்களின் வீடு பெறுனர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குதல் பிரதானமாக நடைபெறுகின்ற ஒரு கடமையாகும். இதில் கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களல்லாத வீடமைப்புத் திட்டங்களின் வீடுகளுக்கும் அதேபோன்று காணிகளுக்கும் அறுதி உறுதிகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 2011 ஆம் ஆண்டினுள் தயாரிக்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை | - 2612 |
| 2011 ஆம் ஆண்டினுள் உறுதிகள் வழங்குகின்ற இலக்கு | - 5000 |
| 2011 ஆம் ஆண்டினுள் உறுதிகளை தயாரிப்பதற்காக பெறப்பட்ட ஆவணக் கோப்புகளின் எண்ணிக்கை | - 2331 |

### தலைமை அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்படுகின்ற வழக்குகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க நிலுவை வாடகையை உரியவர்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாணிப்புகளைச் செய்துள்ளவர்களுக்கு, அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு எதிராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்தல், சட்ட ஆலோசனைகளை வழங்கல், கூட்டாட்சி வெளியீடுகளைத் தயாரித்தல் மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துகின்றவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளின்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டப் பிரிவு உதவி வழங்குகின்றது.

இதன்போது தலைமை அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட வழக்குகள் பின்வருமாறு.

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 18 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 21 |
| மேல் நீதிமன்றம் | 39 |
| மாவட்ட நீதிமன்றம் | 781 |
| நீதவான் நீதிமன்றம் | 61 |
| தொழில் நியாய சபை | 12 |

இவற்றுக்கு மேலதிகமாக நொத்தாரிசுக் கட்டணம், சட்ட அறிவிப்புகள் மற்றும் வெளியேற்றல் கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் ஆகியன ஊடாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அறவீடுகளின் பொருட்டு பங்களிப்பு வழங்குகின்றது.

## திட்டமிடல் முன்னேற்றம் மற்றும் அறவீடுகள்

மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பத்து இலட்சம் வீடுகளை அபிவிருத்தி செய்கின்ற தொழிற்பாட்டை 2011 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்துள்ளது. 2011 செயற்பாட்டுத் திட்டம் இந்த இலக்கை முன்னிறுத்தித் தயாரிக்கப்பட்டது. அரச வங்கிகளை ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கச் செய்யப்பட்டமையை இவ்வாண்டில் பெற்றதொரு வெற்றியாகக் குறிப்பிடலாம். 2011 ஆம் ஆண்டின் இலக்குகளும் முன்னேற்றமும் பின்வருமாறு.

| | இலக்கு | முன்னேற்றம் | | நிதியியல் ரூபா மில். |
|---|---|---|---|---|
| | பௌதீக அலகுகள் | நிதியியல் ரூபா மில். | பௌதீக அலகுகள் | |
| கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம | 10000 | 1175 | 10829 | 1151.39 |
| ஜனசெவன உபகார நிகழ்ச்சித்திட்டம் | 6500 | 2210 | 5831 | 1411.56 |
| தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டம் | 2469 | 182 | 1792 | 123.70 |
| செவன உதவி நிகழ்ச்சித்திட்டம் | 853 | 86.2 | 563 | 38.51 |
| சஹஸ்ர லங்கா நிகழ்ச்சித்திட்டம் | | | | |
| முதலீட்டுக் கருத்திட்டமள | 770 | 100.0 | 4 | 11.9 |
| மீள்தாபிப்புக் கருத்திட்டம் | 48 | 14.6 | - | - |
| சஹசவிய | | | | |
| வெள்ள அனர்த்தம் | 6484 | 669.3 | 6466 | 248.96 |
| ஏனையவை | 366 | 36.6 | 749 | 64.72 |
| | 27490 | 4493.7 | 26234 | 3049.23 |

மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக 2011 இல் இருந்து தொடர்ந்து வந்த 4336 வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்தலும் நடைபெற்றது. வீடமைப்பு அபிவிருத்தியுடன் தொடர்புடைய வேறு நிகழ்ச்சித்திட்டங்களாக நகமு புரவர நிகழ்ச்சித்திட்டம், உரித்து உறுதிகள் வழங்கல், சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்குதல் மற்றும் பராமரிப்பு அலகு ஆகிய விடயங்களுக்காக ரூபா 185.41 மில்லியன் செலவிடப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதானமான வருமான வழி கடன் அறவிடுதலாகும். ஆண்டினுள் இலக்கிடப்பட்ட பணத் தொகை ரூபா 1299.201 மில்லியனாகும். இதில் ஆண்டினுள் ரூபா 1159.882 மில்லியனை அறவிடுவதற்கு இயலுமாயிருந்தது. இது சதவீதமாக 92மூ ஆகும். கிராமிய வீடமைப்பு அறவீடுகளும் ரூபா 34.508 மில்லியனாக காணப்பட்டதோடு, இது இலக்கிடப்பட்ட பணத் தொகையின் சதவீதமாக 96மூ ஆகும். நகர வீடுகளின் தவணைத் தொகைகள் மற்றும் வாடகை ரூபா 123.116 மில்லியன் இலக்கிடப்பட்டிருந்ததோடு ரூபா 168.9 மில்லியனை அறவீடுவதற்கு இயலுமாயிருந்தது. இது 137மூ வீத முன்னேற்றமாகும்.

## 2011 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகள்

2011 ஆம் ஆண்டு புதிய அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளின் ஆரம்ப ஆண்டாகும். காணப்பட்ட யுத்த நிலவரம் 2009 மே மாதம் 20 ஆம் திகதி முழுமையாகவே முடிவடைந்ததன் பின்னர் அபிவிருத்தியின் ஒளிக் கதிர்கள் இலங்கையில் உதித்தது. இங்கு வீடமைப்புத் துறையில் மிக வேகமான அபிவிருத்தியைக் குறிப்பிடும் வகையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பல வெற்றிகளை அடையப்பெற்றது.

குறிப்பாக 31826 வீடுகளின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு இவ்வாண்டில் ரூபா 3217 மில்லியன் முதலீட்டை செய்வதற்கு இயலுமாயிருந்தது. இதன் மூலம் நலன்பெற்றவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 125000 ஆகும்.

வீடமைப்பு அபிவிருத்திக்கு ரூபா 100 மில்லியனுக்கும் ரூபா 200 மில்லியனுக்கும் இடைப்பட்ட தொகைக்கு வரையறுக்கப்பட்டிருந்த அரச முதலீடு ரூபா 726 மில்லியன் வரை வளர்ச்சியடைந்தது. ஆண்டினுள் உள்ளக வருவாய்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 535 மில்லியன் வரை அதிகரித்ததோடு, அறவீடுகளில் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சி உருவாகியது.

வங்கி நிதியங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு ஆற்றுப்படுத்த இயலுமாயிருந்தமை இவ்வாண்டில் அடையப்பெற்ற விசேடமான வெற்றியாகும். இதன்போது ரூபா 2260 மில்லியன் நிதியத்தை வழங்குவதற்கு 06 அரச வங்கிகள் உடன்படிக்கை செய்துகொண்டன. இதன் மூலம் இவ்வாண்டினுள் 5722 குடும்பங்களுக்கு நலன்கள் கிடைக்கப்பெற்றதோடு அவர்களை நீண்ட காலம் காணப்பட்ட வீடமைப்புப் பிரச்சினையிலிருந்து மீட்டெடுப்பதற்கு இயலுமாயிருந்தது.

புதிய அரசாங்கமானது கொள்கை என்ற வகையில் மாடி வீடுகளை நவீனமயப்படுத்துவதன் தேவையை ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கமைய பல தசாப்தங்களாக உரிய பராமரிப்பு நடைபெறாது சீர்குலைந்திருந்த மாடி வீட்டுத் தொகுதிகளுக்கு புத்துயிரளிக்கப்பட்டது. ஆண்டினுள் ரூபா 230 மில்லியனை அரசாங்கம் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கியமை அதிகாரசபை பெற்ற விசேட வெற்றியாகும்.

அதிகார சபைக்குச் சொந்தமான வெற்றுக் காணிகளின் அளவு தொடர்பான விபரங்களைத் தயாரித்து அக் காணிகளை ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்து அபிவிருத்தியின் பொருட்டு ஆற்றுப்படுத்தல் ஆண்டினுள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட மேலுமொரு விசேடமான பணியாகும்.

ஏ

# தொழிற்பாட்டு பெறுபேறுகள் மீளாய்வு

## கிராம வீடமைப்புக் கடன் அறவிடல் செயலாற்றுகை - 2011

| தொடர் இல. | மாவட்டம | தொகை: வரவு செலவுத் திட்டம் | தொகை: அறவிடுதல் | % | ரூபா மில். 2011.12.31 திகதிக்கு நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1 | அனுராதபுரம் | 60.457 | 67.560 | 112 | 110.913 |
| 2 | திருகோணமலை | 19.055 | 23.267 | 122 | 32.238 |
| 3 | யாழ்ப்பாணம | 27.107 | 35.713 | 132 | 28.099 |
| 4 | இரத்தினபுரி | 32.228 | 35.252 | 109 | 47.0937 |
| 5 | குருணாகல் | 81.194 | 78.380 | 97 | 60.398 |
| 6 | மாத்தளைய | 31.133 | 35.346 | 114 | 36.090 |
| 7 | அம்பாறை | 53.113 | 52.145 | 98 | 77.697 |
| 8 | வவுனியா | 21.644 | 22.239 | 103 | 30.595 |
| 9 | கேகாலை | 69.606 | 73.441 | 106 | 85.990 |
| 10 | மன்னார் | 7.798 | 8.050 | 103 | 12.033 |
| 11 | புத்தளம | 53.847 | 58.193 | 108 | 75.324 |
| 12 | பொலனறுவை | 24.002 | 30.917 | 129 | 46.416 |
| 13 | மட்டக்களப்பு | 41.629 | 36.363 | 87 | 77.227 |
| 14 | பதுளை | 63.738 | 58.599 | 92 | 146.729 |
| 15 | அம்பாந்தோட்டை | 50.281 | 39.555 | 79 | 97.964 |
| 16 | களுத்துறை | 48.744 | 60.957 | 125 | 117.135 |
| 17 | நுவரெலியா | 67.212 | 41.896 | 62 | 144.381 |
| 18 | காலி | 51.584 | 46.435 | 90 | 139.101 |
| 19 | மொனறாகலை | 57.277 | 50.274 | 88 | 201.880 |
| 20 | மாத்தறை | 63.245 | 69.360 | 110 | 189.163 |
| 21 | கண்டி | 133.867 | 91.362 | 68 | 228.435 |
| 22 | கொழும்பு நகர் (தெற்கு) | 5.805 | 3.399 | 59 | 32.014 |
| 23 | கம்பஹா | 88.640 | 55.330 | 62 | 286.735 |
| 24 | கொழும்பு மாவட்ட அலுவலகம் | 93.076 | 72.243 | 78 | 213.027 |
| 25 | கொழும்பு நகர் (வடக்கு) | 5.962 | 2.660 | 45 | 29.454 |
| 26 | முல்லைத்தீவு | 2.218 | 3.456 | 156 | 3.441 |
| 27 | கிளிநொச்சி | 4.742 | 7.490 | 158 | 5.023 |
| | மொத்தம் | **1,259.201** | **1,159.882** | **92** | **2,554.595** |

கடன் அறவிடுதலின் முன்னேற்றம் - 2011



## நகர வீடுகள், சாப்புகள் / தவணைத் தொகை வாடகை அறவிடுதல் செயலாற்றுகை - 2011

| தொடர் இல. | மாவட்டம் | தொகை | | % | 2011.12.31 திகதிக்கு நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | வரவு செலவுத் திட்டம் | அறவிடுதல் | | |
| 1 | தலைமை அலுவலகம | 20.689 | 18.917 | 91 | 3.940 |
| 2 | கொழும்பு நகரம் (வடக்கு) மாளிகாவத்தை | 34.000 | 27.179 | 80 | 37.671 |
| 3 | கொழும்பு நகரம் (தெற்கு) மனிங் டவுன் | 43.703 | 40.322 | 92 | 5.904 |
| 4 | கம்பஹா | 25.300 | 30.839 | 122 | 27.260 |
| 5 | கண்டி | 7.000 | 7.422 | 106 | 6.435 |
| 6 | மாத்தறை | 4.000 | 2.165 | 54 | 13.331 |
| 8 | கொழும்பு மாவட்டம் | 35.600 | 25.396 | 71 | 28.343 |
| 9 | கல்முனை/அம்பாறை வர்த்தக கட்டடம | 2.150 | 0.745 | 34 | 1.204 |
| மொத்தம் | | **172.442** | **152.985** | | **124.088** |

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு வேலைத்திட்டத்தில் பங்கேற்கின்ற வீட்டு உரிமையாளர்களின் தொடர்பூட்டல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தகவல் பிரசாரப் பிரிவு 2011 ஆம் ஆண்டில் பல்வேறு அச்சு மற்றும் மின்னியல் ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

தகவல் பிரசாரப் பிரிவு பின்வரும் அலகுகளுடன் சேர்ந்து செயற்படுகின்றது.

- தகவல் பிரசார அலகு
- செவன ஊடக சேவை
- அச்சிடல் அலகு

## தகவல், பிரசார அலகு

2011 ஆம் ஆண்டில் தகவல் பிரசார அலகு பின்வரும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஜனசெவன வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டுக்கு ஏற்புடையதான ஊடக பிரசாரப் பணிகள் மற்றும் அச்சு, மின்னியல் ஊடகங்களின் ஊடாக பொது மக்களை விழிப்புணர்வூட்டல்.
- ஜனசெவன தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டுக்கு ஏற்புடையதாக அதிகாரசபையினால் 19 மாவட்டங்களில் அண்ணளவாக 60 வீடமைப்புக் கருத்திட்டங்களின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதற்கான அனைத்து வைபவங்களுக்கும் தேவையான பின்வரும் சேவைகளும் வசதிகளும் வழங்கப்பட்டன.

  (i) விளம்பரம் மற்றும் வைபவங்களின் திட்டமிடல்
  (ii) அனைத்து வித கலை ஆக்கங்களின் அச்சிடல்கள் (யுசவ றுழசமள)
  (iii) பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள், மேடைகளின் பின்னணிப் பந்தல், பதாகைகள், கொடிகள், கொடிக் கம்பங்கள்
  (iv) மேடைகள், மண்டபங்கள், கதிரைகள், ஒலி பெருக்கி இயந்திரங்கள், மல்டி மீடியா புரொஜெக்டர்கள், திரைகள்
  (v) பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் நினைவுப் பலகைகள்

- 2011 உலக குடியிருப்புகள் தின விழா பத்தரமுல்லை கிராமியக் கலைகள் நிலையத்தில் 2011.10.03 ஆம் திகதி நடத்தப்பட்டது. அதன் கீழ் பின்வரும் பணிகள் ஆற்றப்பட்டன.

(i) பாடசாலை மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் ஓவியம், கட்டுரை மற்றும் சுவரொட்டிகள் போட்டி ஒழுங்குசெய்யப்பட்டமை
(ii) 500 பாடசாலை மாணவர்களுக்கு ஓவியம் தொடர்பில் செயலமர்வொன்று நடத்தப்படல்
(iii) பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சிகளை நடத்தல்
(iv) உலக குடியிருப்பு தின நினைவு மலரைத் தயாரித்து அச்சிடல்
(v) ஓவியம், கட்டுரை, சுவரொட்டிகள் போட்டியில் வெற்றிபெற்றோருக்கு விருதுகளையும் சான்றிதழ்களையும் தயாரித்தல்
(vi) உலக குடியிருப்புகள் தின பிரதான வைபவத்தை ஒழுங்கு செய்தல்
(vii) பிரதான வைபவத்தின் மேடை, மேடைப் பின்னணி, நுழைவுப் பந்தலை நிர்மாணித்தல் மற்றும் அலங்காரப் பணிகள்

- 2011 “தயட்ட கிருள” உள்ளிட்ட தேசிய மட்டத்திலான கண்காட்சிகளில் பங்கேற்றல்.

## செவன ஊடக அலகு

- 2011 ஆம் ஆண்டில் செவன ஊடக சேவை நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை காணி மீட்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகம், கட்டிடத் திணைக்களம் மற்றும் தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவகம் உள்ளிட்ட நிறுவனங்களின் பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடுதலை மேற்கொண்டது.
- 2011 ஆம் ஆண்டில் செவன ஊடகச் சேவையின் வருடாந்த மதிப்பிடப்பட்ட இலாபம் ரூபா 3.0 மில்லியனாகும். 2011 திசெம்பர் வரை பெறப்பட்ட வருமானம் ரூபா 27.14 மில்லியனாக இருந்ததோடு இலாபம் ரூபா 3.62 மில்லியனாகும்.
- செவன ஊடக சேவையின் அனைத்து வருவாய்களும் “தலைவர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை” எனும் பெயரிலான தனியானதொரு கணக்குக்கு வரவு வைக்கப்படுவதோடு, இந் நிதியம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

# தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு

# செவன ஊடக சேவை

## பத்திரிகை அறிவித்தல்கள்

2011 சனவரி முதல் திசெம்பர் வரை வருமானம் மற்றும் இலாபம்

| மாதம் | வருமானம் ரூபா | இலாபம் ரூபா |
|---|---|---|
| சனவரி | 2,707,496.80 | 366,133.42 |
| பெப்ருவரி | 1,349,474.40 | 181,489.05 |
| மார்ச் | 2,196,593.60 | 294,411.92 |
| ஏப்பிரல் | 2,551,791.60 | 344,445.20 |
| மே | 2,129,909.40 | 288,237.45 |
| ஜூன் | 2, 464,382.32 | 330,115.62 |
| ஜூலை | 2,198,312.40 | 294,210.76 |
| ஆகஸ்ட் | 2,010,344.40 | 269,730.00 |
| செம்தெம்பர் | 2,938,760.56 | 392,043.09 |
| ஒக்றோபர் | 2,976,530.30 | 387,498.88 |
| நவெம்பர் | 2,869,263.62 | 381,525.10 |
| திசெம்பர் | 749,718.00 | 95,303.18 |
| மொத்தம் | **27,142,577.40** | **3,625,143.67** |

2011 ஆம் ஆணடுக்கான வருமான இலக்கு- ரூபா 3.0 மில்.

2011 சனவரி முதல் திசெம்பர் வரை வருமானம் மற்றும் இலாபம்




## அச்சிடல் அலகு

யப்பான் அரசாங்கத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த மேற்படி அச்சிடல் அலகு பலப்பிட்டி, பியகம மாதிரிக் கிராமத்தில் 1987 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் இது மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்திற்கு எடுத்துவரப்பட்டது.

2002 ஜூன் மாதத்தில் மேற்படி அச்சிடல் அலகு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டதோடு, தகவல், பிரசாரப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது.

தற்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து அச்சிடல் நடவடிக்கைகளும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆயினும், அனைத்து அச்சிடல் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு மேற்படி அச்சிடல் அலகின் இயலளவு போதியதாயில்லை.

# தகவல் தொழில்நுட்பம்

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்து பொதுமக்களுக்கு துல்லியமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையொன்றைப் பெற்றுக்கொடுக்கின்ற ஈ-அரசு எண்ணக்கருவுக்கு அமைவாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்துடன் இணைத்து வருகின்றது. இப் பணியின் பொருட்டு எமது அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு முழுமையான தொழில்நுட்ப மற்றும் கோட்பாட்டு ரீதியிலான அறிவை வழங்குகின்றது.

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் கனணிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கி இணையச் சேவை மற்றும் மின்னஞ்சல் போன்ற தொடர்பூட்டல் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதன் ஊடாக அவ்வலுவலகங்களின் பணிகளை வினைத்திறன்மிக்க வகையில் பேணி வருவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவுகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு உயர் முகாமைத்துவத்தின் மூலம் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகளை அறிவிப்பதற்கு 26 மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்திற்கும் இடையே சிறந்ததொரு இணைப்பாக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கனவே சிறந்த பெறுபேறுகளை அடையப்பெற்றுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பப் பிரிவின் மூலம் பின்வரும் சேவைகள் பேணிவரப்படுகின்றன.

01. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தல்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் என்பது அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஊழியர்களுக்கும், இலங்கை மக்களுக்கும் அதேபோன்று வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற உலக மக்களுக்கும் சிறந்ததொரு புரிந்துணர்வை வழங்குகின்றதும் கனணித் துறையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றதுமான பலம் பொருந்தியதொரு ஊடகமாகும்.

கடந்த ஆண்டினுள் கனணித் துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இணையத் தளத்தின் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்கள் பற்றிய தகவல்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன்கள் கிடைக்க வேண்டிய பிரசைகள் பற்றிய தகவல்கள், நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்கள், விற்பனைக்குத் தயாராயுள்ள வீடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செய்திகள் உள்ளடங்கிய மிக முக்கியமான தகவல்களை சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஒழுங்கான விதத்தில் நாளாந்தம் இற்றைப்படுத்தி வழங்குவதற்குத் தேவையான பணிகள் கனணிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்ததென்பதை மிக மகிழ்வுடன் தெரிவிக்கலாம்.

எதிர்வரும் ஆண்டினுள் மேற்படி இணையத் தளத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகளை விரிவாக்கவும், அதேபோன்று தமிழ் மொழி மூலம் அத் தகல்களை வெளிக்கொணர்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

02. கனணிகள் மற்றும் வன்பொருட்களின் பராமரிப்பு

அதிகார சபையின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் கனணி வலையமைப்பாக்கல் அண்ணளவாக 80மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமாக 252 கனணிகளும், 100 அச்சு இயந்திரங்களும் 150 ரூளு களும் தற்போது பயன்பாட்டில் உள்ளன. உத்தரவாதக் காலத்தைக் கடந்துள்ள கனணி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், ரூளு கள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் மற்றும் வலையமைப்பாக்கல் தவறுகளைத் திருத்துதல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, உத்தரவாதக் காலத்தைத் தாண்டாத கனணிகள் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனத்துடன் இணைப்பாக்கம் செய்யப்படுகின்றது.

இவற்றைத் தவிர கனணிகளின் தொழிற்பாட்டு முறைமையினதும் மென்பொருள்களினதும் பராமரிப்பு மற்றும் வைரஸ்களிலிருந்து கனணிகளையும் தரவுகளையும் பாதுகாப்பதற்கான வசதிகள் இப் பிரிவின் மூலம் வழங்கப்படுவதோடு, இச் சேவைகளை வெளிவாரி நிறுவனங்களிலிருந்து பெறுவதாயிருப்பின் அதற்காக ஏற்க நேரிடுகின்ற பெரும் செலவைக் குறைப்பதற்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளின் காரணமாக இயலுமாயுள்ளது.

03. கனணி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்

தலைமை அலுவலகத்தின் இடர் கடன் நிகழ்ச்சித்திட்டம், மேலதிக நேரக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், தவிசாளர் அலுவலகத்திற்குரிய பொதுமக்களின் வேண்டுகோள்கள் பற்றிய தகவல்களை கனணிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், வட்டியின்றி ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறு கடன்கள், அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்களின் முகாமைத்துவத்தை ஒழுங்கான விதத்தில் பேணிவரும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட காணித் தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கனணி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் அதிகாரசபைக்கு சொந்தமான ஒட்டுமொத்த வீடுகள் மற்றும் காணிகளின் தரவுகளை உட்படுத்தி துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கனணி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சந்தைப்படுத்தல் பிரிவுக்குச் சொந்தமான முன்கூட்டிய விற்பனை வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறும் அனைத்துத் தரவுகளையும் உட்புகுத்தக் கூடியவாறும் தயாரிக்கப்பட்டுள்ள கனணி செய்நிரலின் மூலம் விண்ணப்பதாரர்களின் அனைத்து விபரங்களையும் கனணிமயப்படுத்தி தேவையான தெரிவு செய்தல்களைத் துரிதமாக மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செவன ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல்களை வெளியிடுதலுடன் தொடர்புடைய கனணி செய்நிரலை உருவாக்குதல் மற்றும் அதன் பணப் பெறுகைகளை கணக்குப் பிரிவுடன் இணைந்து பேணிவருவதற்கு இயலுமானவாறு இச்செய்நிரல் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்குத் தேவையான அனைத்துத் தரவுகளையும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று தேவைக்கு ஏற்ப அந்தந்தத் தரவுகளைப் பயன்படுத்தி முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதன் பொருட்டு பல்வேறு துறைகளிலும் உள்ள தகவல் தொழில்நுட்பச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை நெறிப்படுத்தல் மற்றும் தேவையான இணைப்பாக்க நடவடிக்கைகள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

04. வீடமைப்புக் கடன் கனணி செய்நிரல்

வடக்கு கிழக்கும் உள்ளடங்குகின்றவாறு அனைத்து மாவட்ட அலுவலகங்களின் மூலமும் 1984 முதல் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கடன்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற உபஹார கடன் பற்றிய தகவல்களை கனணிமயப்படுத்தலும் தகவல்களை இற்றைப்படுத்தும் பணிகளும் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய அனைத்து கடன்பட்டோர்களினதும் தகவல்கள், கடன் வழங்குதல்கள் மற்றும் கடன் பெறுதல்கள் பற்றிய தகவல்கள் கனணிமயப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றின் தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கனணிப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

தலைமை அலுவலகத்திற்கும் ஏனைய மாவட்ட அலுவலகங்களுக்கும் தேவையான கனணிகள் மற்றும் கனணித் துணைப் பாகங்களின் கொள்வனவுக்குத் தேவையான விபரங்கள் மற்றும் கொள்வனவு வழங்கல் நடவடிக்கைகளும் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கனணிகள் மற்றும் துணைப் பாகங்களைக் கொள்வனவு செய்கின்ற பணிகள் உரிய தரக் கட்டுப்பாட்டுடன் கூடியதாக மேற்கொள்ளப்படுகின்றது.

05. **Call Centre** நிலையத்தைத் தாபித்தல்

உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடும் பொருட்டு நவீன வசதிகளைக் கொண்ட Call Centre நிலையமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் மூலம் கடன்பட்டோருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பின்ஆய்வுகளைச் செய்வதற்கும் தேவையான அனைத்து வசதிகளும் மேற்படி Call Centre நிலையத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

06. புதிய கடன் கனணி செய்நிரலை அறிமுகப்படுத்தல்

மிக நீண்ட காலமாக தேவைப்பாடொன்றாகக் காணப்பட்ட கடன் வழங்கல் மற்றும் அறவிடுதலின் பொருட்டு புதிய கனணி செய்நிரலொன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, 2013 ஆம் ஆண்டினுள் மேற்படி புதிய கனணி செய்நிரலை முழுமையாக ஆரம்பித்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி விடயங்களின் பிரகாரம் தகவல் தொழில்னுட்பப் பிரிவு, அரச இ-அரசு முறையைக் கடைப்பிடித்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து சேவைகளையும் தகவல் தொழில்னுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குகின்ற நோக்கத்துடனேயே எப்போதும் முயற்சியெடுக்கின்றது. அண்மிய எதிர்காலத்தில் இதை விட தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்னுட்பத்தைப் பயன்படுத்தி உயர் சேவையொன்றை வழங்குகின்ற நோக்கத்துடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றதென்பதை மிக மகிழ்வுடன் கூறுகிறோம்.

# வரையறுக்கப்பட்ட ஓசன்வீவ் டிவலொப்மன்ற் தனியார் கம்பனி

## அறிமுகம்

94/.340/.006 ஆம் இலக்க 1994.02.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பம்பலப்பிட்டி டவர் கட்டடத்தின் முகாமைத்துவத்தின் பொருட்டும் ஆதன அபிவிருத்திப் பணிகளின் பொருட்டும் நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் சேர்ந்து கூட்டுத் தொழில்முயற்சிக் கம்பனியொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க 1996 சனவரி 01 ஆம் திகதி ஓசன்விவ் டிவலொப்மன்ற் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

ஜனசெவன பத்து இலட்சம் வீடுகள் தேசிய கொள்கைக்கு துணைபுரிகின்ற ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் நம்பிக்கையையும், பொறுப்பையும், ஒரு தனியார் நிறுவனம் என்ற வகையில் வினைத்திறனையும் முன்னிலைப்படுத்தியுள்ள இக் கம்பனி இன்றளவில் வீடமைப்புச் சந்தையில் தெளிவானதொரு மாற்றத்தை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவையை நிறைவு செய்வதற்கு முன்வந்துள்ளது.

## தொலைநோக்கு

இலங்கையின் ஆதன அபிவிருத்திச் சந்தையினுள் அரசாங்கத்துடன் இணைந்த ஆதன அபிவிருத்தி நிறுவனம் என்ற வகையில் பங்களிப்பை வழங்குதல்.

## செயற்பணி

கொள்வனவாளர்களின் தேவையின் அடிப்படையில், போட்டி ரீதியிலான விலைகளின் கீழ், முழுமையான வசதிகளுடன் கூடிய, தனி வீட்டுக் கூறுகளையும் அதேபோன்று கூட்டாட்சி வீடுகளையும் வழங்கி உள்நாட்டு ஆதன அபிவிருத்திச் சந்தைக்கு உதவியளித்தல்.

## குறிக்கோள்கள்

ஆதன அபிவிருத்தி

ஆதன முகாமைத்துவம்

நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்

ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்கல்

காணிகள் மற்றும் ஆதனங்களை விற்பனை செய்தல்

## ஓசன்விவ் டிவலொப்மன்ற் தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| திரு. ஜகத் பெரேரா | - தலைவர் முகாமைத்துவப் பணிப்பாளர் |
| திரு. பிர'ாந்த டயஸ் | - பணிப்பாளர் |
| கலாநிதி அசல உபேந்திர ஜயதிலக | - பணிப்பாளர் |
| திரு. சிறிநிமல் பெரேரா | - பணிப்பாளர் |
| திரு. அத்துல டி சில்வா | - பணிப்பாளர் |

பணிப்பாளர் சபை செயலாளர் - எக்கவுன்ற் சிஸ்டம் தனியார் கம்பனி

## வரையறுக்கப்பட்ட ஓசன்விவ் டிவலொப்மன்ற் கம்பனியின் பணியாட்டொகுதி

2011 ஆம் ஆண்டில் கம்பனியின் முழுமொத்தப் பணியாட்டொகுதி பின்வருமாறு.

| | |
|---|---|
| நிறைவேற்றுப் பணியாட்டொகுதி | - 08 |
| நிறைவேற்றல்லாத பணியாட்டொகுதி | - 16 |
| பராமரிப் பிரிவின் பணியாட்டொகுதி | - 22 |
| | 46 |

## புதிய முகாமைத்துவத்தின் கீழ் முன்னேற்ற மீளாய்வு

❖ டிரீம் ஹவுஸ் வீடமைப்புக் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு முக்கியமாக நடைமுறைப்படுத்தப்படுவதோடு, பல வருடங்கள் கஷ்டப்பட்டு ஈட்டிய பணத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டில் இருக்கின்றபோதே நம்பிக்கைக்குரிய நிர்மாணக் கம்பனியொன்றின் ஊடாக தமது கனவு இல்லத்தை நிர்மாணித்துக்கொள்வதற்கு ஓஷன்வீவ் உதவி வழங்குகின்றது.

கருத்திட்டத்திற்கான சேவைகளை வழங்குவதற்கு வெளிநாட்டிலுள்ளோர்களுக்கான கருத்திட்ட அலுவலகமொன்று பத்தரமுல்லை, குடியிருப்பு திட்டமிடல் அபிவிருத்தித் தொகை மதிப்பீட்டு நிலைய வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பல்வேறான நுகர்வோர் தேவைகள் மற்றும் இருப்பிலுள்ள பணத்திற்கு ஏற்ற விதத்திலான வீடுகளை நிர்மாணிப்பதையும், வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வதையும் மேற்கொள்கின்றது.

- ❖ ஜனசெவன தாபரிப்பு வீடமைப்புக் கருத்திட்டம்

  வாழ்க்கையில் ஒருபோதுமே தமக்கென வீடொன்றைக் கட்டிக்கொள்ள முடியாத, அதற்கான பொருளாதார பலத்தைக் கொண்டிராத, தெரிவு செய்யப்பட்ட 10 வறிய குடும்பங்களுக்கு ஓ'ன்வீவ் நிறுவனத்தின் நிதி ரீதியிலான அனுசரணையுடன் இவ்வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

  முதலாவது கட்டமாக கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்குகின்றவாறு 10 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டது. ஏற்புடைய குடும்பங்களைத் தெரிவு செய்வதை ஜனசெவன கருத்திட்ட அலுவலகமும் வரையறுக்கப்பட்ட ஓ'ன்வீவ் கம்பனியும் இணைந்து மேற்கொள்ளும் என்பதோடு, கிராம அலுவலரின் ஊடாக தெரிவு செய்தல் நடைபெறும். தற்போது 09 வீட்டு அலகுகளின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 05 வீடுகளின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

- ❖ டவர் கட்டடத்தை பராமரித்தல்

  புதிய தீயணைப்பு முறைமையைத் தாபித்தல்,போடியம் பகுதியில் ஈரழிப்பை நீக்கும் பணிகள் மற்றும் கட்டடத்தின் அடித்தளப் பகுதியிலான திருத்த வேலைகளுக்கு ரூபா 2.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## 2012 எதிர்காலத் திட்டமிடல்கள்

- ❖ கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டம்

  இக் கருத்திட்டத்தின் மூலம் முழுமையான வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், இரட்டை மாடி வீடுகள் மற்றும் இரட்டை வீடுகளுடன் கூடிய 40 வீட்டு அலகுகளைக் கொண்டதான கிராமமொன்று மிகவும் போட்டி ரீதியிலான விலைகளின் கீழ் நடுத்தர வகுப்பினருக்காக நிர்மாணித்து விற்பனை செய்வதற்கும் கம்பனி எதிர்பார்க்கின்றது. 10 பர்சஸ் காணித் துண்டுடன் 03 மாதிரிகளுடன் கூடிய மேற்படி வீடுகளை ரூபா 4 மில்லியனுக்கும் ரூபா 8 மில்லியனுக்கும் இடைப்பட்ட பணத் தொகையில் இலகு கொடுப்பனவு முறை மற்றும் வங்கிக் கடன் வசதிகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை ரூபா 200 மில்லியன் ஆகும்.

- ❖ டவர் கட்டடத்தை பராமரித்தல்

  இதன் கீழ் கட்டடத்தின் முழுமையான மின்சார தேவையையும் உள்ளடங்குகின்றவாறு 750 கிலோவொட் (மின் பிறப்பாக்கி) மின்சாரம் வழங்கப்படும். வொட் 1,250 வரை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதைத் தவிர, தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு ரீதியிலான திருத்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் பொருட்டு ரூபா 15 மில்லியன் பணத் தொகையை முதலீடு செய்வதற்கும் கம்பனி எதிர்பார்க்கின்றது.

- ❖ ஜனசெவன தாபரிப்பு வீடமைப்புக் கருத்திட்டம்

  ஜனசெவன தாபரிப்பு வீடமைப்புக் கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட ஏனைய பிரதேச பிரிவுகளையும் உள்ளடக்குகின்றவாறு, தமக்கென ஒருபோதும் வீடொன்றை நிர்மாணித்துக்கொள்ள முடியாத நிர்க்கதியான வறிய குடும்பங்களுக்காக மேலும் 12 வீடுகளை நிர்மாணித்து ஒப்படைப்பதற்கும் கம்பனி எதிர்பார்க்கின்றது. முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணத் தொகை ரூபா 18 மில்லியனாகும்.

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உப கம்பனி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை**

| | குறிப்பு | 2011 தே.வீ.அ.அ.ச. ரூபா சதம் | 2011 திரட்சி ரூபா சதம் | 2010 திரட்சி ரூபா சதம் |
|---|---|---|---|---|
| **(அ)** சொத்துக்கள் | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| காணியும் கட்டிடங்களும் | (02) | 612,849,784.64 | 769,341,947.71 | 802,715,995.12 |
| மோட்டார் வாகனங்கள் | (03) | 1,492,394.44 | 26,232,713.78 | 4,402,706.39 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | (03) | 10,923,399.87 | 40,757,951.71 | 33,289,824.41 |
| உபகரணங்கள் | (03) | 21,425,205.11 | 23,732,741.55 | 136,616,686.87 |
| | | 646,690,784.06 | 860,065,354.75 | 977,025,212.79 |
| II அபிவிருத்திச் சொத்துக்கள் | | | | |
| காணி கொள்ளல் | | 314,288,631.41 | 314,288,631.41 | 307,660,607.01 |
| வீடமைப்புக் கடன் திட்டங்கள் | (04-13) | 4,734,808,015.71 | 4,734,808,015.71 | 2,558,332,088.60 |
| கடன் திட்டங்கள் தே.வீ.அ.அ.ச. | | 1,554,885.05 | 1,554,885.05 | 1,554,885.05 |
| வாடகைக் கொள்வனவு வீடமைப்புத் திட்டம் தே.வீ.அ.அ.ச. | | 288,880,409.58 | 288,880,409.58 | 310,046,808.47 |
| தவணை அடிப்படையிலான வீடு விற்பனை | | 1,142,351,314.74 | 1,142,351,314.74 | 1,437,960,287.11 |
| தவணை அடிப்படையிலான காணி விற்பனை | | 10,177,268.60 | 10,177,268.60 | 14,018,733.10 |
| வாடகைக் கொள்வனவு வீடமைப்புத் திட்டம் தே.வீ.அ.அ.ச. | | 93,687.00 | 93,687.00 | 100,419.00 |
| பதவிநிலையினர் வீடமைப்புத் திட்டம் | | 185,087,437.00 | 185,087,437.00 | 189,303,798.00 |
| | | 6,677,241,649.09 | 6,677,241,649.09 | 4,818,977,626.34 |
| III முதலீடுகள் | (14- 1) | 180,682,280.35 | 105,415,417.13 | 248,765,542.47 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| நேரடி நிர்மாணத் திட்டம் | (15) | 102,548,224.55 | 102,548,224.55 | 210,347,933.57 |
| இருப்பு | (16) | 68,630,167.03 | 211,190,063.43 | 168,398,767.09 |
| ஒப்பந்தகாரர்களுக்கான முற்பணம் | | 85,177,522.50 | 85,177,522.50 | 82,893,424.93 |
| கிடைக்க வேண்டிய வட்டி | (17) | 12,685,072.93 | 12,685,072.93 | 15,710,832.99 |
| கடன்பட்டோர் | (18) | 2,921,341,158.88 | 2,967,500,279.41 | 3,172,383,609.31 |
| தேசிய இயந்திர உபகரண நிறுவனம் | | - | - | 53,983,260.00 |
| வைப்புகளும் முற்பணங்களும் | (19) | 634,313,906.43 | 634,313,906.43 | 410,818,938.99 |
| முதலீடுகள் - குறுகியகால | (14-11) | 963,477,290.06 | 963,477,290.06 | 420,333,070.59 |
| காசு, வங்கி மீதிகள் தே.வீ.அ.அ.ச. | (20) | 128,589,890.25 | 145,763,629.56 | 58,744,439.14 |
| தே.இ.உ.நி. | | - | - | 3,201,700.00 |
| | | 4,916,763,232.63 | 5,122,655,988.87 | 4,596,815,976.61 |
| **மொத்த சொத்துகள்** | | **12,421,377,946.13** | **12,765,378,409.84** | **10,641,584,358.21** |
| **(ஆ) உள்ளீட்டு வளங்கள்** | | | | |
| ஆரம்ப அனுமதித்த மூலதனம் | | **50,000,000.00** | **50,000,000.00** | **50,000,000.00** |
| | | 40,000,000.00 | 40,000,000.00 | 40,000,000.00 |
| மூலதன ஒதுக்குகள் - வெளிநாட்டு உதவி | | 131,682,601.02 | 131,682,601.02 | 131,682,601.02 |
| - உள்நாட்டு உதவி | (21) | 16,316,798,901.76 | 16,316,798,901.76 | 15,335,242,352.30 |
| | | 16,488,481,502.78 | 16,488,481,502.78 | 15,506,924,953.32 |
| மீள் மதிப்பீட்டு மிகை தே.இ.உ.நி. | | - | - | 227,558,781.00 |
| கூட்டு/கழி முன்கொண்டுசெல்லப்பட்ட வருமானம் செலவு | | (11,066,427,171.19) | (10,965,978,227.25) | (11,132,057,507.66) |
| | | 5,422,054,331.59 | 5,522,503,275.53 | 4,602,426,226.66 |
| சிறு பங்கு உரிமையாளர்களின் உரிமைகள் | | - | 169,699,009.47 | 168,061,890.06 |
| நடைமுறையற்ற பொறுப்புகள் | | | | |
| பணிக்கொடை நிதியம் | | 8,841,829.59 | 8,841,829.59 | 7,974,268.66 |
| கடன் | (22) | 2,533,338,105.80 | 2,533,338,105.80 | 1,066,558,399.64 |
| | | 7,964,234,266.98 | 8,234,382,220.39 | 5,845,020,785.02 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| கடன்கொடுத்தோர் | (23) | 1,389,396,310.24 | 1,457,280,470.66 | 1,422,086,099.20 |
| தேசிய இயந்திர உபகரண நிறுவனம் | | - | - | 402,564,925.00 |
| கடன்களுக்கான நடைமுறைப் பொறுப்புகள் | (24) | 1,176,883,587.35 | 1,176,883,587.35 | 1,137,056,328.08 |
| வைப்புகள் | (25) | 1,413,070,731.68 | 1,413,070,731.68 | 1,377,790,108.39 |
| ஏற்பாடுகள் | (26) | 477,793,049.88 | 483,761,399.76 | 457,066,112.52 |
| | | 4,457,143,679.15 | 4,530,996,189.45 | 4,796,563,573.19 |
| **மொத்த மூலதனமும் பொறுப்புகளும்** | | **12,421,377,946.13** | **12,765,378,409.84** | **10,641,584,358.21** |

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

| | | |
|---|---|---|
| **எஸ்.ஏ. ஜயந்த சமரவீர** | **ஏ.டபிள்யூ. தயானந்த** | **ஈ.ஏ.டீ.எஸ். ஏதிரிசிங்க** |
| **தலைவர்** | **உப தலைவர்** | **பிரதி பொது முகாமையாளர் (நிதி)** |

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நிர்வகிக்கப்படும் கம்பனி

## 2011 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கணக்கு

| | | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|
| **(அ) வருமானம்** | **குறிப்பு** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| வீடுகள் விற்பனை மீதான இலாபம்/நட்டம் | | 5,661,305.06 | | 6,669,224.16 | |
| காணி விற்பனை மீதான இலாபம்/நட்டம் | | 23,777,315.66 | | 10,491,012.96 | |
| வாடகை வருமானம் | [27] | 59,679,790.76 | | 49,748,528.68 | |
| வட்டி வருமானம் | [28] | 487,749,030.48 | | 341,896,239.52 | |
| வாகனங்கள் வாடகைக்கு விடப்பட்டு பெற்ற வருமானம் | | 875,630.69 | | 1,121,353.87 | |
| பொறி இயந்திரங்களை வாடகைக்கு விடப்பட்டு பெற்ற வருமானம் | | 901,247.88 | | 461,875.30 | |
| தண்டப் பணமும் மேலதிக கட்டணங்களும் | | 16,456,261.03 | | 8,257,110.10 | |
| வாகன விற்பனை மீதான இலாபம் | | 4,866,340.50 | | 1,332,500.00 | |
| அறவிட முடியாக் கடன், ஐயக் கடன்களுக்கான மிகை ஒதுக்குகள் | | 33,371,750.53 | | - | |
| செவன ஊடக வருமானம் | | 5,261,192.69 | | 2,634,063.50 | |
| நேரில் தொழிற்பாட்டு வருமானம் | [29] | 147,089,358.54 | | 32,979,540.85 | |
| மீளச் செலுத்தப்படாத வைப்புகள் | [30] | 597,557.00 | | 118,450.00 | |
| | | | 786,286,780.82 | | 455,709,898.94 |
| **(ஆ) நேரில் அபிவிருத்திச் செலவுகள்** | | | | | |
| பணிப்பாளர் சபைச் செலவுகள் | | 278,000.00 | | 57,000.00 | |
| ஊழியர் சம்பளம் | [31] | 782,550,636.61 | | 719,879,604.67 | |
| பிரயாணச் செலவுகள் | [32] | 19,258,749.82 | | 12,917,572.03 | |
| வழங்கல்கள் | [33] | 63,181,067.83 | | 33,682,804.11 | |
| பராமரிப்புச் செலவுகள் | [34] | 159,271,989.02 | | 59,518,941.74 | |
| ஒப்பந்த சேவைகள் | [35] | 65,771,831.48 | | 37,931,902.94 | |
| நிதிச் செலவுகள் | [36] | 165,194,449.42 | | 203,231,497.27 | |
| நேரில் தொழிற்பாட்டுச் செலவுகள் | [37] | 7,945,681.77 | | 9,521,640.95 | |
| நிலையான சொத்துக்களுக்கான பெறுமதித் தேய்வு | | 41,127,526.58 | | 45,699,643.90 | |
| | | | 1,304,579,932.53 | | 1,122,440,607.61 |
| (இ) ஆண்டுக்கான மேலதிக வருமானம்/செலவு | | | **(518,293,151.71)** | | **(666,730,708.67)** |
| (ஈ) தேசிய இயந்திர உபகரண நிறுவனம் இலாபம்/நட்டம் | | | (7,128,067.00) | | (98,155,024.00) |
| (உ) சீர்செய்தல் - தேசிய இயந்திர உபகரண நிறுவனம் | | | 689,365,454.00 | | - |
| (ஊ) முன்கொண்டுவரப்பட்ட தேறிய வருமானம்/செலவு | | | (11,230,371,406.48) | | (10,465,485,673.81) |
| (எ) முன்கொண்டுசெல்லப்பட்ட தேறிய வருமானம்/செலவு | | | **(11,066,427,171.19)** | | **(11,230,371,406.48)** |

## தேசிய இயந்திர உபகரண நிறுவனம்
## 2011.12.31 ஆம் திகதியன்ற முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| | முடிவடைந்த காலம் | |
|---|---|---|
| | 2011 திசெம்பர் 31 | 2010 திசெம்பர் 31 |
| | ரூபா | ரூபா |
| **மொத்தப் புரள்வு** | | |
| இயந்திரங்கள் வாடகைக்கு விடப்பட்டு பெற்ற வருமானம் | 7,379,087 | 91,294,463 |
| நடைமுறைப்படுத்தப்பட்ட கருததிட்ட வருமானம் | | |
| | **7,379,087** | **91,294,463** |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | |
| வேலைத் தளம் | 4,975,821 | 39,768,910 |
| டிப்போ செலவுகள் | 5,588,455 | 105,342,427 |
| பெறுமானத் தேய்வு | 2,487,693 | 29,785,234 |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்** | **13,051,970** | **174,896,571** |
| கம்பனிகளுக்கு இடையிலான மாற்றல்கள் | | (14,956,768) |
| | **13,051,970** | **159,939,803** |
| **தேறிய இலாபம்/நட்டம்** | (5,672,883) | (68,645,340) |
| நிர்வாகச் செலவுகள் | 1,775,727 | 25,297,099 |
| நிதியியல் அறவீடுகள் | 31,146 | 1,057,110 |
| ஏனைய தேய்மானம் | 5,342 | 62,745 |
| மொத்த மறைமுக செலவுகள் | **1,812,216** | **26,416,954** |
| **தொழிற்பாட்டு தேறிய இலாபம்/நட்டம்** | (7,485,099) | (95,062,293) |
| ஏனைய வருமானம் | (30,009) | 282,554 |
| தேறிய இலாபம்/நட்டம் - மேலதிக விடயங்களுக்கு முன்னர் | **(7,515,108)** | **(94,779,739)** |
| இலாபம்/நட்டம் நிலையான சொத்துக்கள் விற்பனை | 387,041 | (3,375,285) |
| மேலதிக பொருட்களுக்கான பிந்திய ஆண்டுக்குரிய தேறிய வருமானம்/செலவு | (7,128,067) | (98,155,024) |
| தேறிய இலாபம்/நட்டம் முன்கொண்டுவரப்பட்டது | (682,237,392) | (584,082,368) |
| **தேறிய வருமானம்/செலவு** | **(689,365,459)** | **(682,237,392)** |

# கணக்கீட்டுக கொள்கைகள்

குறிப்பு 1

2011.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கணக்குகள்

1.11 கணக்குகள்

அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் கணக்கீட்டு நியமங்களும் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரலாற்றுச் செலவின அடைப்படையில் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.12 ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நடைபெற்ற அனைத்து அளவினதான கொடுக்கல் வாங்கல்களும் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்ததோடு நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1.13 தொடர்ந்து நிலைத்திருக்கின்றதான கொள்கை

நிதிக் கூற்று தொடர்ந்து நிலைத்திருக்கின்றதான கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததோடு, அதன் மூலம் பொதுவாக செயலாற்றிக்கொண்டு செல்கின்றபோது சொத்துக்களை விற்றுப் பெறுவதன் மூலம் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு அதிகார சபைக்கு இயலுமாயிருக்கும்.

2. சொத்துக்களும் அவற்றை மதிப்பிடுகின்ற அடிப்படையும்

2.1 சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள்

நிலையான சொத்துக்கள் குறித்த செலவிலிருந்து திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டு வருவதற்காக ஏற்கப்பட்ட செலவுகளுடன் கொள்வனவுச் செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.1 தேய்மானமளித்தல்

கொள்வனவு செய்யப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட ஆண்டிலிருந்து தேய்மானமளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

2.2.2 தேய்மான ஏற்பாடுகள் செலவின் அடிப்படையில் பின்வருமாறான வீதங்களின்படி மேற்கொள்ளப்படுகின்றன. (தேய்மானமளித்தல் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அரை ஆண்டுக் கணக்குகளில் தேய்மானமளித்தல் காட்டப்படவில்லை.)

| | | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவகம் |
|---|---|---|---|
| 2.2.2.1 | காணியும் கட்டடங்களும் | செலவின அடிப்படையில் 2.5% | செலவின அடிப்படையில் 2.5% |
| 2.2.2.2 | மரத் தளபாடங்கள், பொருத்துகைகள், பகுதியளவு, நிரந்தர நிர்மாணிப்புகள | செலவின அடிப்படையில் 20% | செலவின அடிப்படையில் 20% |
| 2.2.2.3 | இயந்திரங்கள், உபகரணங்கள | செலவின அடிப்படையில் 20% | செலவின அடிப்படையில்10% (மீள மதிப்பிடப்பட்டதன் பின்னர்) |
| 2.2.2.4 | வாகனங்கள் | செலவின அடிப்படையில் 20% | செலவின அடிப்படையில் 20% |

தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் முழுமையாக தேய்மானமளிக்கப்பட்ட வாகனங்களுக்கு பெயரளவு பெறுமதியாக ரூபா 1000/- நிலையானதொரு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. கையிருப்பு

3.1 இறுதிக் கையிருப்பு பௌதீக உறுதிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு முதலாவதாகப் பெறப்பட்ட பண்டங்களை முதலாவதாக கையுதிர்க்கின்ற முறையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

3.2 காணாமற்போதல்கள் மற்றும் சேதங்கள் உண்மைச் செலவின் அடிப்படையில் அல்லது பதிலீட்டின் பெறுமதி ஆகிய இரண்டில் அதிக பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

3.3 பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் பெறுமதி செலவு அல்லது தேறிய விற்றுப் பெற்ற பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கையிருப்புக்கு மாற்றப்படுகின்றது.

4. பொறுப்புகள் மற்றும் ஒதுக்குதல்கள்

4.1 ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் வேண்டப்படுகின்றபோது செலுத்தப்பட வேண்டிய மற்றும் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

5. எதிர்பாரா பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 10 இன் பிரகாரம் பின்வரும் பொறுப்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

5.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக 138 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதோடு, மதிப்பிடப்பட்ட நட்டஈட்டுத் தொகை ரூபா 76.654 மில்லியனாகும்.

6. வருமான அறிக்கை

6.1 வாடகை

வாடகை வீடமைப்புத் திட்டங்களின் மூலம் கிடைக்கின்ற வாடகை மீண்டுவரும் வருமானமாகக் கருதப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 18 இன் பிரகாரம் மேற்படி சொத்துக்களுக்கு தேய்மானமளிக்கப்படுகின்றது. வாடகை வீடுகளை விற்பனை செய்வதற்கு கொள்கை ரீதியிலான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.2 அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் ஒதுக்குதல்கள்

கணக்குகளில் பின்வரும் ஒதுக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.3 ஒதுக்குதல் சதவீதம் கடன் ஆயுள் பகுப்பாய்வுக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

| கடன்பட்டோர் ஆயுள் பகுப்பாய்வு | சதவீதம் |
|---|---|
| 0 - 24 மாதங்கள் | 10% |
| 24 - 36 மாதங்கள் | 20% |
| 36 - 48 மாதங்கள் | 30% |
| 48 - 60 மாதங்கள் | 50% |
| 60 மாதங்களுக்கு மேல் | 100% |

6.4 பின்வரும் கடன்பட்டோருக்காக அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஒதுக்குதல்கள் கடன் தொகையின் காலத்தைக் கவனத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தவணை அடிப்படையிலான வீடு விற்பனை | 10% |
| பதவிநிலையினர் வீடமைப்புக் கடன்கள் | 10% |
| நகர/கிராம வீட்டு வாடகை | 10% |
| காணி கடன்பட்டோர் | 10% |

6.5 வட்டிக் கொடுப்பனவுகள்

தாமதமான காணி நட்டஈட்டிற்கான வட்டிக் கொடுப்பனவுகள் மீண்டுவரும் அறவீட்டுச் செலவாகக் கருதப்படுகின்றது.

6.6 பொதுக் கருமங்களின் செலவுகளை உள்ளடக்குதல்

நகர வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் முன்கூட்டிய விற்பனை, மீள்தாபிப்பு மற்றும் கரையோரக் கருத்திட்டங்கள் தொடர்பில் செலவிடப்பட்டுள்ள நேரடி பொதுக் கருமங்களுக்கான செலவுகள் 1997 ஆம் ஆண்டு முதல் உண்மைச் செலவு அடிப்படையில் கருத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டன.

6.7 அறவீட்டுச் செலவுகள்

வினைத்திறன்மிக்கதாக தொழில்முயற்சியையும் மூலதனச் சொத்துக்களையும் பேணிவரும் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் செலவுகளும் ஆண்டின் இலாபத்திற்கு சீர்செய்யப்படுகின்றன.

6.8 மூலதனச் செலவுகள்

நிலையான சொத்துக்களைக் கொள்ளல், விஸ்தரித்தல் மற்றும் மேம்படுத்தலின் பொருட்டு ஏற்கப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாகக் கருதப்படுகின்றன.

7. வரியிடல்

உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளின் பிரகாரம் வரி கணிப்பிடப்படுகின்றது.

வருமானத்திலிருந்து மூலதனப் பெறுகைகளுக்கான சீர்செய்தல்கள் திருத்தப்பட்டதன் பின்னர் வரி செலுத்துகின்ற பொறுப்பு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

8. வீடு விற்பனை

கணக்கீட்டு நோக்கங்களுக்காக, வீடொன்றை உடன் காசுக்கு விற்பனை செய்கின்றபோது பணம் கிடைத்த திகதி அந்த வீட்டை விற்பனை செய்த திகதியாகக் கருதப்படும். வீடு வாடகை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின், உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி அந்த வீடு விற்பனை செய்யப்பட்ட திகதியாகக் கருதப்படும்.

8.1 வீடுகளின் விற்பனை விலையைத் தீர்மானித்தல் மற்றும் கணக்குப் பதிவு

8.1.1 வீட்டுக் கூறின் விற்பனை விலையானது குறைந்தபட்சம் அந்த வீட்டிற்கான செலவை உள்ளடக்கக்கூடியவாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

8.1.2 ஒரு வீட்டிற்கான செலவு தீர்மானிக்கப்படுகின்றபோது, காணிக்கான செலவு, நிர்மாணிப்பு மற்றும் பொதுக் கருமங்களுக்கான செலவுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். அதன் மொத்தச் செலவில் நிர்மாணிப்புச் செலவு மற்றும் இலாபத்தின் பொருட்டு பொருத்தமானதொரு சதவீதம் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

8.1.3 அரச வீடமைப்புக் கொள்கைக்கு அமைய அல்லது வேறேதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் செலவை விடக் குறைந்த விலையில் ஒரு வீட்டை விற்பனை செய்வதற்கு நேரிடுகின்றபோது அவ்வாறு குறைவாயுள்ள தொகையை பொதுத் திறைசேரியிலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.33

9. வாடகை அடிப்படையில் வீடு விற்பனை

வாடகை அடிப்படையில் கையுதிர்க்கப்பட்ட வீடுகளின் பெறுமதி அபிவிருத்திச் சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதோடு கிடைக்கப்பெற்ற தவணைத் தொகைகள் அபிவிருத்திச் சொத்துக்களுக்கு எதிராக சீர்செய்யப்பட்டுள்ளன.

10. வீடமைப்பு நோக்கங்களுக்காக காணி கொள்ளல்

10.1.1 வீடமைப்பு நோக்கங்களுக்காக கொள்ளப்பட்டுள்ள காணிகளுக்கு நட்டஈடு செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நட்டஈட்டுத் தொகையின் பெறுமதி மற்றும் கொள்ளலின்போது ஏற்கப்பட்ட அடிப்படைச் செலவு கணக்குகளில் காட்டப்பட்டுகின்றது. நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் மதிப்பிடப்பட்ட அப்போதைக்குள்ள பெறுமதி மற்றும் கொள்ளலின்போது ஏற்கப்பட்ட அடிப்படைச் செலவைக் கவனத்திற்கொண்டு கணக்குகளில் காட்டப்படுகின்றது.

10.1.2 நிதி ஆண்டின் இறுதியாகின்றபோது கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தியாகாதிருந்த காணிகள் தொடர்பில், காணி கொள்ளலுக்காக ஏற்கப்பட்ட செலவு காணியின் பெறுமதியிலிருந்து பிரித்துக் காட்டப்படுகின்றது.

10.1.3 மேற்படி 10.1.1 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் மதிப்பிடப்பட்ட தற்போதைய விலை காணி கொள்ளலுக்காக உருவாக்கப்பட்ட ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றப்படும்.

10.2 காணி விற்பனை விலையைத் தீர்மானித்தலும் கணக்குப் பதிவும்

10.2.1 காணி கொள்ளல்∴கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட தொகை/நட்டஈடு எதுவாக இருப்பினும், அச்சந்தர்ப்பத்தில் உள்ள விலையைக் கவனத்திற்கொண்டு காணியின் விலை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

10.2.2 அரச கொள்கைத் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு சலுகை அடிப்படையில் விலை தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அந் நட்டம் பொதுத் திறைசேரியினால் மீளளிப்புச் செய்யப்படும். அந் நட்டத்தை பொதுத் திறைசேரியிலிருந்து பெறுவதற்கு முடியாதிருப்பின் காணி கொள்ளலுக்கான ஒதுக்கு நிதியத்திலிருந்து தீர்க்கப்படுதல் வேண்டும்.

10.3 தவணை அடிப்படையில் வீடு/காணி விற்பனை

10.3.1 நீண்ட கால கடன் அடிப்படையில் ஒரு வீடு/காணி விற்பனை செய்யப்படுகின்றபோது உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி வீட்டின்/காணியின் விற்பனைத் திகதியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க கணக்கில் இடுதல் வேண்டும்.

10.3.2 மேற்படி 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள் நடைமுறையின் பிரகாரம் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை சொத்துக்கள் கணக்கிலிருந்து வீடு/காணி விற்பனைக் கணக்குக்கு மாற்றுதல் வேண்டும்.

11. நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலைகளின் பெறுமதியை மதிப்பிடல்

எந்தவொரு கணக்கு ஆண்டிலும், ஆண்டின் இறுதியாகின்றபோது நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் தீர்க்கப்பட்ட அல்லது தீர்க்கப்படுவதற்குள்ள கட்டணப் பட்டியல்கள் “நடைபெற்று வருகின்ற வேலைகளாக” கருதப்படுதல் வேண்டும். ஆதலால், நிர்மாணிப்புக் கருத்திட்டக் கணக்கிலிருந்து வீட்டுக் கையிருப்புக் கணக்குக்கு மாற்றப்பட்ட பெறுமதிகளைத் தவிர எஞ்சிய பெறுமதிகள் ஆண்டின் இறுதியில் நடைபெற்று வருகின்ற வேலைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. மூலதன நிதியங்கள்

மூலதன நிதியச் செலவுகள், ஏற்புடைய அபிவிருத்திப் பணியின்/கருத்திட்டத்தின் கணக்குக்கு சீர்செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு பொது வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஏற்கப்பட்ட செலவுகள் மூலதனக் கணக்குக்கு சீர்செய்யப்பட்டு பதிவழிக்கப்படுவதோடு அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் சொத்துக்களாகக் கருதப்படும்.

13. பொது

13.1 சொத்துக்களுக்கு ஏற்புடையதான அளிப்புகளை சமர்ப்பித்தல் - தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவகம்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 24 இன் பிராகாரம், அளிப்புகளாகக் கிடைத்த இயந்திர உபகரணங்கள் பிற்போடப்பட்ட வருமானமாக வைக்கப்பட்டுள்ளன. இது சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தினுள் படிப்படியான மற்றும் அளவு ரீதியிலான அடிப்படையில் பெறப்படுகின்ற ஒரு வருமானமாக அடையாளம்காணப்பட்டுள்ளது.

13.2 தேசிய வீடமைப்புத் திணைக்களம்

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் வேலைகள் (1990 முதல்) 1989 செப்தெம்பர் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டன.

13.3 காணாமற்போன வாகனங்கள்

கடந்த ஆண்டுகளில் பின்வரும் வாகனங்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணாமற்போயுள்ளன.

| விடய எண்ணிக்கை | விபரம் | கொள்வனவு விலை (ரூபா) |
|---|---|---|
| 08 | மோட்டார் சைக்கிள் | 400,000.00 |
| 01 | ஜீப் வண்டி | 112,864.26 |
| 09 | | 512,864.26 |

குறித்த ஆவணங்கள் இன்மையால் கணக்குகளில் கணக்கிணக்கம் செய்ய முடியாதுள்ளது.

13.4 தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவகம்

1991 திசெம்பர் 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய இயந்திர உபகரனங்கள் நிறுவகம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு கருத்திட்டமாக தாபிக்கப்பட்டது.

பின்னர் 2011 சனவரி மாதம் 20 ஆம் திகதிய அமச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2011 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவகம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

13.5 கூட்டுக் கணக்குகள் - ஓவீடீசீ கம்பனி

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 26 இன் பிரகாரம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஓவீடீசீ கம்பனியின் முதன்மையான பங்காளராக இருப்பதால் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஓவீடீசீ கம்பனியின் கணக்குகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகளோடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

13.6 துணைக் கம்பனிகள் - ரீல்

1999 ஆம் ஆண்டில் ரீல் (தனியார்) கம்பனியில் ரூபா 5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. முதலீட்டின் சதவீதம் 35.71% ஆகும். ரீல் கம்பனியின் பங்குகள் சார்பில் அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டிய பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை.

ரீல் (தனியார்) கம்பனியை ஒழிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

13.7 ஜல்தர வீடமைப்புக் கருத்திட்டம்

அரச ஊழியர்களுக்கு 400 வீடமைப்புக் கூறுகளை நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா 1088.67 மில்லியன் செலவிடப்பட்டதோடு கொரிய கடன் உதவியின் கீழ் ரூபா 721.8 மில்லியன் மற்றும் திறைசேரி நிதியத்திலிருந்து ரூபா 368 மில்லியன் ஏற்கப்பட்டுள்ளது.

2011.12.31 ஆம் திகதியளவில் 395 வீட்டுக் கூறுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தவணைத் தொகைகள் அறவிடப்பட்டு திறைசேரிக்குத் திருப்பிச் செலுத்துவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, அந்த வங்கி மேற்படி வீடுகளுக்கான அறவீடுகளை திறைசேரிக்கு அனுப்பி வைக்கின்றது.

மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகளில் சீர்செய்தல்களை மேற்கொள்வதற்கு தேவையான உடன்படிக்கை எதுவும் இல்லாததால், மேற்படி வீடுகளின் விற்பனை விலை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் கீழ் நமைமுறைச் சொததுக்களாகக் காட்டப்பட்டுள்ளன.

மேலும், கருத்திட்டத்தின் மொத்தச் செலவுகளுக்கும் வீடுகள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானத்திற்கும் இடையிலுள்ள மாற்றமான ரூபா 215.899 மில்லியன் தொகை தொடர்பில் தீர்மானமொன்றுக்கு வரும்வரை நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டுள்ளது.

14. சுனாமி அனர்த்த சேதங்கள்

சுனாமி அனர்தத்தின் மூலம் நேரிட்ட சேதம் பின்வருமாறு, மொத்தம் ரூபா 23.35 மில்லியன் என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கடன் அறவிடப்படாமையினால் நேரிட்ட நட்டம் | ரூபா 03.22 மில்லியன் |
| தே.வீ.அ.அ.ச. சொத்துக்களுக்கு நேரிட்ட சேதம் | ரூபா 20.13 மில்லியன |
| | ரூபா 23.35 மில்லியன் |

நேரிட்ட நட்டம் சரியானதென அத்தாட்சிப்படுத்தப்படாமையின் காரணமாக மேற்படி ரூபா 23.35 மில்லியன் தொகை 2011 ஆண்டின் கணக்குகளில் காட்டப்படவில்லை.

குறிப்பு (02) - காணியும் கட்டிடங்களும்

| விபரம் | கிரயம் 2011.01.01 உள்ளவாறு மீதி காணி | கிரயம் 2011.01.01 உள்ளவாறு மீதி கட்டிடம் | ஆண்டினுள் சேர்க்கைகள் | சீராக்கல்கள் | ஆண்டினுள் நீக்கப்பட்டவை | 2011.12.31 இல் உள்ளவாறு மீதி காணி | 2011.12.31 இல் உள்ளவாறு மீதி கட்டிடம் | பெறுமானத் தேய்வு 2011.01.01 உள்ளவாறு ஏற்பாடுகள் | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு | நீக்கப்பட்ட விடயம் திரண்ட மீதி | சீராக்கல் | 2011.12.31 உள்ளவாறு மீதி | 2011.12.31 உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாசன்ஸ் வீதி | | 50,434,491.63 | | | | | 50,434,491.63 | 37,751,254.18 | 1,260,862.29 | | | 39,012,116.47 | 11,422,375.16 |
| கண்டி செயலகம் | | 8,509,312.85 | | | | | 8,509,312.85 | 6,539,629.06 | 212,732.82 | | | 6,752,361.88 | 1,756,950.97 |
| கண்டி சுற்றுலா விடுதி | | 3,031,169.52 | | | | | 3,031,169.52 | 2,218,709.20 | 75,779.24 | | | 2,294,488.44 | 736,681.08 |
| கல்முனை சுற்றுலா விடுதி | | 4,554,220.42 | | | | | 4,554,220.42 | 3,071,974.24 | 113,855.51 | | | 3,185,829.75 | 1,368,390.67 |
| பொலனறுவை மாவட்ட அலுவலகம் | | 419,737.99 | | | | | 419,737.99 | 208,455.48 | 10,493.45 | | | 218,948.93 | 200,789.06 |
| மொனராகலை மாவட்ட அலுவலகம் | | 4,785.00 | | | | | 4,785.00 | 3,349.78 | 119.63 | | | 3,469.40 | 1,315.60 |
| கதிர்காமம் சுற்றுலா விடுதி | | 221,602.61 | | | | | 221,602.61 | 135,098.33 | 5,540.07 | | | 140,638.39 | 80,964.22 |
| அனுராதபுரம் மாவட்ட அலுவலகம் | | 830,724.80 | | | | | 830,724.80 | 539,970.99 | 20,768.12 | | | 560,739.11 | 269,985.69 |
| கம்பஹா மாவட்ட அலுவலகம் | | 6,307,579.67 | | | | | 6,307,579.67 | 928,554.39 | 157,689.49 | | | 1,086,243.88 | 5,221,335.79 |
| கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | | 1,381,010.66 | | | | | 1,381,010.66 | 207,151.60 | 34,525.27 | | | 241,676.86 | 1,139,333.80 |
| இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் | | 274,189.92 | | | | | 274,189.92 | 41,128.49 | 6,854.75 | | | 47,983.24 | 226,206.68 |
| இரத்தினபுரி செத்சிறி இல்லம் | | 92,785.50 | | | | | 92,785.50 | 6,958.92 | 2,319.64 | | | 9,278.56 | 83,506.95 |
| ஏனைய கட்டிடங்கள் | | 614,295.90 | | | | | 614,295.90 | 209,692.61 | 15,357.40 | | | 225,050.01 | 389,245.90 |
| கட்டிடத் திணைக்களத்திலிருந்து பொறுப்பேற்ற கட்டிடங்கள் | | 22,743,500.00 | | | | | 22,743,500.00 | 11,925,537.00 | 568,587.50 | | | 12,494,124.50 | 10,249,375.50 |
| மாத்தறை மாவட்ட அலுவலகம் | | 7,831,027.23 | | | | | 7,831,027.23 | 1,118,131.39 | 195,775.68 | | | 1,313,907.07 | 6,517,120.16 |
| காணி, கட்டிடங்கள் தே.இ.உ.தி. | | 22,937,054.00 | | (22,937,054.00) | | | - | 12,575,337.12 | 47,785.00 | 12,623,122.12 | | - | - |
| திருகோணமலை மாவட்ட அலுவலகம் | | 168,773.54 | | | | | 168,773.54 | 67,509.42 | 4,219.34 | | | 71,728.76 | 97,044.78 |
| வவுனியா மாவட்ட அலுவலகம் | | 468,060.10 | 4,627,142.28 | | | | 5,095,202.38 | 181,812.65 | 11,701.50 | | | 193,514.16 | 4,901,688.23 |
| தே.வீ.அ. திணைக்களத்தின் கட்டிடங்கள் | | 3,742,246.85 | | | | | 3,742,246.85 | 1,964,678.72 | 93,556.17 | | | 2,058,234.89 | 1,684,011.96 |
| ஹன்தானை சுற்றுலா விடுதி | 2,520.00 | 1,109,930.00 | | | | 2,520.00 | 1,109,930.00 | 582,902.46 | 27,748.25 | | | 610,650.71 | 501,799.29 |
| அம்பாறை மாவட்ட அலுவலகம் | | 366,148.50 | | | | | 366,148.50 | 128,151.96 | 9,153.71 | | | 137,305.68 | 228,842.83 |
| பசவன்குளம் சுற்றுலா விடுதி | | 240,000.00 | | | | | 240,000.00 | 72,000.00 | 6,000.00 | | | 78,000.00 | 162,000.00 |
| பதுளை அலுவலகக் கட்டிடம் | | 1,222,000.00 | | | | | 1,222,000.00 | 366,600.00 | 30,550.00 | | | 397,150.00 | 824,850.00 |
| சனசவி நிலையம் - கண்டி | | 2,465,734.09 | | | | | 2,465,734.09 | 739,720.32 | 61,643.35 | | | 801,363.67 | 1,664,370.42 |
| அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் | | 2,040,350.74 | | | | | 2,040,350.74 | 569,279.79 | 51,008.77 | | | 620,288.56 | 1,420,062.18 |
| 5000 வீடுகள் திட்டத்தின் வாடகைக் கட்டிடம் | | 172,612,505.61 | | | | | 172,612,505.61 | 62,943,381.90 | 4,315,312.64 | | | 67,258,694.54 | 105,353,811.07 |
| பத்திலட்சம் நகர வீடுகள் திட்டத்தின் வாடகை | 55,317,190.10 | 837,824,186.87 | | | | 55,317,190.10 | 837,824,186.87 | 483,171,408.82 | 20,945,604.67 | | | 504,117,013.49 | 389,024,363.48 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் வாடகை வீடுகள் | | 13,861,809.74 | | | | - | 13,861,809.74 | 7,191,453.60 | 346,545.24 | | | 7,537,998.84 | 6,323,810.90 |
| கரையோர வாடகை வீடுகள் | | 61,185,579.02 | | | | - | 61,185,579.02 | 18,991,093.00 | 1,529,639.48 | | | 20,520,732.47 | 40,664,846.55 |
| ஜல்தர வீடமைப்புத் திட்டத்திற்கான பொழுதுபோக்கு நிலையம் | | 9,465,234.88 | | | | - | 9,465,234.88 | 709,892.62 | 236,630.87 | | | 946,523.49 | 8,518,711.39 |
| கேகாலை மாவட்ட அலுவலகம் | | 12,437,889.47 | | | | - | 12,437,889.47 | 310,947.25 | 310,947.24 | | | 621,894.49 | 11,815,994.98 |
| **மொத்தம்** | **55,319,710.10** | **1,249,397,937.11** | **4,627,142.28** | **(22,937,054.00)** | **-** | **55,319,710.10** | **1,231,088,025.39** | **655,471,765.27** | **30,709,307.08** | **12,623,122.12** | **-** | **673,557,950.85** | **612,849,784.64** |

**குறிப்பு (03) - மோட்டார் வாகனங்கள், பொருத்திகள், உபகரணங்கள்**

| நிலையான சொத்துக்கள் வகை | கிரயம் | | | | பெறுமானத் தேய்வு | | | | 2011.12.31 உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011.01.01 உள்ளவாறு மீதி | ஆண்டினுள் சேர்க்கைகள் | ஆண்டினுள் நீக்குதல்கள் சீராக்கல்கள் | 2011.12.31 உள்ளவாறு மீதி | 2011.01.01 உள்ளவாறு ஏற்பாடுகள் | ஆண்டுக்கான அறவீடுகள் | நீக்கப்பட்ட விடயங்கள் திரண்ட பெறுமானத் தேய்வு | 2011.12.31 உள்ளவாறு மீதி | |
| **01 மோட்டார் வாகனங்கள்** | | | | | | | | | |
| 1.1 தே.வி.அ.அ.ச. | 185,400,593.35 | - | 4,732,864.81 | 180,667,728.54 | 181,754,924.96 | 2,147,273.95 | 4,726,864.81 | 179,175,334.10 | 1,492,394.44 |
| 1.2 தே.இ.உ.நி. | 12,216,937.00 | 596,933.00 | 12,813,870.00 | - | 11,694,299.00 | 238,773.00 | 11,933,072.00 | - | - |
| **மொத்தம்** | 197,617,530.35 | 596,933.00 | 17,546,734.81 | 180,667,728.54 | 193,449,223.96 | 2,386,046.95 | 16,659,936.81 | 179,175,334.10 | 1,492,394.44 |
| **02 தளபாட பொருத்துகள் அரை நிலையான அமைப்புகள்** | | | | | | | | | |
| 2.1. தே.வி.அ.அ.ச. | 30,544,508.95 | 6,049,591.59 | 685.00 | 36,593,415.54 | 24,206,665.78 | 1,463,680.52 | 330.63 | 25,670,015.67 | 10,923,399.87 |
| 2.2 தே.இ.உ.நி. | 10,589,231.00 | 17,985.00 | 10,607,216.00 | - | 10,441,580.00 | 5,342.00 | 10,446,922.00 | - | - |
| **மொத்தம்** | 41,133,739.95 | 6,067,576.59 | 10,607,901.00 | 36,593,415.54 | 34,648,245.78 | 1,469,022.52 | 10,447,252.63 | 25,670,015.67 | 10,923,399.87 |
| **03 உபகரணங்கள்** | | | | | | | | | |
| 3.1. தே.வி.அ.அ.ச. | 100,978,687.45 | 15,477,976.74 | - | 116,456,664.19 | 88,176,299.71 | 6,855,159.37 | - | 95,031,459.08 | 21,425,205.11 |
| 3.2 தே.இ.உ.ச. | 370,786,551.00 | 48,136.00 | 370,834,687.00 | - | 250,260,916.00 | 2,459,164.00 | 252,720,080.00 | - | - |
| **மொத்தம்** | **471,765,238.45** | **15,526,112.74** | **370,834,687.00** | **116,456,664.19** | **338,437,215.71** | **9,314,323.37** | **252,720,080.00** | **95,031,459.08** | **21,425,205.11** |

குறிப்பு (04) - பத்திலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள்

ரூபா சதம்

| லீவுக் கொடுப்பனவு | 1,316,113.78 | 867,971.09 |
| பயிற்சி மற்றும் புலமைப் பரிசில்கள் | 350,665.00 | 695,013.24 |
| விடுமுறை லீவுக் கொடுப்பனவு | 12,243,166.95 | 12,187,155.16 |
| அங்கத்துவக் கட்டண மீளளிப்பு | 74,684.00 | 20,491.00 |
| ஊழியர் மருத்துவத் திட்டம் | 6,505,607.79 | 7,873,233.50 |
| உபசரிப்புச் செலவுகள் | 3,324,052.59 | 1,598,233.78 |
| மருத்துவ அறிக்கைக் கட்டணம் | 36,971.00 | 15,875.00 |
| பணிக்கொடை ஒதுக்குதல்கள் | 99,745,609.20 | 40,770,205.35 |
| கையிருப்பு மதிப்பீட்டுச் சபைக் கொடுப்பனவு | 151,026.50 | 104,050.00 |
| | **782,550,636.61** | **719,879,604.67** |

**குறிப்பு (32) போக்குவரத்துச் செலவு**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| பிரயாணச் செலவு - உள்நாட்டு | 18,076,523.27 | 12,532,476.27 |
| பிரயாணச் செலவு - வெளிநாட்டு | 1,182,226.55 | 385,095.76 |
| | **19,258,749.82** | **12,917,572.03** |

**குறிப்பு (33) வழங்கல்கள்**

| | 2011<br>ரூபா சதம் | 2010<br>ரூபா சதம் |
|---|---|---|
| காகிதாதிகளும் அலுவலகத் தேவைப் பொருட்களும் | 21,471,170.86 | 11,572,467.98 |
| மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் | 14,676,952.51 | 11,775,580.89 |
| போக்குவரத்து மற்றும் இயந்திர உபகரண வாடகை | 1,424,195.70 | 475,662.10 |
| சுகாதாரம், உடனலம் பேணல், ஏனைய சேவைகள் | 925,944.72 | 918,316.08 |
| அச்சிடல் கட்டணங்கள் | 1,461,562.12 | 808,498.03 |
| பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் | 795,716.87 | 768,792.99 |
| சீருடைகள் | 165,294.25 | 432,830.69 |
| நலன்புரிச் சேவை மூலம் தேறிர் வழங்கல் | 3,382,206.94 | 3,042,956.61 |
| நலன்புரி | 339,513.88 | 33,221.00 |
| பெயர்ப் பலகைகள் மற்றும் திறப்பு விழாக்கள் | 18,538,509.98 | 3,854,477.74 |
| | **63,181,067.83** | **33,682,804.11** |

**குறிப்பு (34) பராமரிப்புச் செலவுகள்**

| | 2011<br>ரூபா சதம் | 2010<br>ரூபா சதம் |
|---|---|---|
| கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 24,909,961.35 | 16,711,758.83 |
| இயந்திர உபகரணங்களும் அலுவலக உபகரணங்களு | 4,722,255.82 | 6,068,540.90 |
| மோட்டார் வாகனனங்கள் | 16,512,597.24 | 11,803,084.37 |
| மரத் தளபாடங்கள் | 207,756.00 | 117,376.62 |
| வீடமைப்புத் திட்டங்கள் | 24,612,087.58 | 21,969,420.68 |
| சுற்றுலா விடுதிச் செலவுகள் | 4,280,912.33 | 2,848,760.34 |
| | 84,026,418.70 | |
| | **159,271,989.02** | **59,518,941.74** |

**குறிப்பு (35) ஒப்பந்தச் சேவைகள்**

| | ரூபா சதம் | ரூபா சதம் |
|---|---|---|
| கேள்விப் பத்திர ஆவணக் கட்டணங்கள் | 32,100.00 | 33,296.48 |
| மோட்டார் வாகன வாடகை | 3,802,145.86 | 876,290.00 |
| தொலைபேசி | 7,314,488.37 | 6,312,151.72 |
| மின்சாரம், நீர் | 12,797,006.59 | 11,221,542.02 |
| அலுவலகக் கட்டிட வாடகை | 1,852,343.12 | 2,127,833.96 |
| வரிப்பணம் | 8,620,264.60 | 5,628,563.37 |
| விளம்பரம் | 3,510,880.90 | 49,233.00 |
| சட்டக் கட்டணம் | 5,600,324.09 | 931,602.82 |
| தபால் கட்டணம் | 7,617,444.32 | 5,931,267.96 |
| காப்புறுதி | 2,527,406.45 | 2,507,463.62 |
| உரிமப் பத்திரக் கட்டணங்கள் | 490,200.00 | 405,158.00 |
| தகவல் மற்றும் விளம்பரம் | 11,607,227.18 | 1,907,499.99 |
| | **65,771,831.48** | **37,931,902.94** |

**<u>குறிப்பு (36) நிதிச் செலவுகள்</u>**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| கணக்காய்வுக் கட்டணம் | 500,000.00 | 1,114,077.29 |
| வங்கிக் கட்டணம் | 2,221,632.13 | 871,475.68 |
| முத்திரைக் கட்டணம் | 182,952.30 | 241,909.22 |
| ஏனையவை | - | 689,796.59 |
| வாடகைக் குடியிருப்பாளருக்கான சலுகைகள் | 5,443,731.24 | 8,723,845.97 |
| சனாதிபதி நிதிய வட்டி | 29,250,000.00 | 29,250,000.00 |
| திறைசேரிக் கடன் வட்டி | 109,796.25 | 204,981.25 |
| தரகுக் கொடுப்பனவுகள் - கடன் சேகரிப்பு | 51,843,873.72 | 36,878,092.25 |
| தரகுக் கொடுப்பனவுகள் - வாடகை சேகரிப்பு | 4,177,037.43 | 3,044,371.76 |
| ஒரே தடவையில் பணம் செலுத்துவதற்கான கடன் இயலுமை மட்டம் | 8,252.42 | 39,472.19 |
| அறவிடமுடியாக் கடன்களும் ஐயக் கடன்களும் | | 98,840,722.79 |
| அபராத் தொகைகளும் மிகை அறவீடுகளும் | 10,522.34 | 27,875.43 |
| வட்டி செலுத்துதல் - கொமர்ஷல் வங்கியின் திரிபியச கடனுக்கு | 5,719,427.66 | 6,251,766.81 |
| உபஹார வங்கிக் கடன் வட்டிக் கொடுப்பனவு | 39,157,645.17 | - |
| வட்டி செலுத்துதல் - ஏனைய கடன்களுக்கு | 4,696,250.06 | 4,916,287.90 |
| நில அளவை / மதிப்பீட்டுச் செலவுகள் | 2,704,341.92 | 3,722,742.54 |
| ஏனைய நட்டஈடுகள் | 80,000.00 | - |
| டபிள்யு.எச்.ரீ. | 2,744,441.89 | - |
| என். பி. ரீ. | 580,689.48 | 753,870.38 |
| எப். எஸ். எல். | 394,658.05 | 274,792.40 |
| பொருளாதாரச் சேவைக் கட்டணம் | 4,597,242.79 | 1,371,637.41 |
| பற்று வரி | 516,006.72 | 851,349.74 |
| வெற் | 9,975,002.85 | 4,834,285.29 |
| வீட்டு ஆதன உச்சமட்ட மீளாய்வுச் சபைச் செலவு | 268,195.00 | 316,294.38 |
| ஆதன உச்சமட்ட மதிப்பீட்டுச் சபைச் செலவு | 12,750.00 | 11,850.00 |
| | **165,194,449.42** | **203,231,497.27** |

**<u>குறிப்பு (37) நேரடியற்ற தொழிற்பாட்டுச் செலவுகள்</u>**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| மாவட்ட வீடமைப்புக் குழுச் செலவுகள் | 1,373,398.44 | 987,591.00 |
| கண்காட்சிச் செலவுகள் | 6,053,844.33 | 6,793,965.82 |
| சேவைகள் | 219,143.00 | 1,199,022.39 |
| அனுமதியற்ற குடியிருப்பாளர்களை நீக்குதல் | 62,116.00 | 181,640.00 |
| 100 வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் | 237,180.00 | 359,421.74 |
| | **7,945,681.77** | **9,521,640.95** |

## 2011.12.31 இல் உள்ளவாறு உரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று

ரூபா மில்லியன்

| விபரம் | மூலதனம் | மூலதன ஒதுக்கு | வருமான ஒதுக்கு | தடுத்துவைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2010.12.31 உள்ளவாறு மீதி | 40.000 | 15,466.925 | 227.559 | (11,132.058) | 4,602.426 |
| **கூட்டுக** | | | | | |
| ஆண்டினுள் மாற்றங்கள் | | 981.557 | (227.559) | 166.079 | 920.077 |
| 2011.12.31 உள்ளவாறு மீதி | 40.000 | 16,448.482 | - | (10,965.978) | 5,522.503 |

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
## 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப்பாய்ச்சல் கூற்று

| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | ரூபா மில். |
|---|---|---|
| **வருமான வரிக்கு முந்திய தேறிய இலாபம் / நட்டம்** | | |
| தே.வீ.அ.அதிகாரசபை | (518.293) | |
| தே.இ.உ. நிறுவனம் | (7.128) | |
| ஓ.வீ.டி.சீ. கம்பனி | 13.292 | (512.129) |
| **சீர்செய்தல்கள்** | | |
| தேய்மானங்களுக்கான ஒதுக்குகள் | | |
| தே.வீ.அ.அதிகாரசபை | 41.128 | |
| தே.இ.உ. நிறுவனம் | 2.751 | |
| ஓ.வீ.டி.சீ. கம்பனி | 7.974 | 51.853 |
| | | (460.28) |
| **கழித்தல்** | | |
| தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் சீர்செய்தல் | 689.37 | |
| முதலீட்டு வருமானம் | (64.70) | |
| பங்கிலாபங்கள் பெறுதல் | (15.80) | |
| நிலையான சொத்துக்கள் விற்பனை இலாபம் | (11.38) | |
| | | 597.49 |
| தொழிற்பாடுகளிலிருந்து பெற்ற இலாபம் செயற்படு மூலதனத்திற்கு முன்னர் | | 137.22 |
| **செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள்** | | |
| அதிகரிப்பு/குறைவு நடைபெறுகின்ற வேலைகள் | 65.01 | |
| அதிகரிப்பு/குறைவு ஏனைய பெறுகைகள் | (507.03) | |
| அதிகரிப்பு/குறைவு செலுத்தவேண்டிய செலவுகள் | (292.26) | |
| அதிகரிப்பு/குறைவு ஒதுக்குதல்களுக்கு | 26.70 | (707.59) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பண வருவாய்** | | (570.38) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| நீண்டகால முதலீடு | 143.35 | |
| சிறு பங்கு உரிமையாளர்கள் | 1.64 | |
| சொத்துக்கள் விபரங்களும் கருவிகளின் கொள்வனவும் | (64.37) | |
| அதிகரிப்பு/குறைவு அபிவிருத்திச் சொத்துக்கள் | (1858.26) | |
| சொத்து விபரங்கள் கருவிகள் விற்பனை மூலம் பெற்ற பணம் | 140.85 | |
| வட்டி பெறுகை | 64.70 | |
| பங்கிலாபம் பெறுகை | 15.80 | |
| பணிக்கொடை நிதியம் | 0.87 | (1555.43) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | (2125.80) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு இடப்பட்ட பணம்** | | |
| உதவிகள் மற்றும் ஏனைய பெறுகைகள் | 742.84 | |
| கடன் | 1466.78 | 2209.62 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமான பதிலீடுகளின் தேறிய அதிகரிப்பு | | 83.82 |
| 2011.01.01 உள்ளவாறு பணம் மற்றும் பணத்திற்கு சமமான பதிலீடுகள் | | 61.95 |
| 2011.12.31 உள்ளவாறு பணம் மற்றும் பணத்திற்கு சமமான பதிலீடுகள் | | 145.76 |

ரீஎச்/சீ/என்எச்டீஏ/2011/எப்ஏ 2012 திசெம்பர் 26

தலைவர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 29.1 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

கணக்காய்வாளர் அறிக்கை

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.1.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக்கம்பனியான வரையறுக்கப்பட்ட ஓஷன் வீவ் டிவலொப்மன்ட் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்டிராத நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்ததுடன் துணைக்கம்பனியின் தேறிய சொத்துப் பெறுமதி அதிகாரசபையின் தேறிய சொத்துக்களில் 5மூ அளவில் காணப்பட்டது.

(ஆ) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் மொத்த பங்கு மூலதனத்தில் 49% தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்த போதிலும் வங்கியின் நடவடிக்கைகளுக்கு போதியளவு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரசபைக்கு முடியாது போன காரணத்தினால் வங்கியின் இறுதி நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

நியம இல. 16 இன் பிரகாரம், அதிகாரசபை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 475.10 மில்லியன் தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் ஏற்படும் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சந்தர்ப்பங்களின் போது அதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயலுமான வகையில் ரூபா 8.841 மில்லியன் தொகை மாத்திரம் வெளியில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையால் மொத்தப் பொறுப்புகளும் உள்ளடங்கும் வகையில் ஓர் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குக் குறிப்பு இல 10 இன் பிரகாரம், இழப்பீடு செலுத்தப்படாது வீடமைப்பு நோக்கத்திற்காக காணி கையேற்கப்படுகையில் அக் காணியின் சந்தைப் பெறுமதி மற்றும் அதற்காக ஏற்கப்பட்ட செலவினத்தொகை காணிக் கையேற்பு ஒதுக்கற் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் அத்தகைய ஒதுக்கல் நிதியம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பெரும்பாலான வீடமைப்பு திட்டங்களில் தற்போதும் எஞ்சியுள்ள காணித்துண்டுகள் மற்றும் வீடமைப்பு திட்ட முறைகளுக்காகப் பெறப்பட்டிருந்த / கையேற்கப்பட்ட 943 ஹெக்டேயர் காணி மாத்திரம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பங்கு முதலீட்டினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னுரிமைப் பங்குகளின் பெயர்ப் பெறுமதியான ரூபா 276,500,000 தொகை 2002 ஆம் ஆண்டு முதல் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஜீரீஇஸட் செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்களும் டபிள்கப் வாகனத்தினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களுக்காகப் பெறப்பட்டிருந்த ரூபா 43.51 மில்லியன் தொகை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைக் கணக்கில் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(v) வடக்குக் கிழக்கு மாவட்டக் காரியாலயங்கள் இரண்டில் காணாமற்போன 08 மோட்டார் சைக்கிள்களினதும் ஜீப் வண்டியினதும் பெறுமதி முறையே ரூபா 400,000 மற்றும் ரூபா 112,864 தொகைகளாக இருந்ததுடன் இதற்காக போதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) வீட்டு நிர்மாணிப்புக் கிரயத்தை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்தும் கால்நடை சபையிலிருந்தும் பெறப்பட்டிருந்த ரூபா 10.84 மில்லியன் தொகை 05 ஆண்டுகளைக் கடந்திருந்த போதிலும் கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது வைப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் போது ரூபா 2479.59 தொகை வீடமைப்புக் கடனுக்காக குறைவாக மேற்கொள்ளப்பட்ட அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டுப் பெறுமதி ரூபா 53.74 ஆகக் காணப்பட்டது.

2.2.4 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

மீளாய்வாண்டின் போது 797 மரதான தோட்டத்தின் நான்காம் கட்டத்திற்கு உரித்தான நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீடுகளில் குடியிருப்பாளர்களை குடியிருத்திய ஒப்பந்தக்காரருக்கு பிடித்துவைத்தல் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,886,906 தொகையான செலுத்தப்பட வேண்டிய செலவினம் நடைமுறை வேலைக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் பொறுப்பேற்கப்படும் வேறு செயற்திட்டங்கள் இடைநடுவில் கைவிட்டுச் சென்றிருந்தமையால் அச் செயற்திட்டங்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்டிருந்த பணத்தைத் தீர்த்துவைப்பதற்காக இச் செயற்திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருப்பதாக அதிகாரசபை அங்கத்தவர் எனக்கு அறிவித்திருந்தார்.

2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய முற்பணமாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 8,863 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவையாக ரூபா 1,229,974 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. .தன் பிரகாரம் ரூபா 1,221,111 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் பெறவேண்டியவையாக அதிகாரசபைக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 54.67 மில்லியன் தொகையின் சரியான தன்மை குறித்து உரிய நிறுவகங்களுடன் உடன்பாட்டிற்கு வராதிருந்ததுடன் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 64.71 மில்லியன் தொகை கடன் மீதி மீளளிக்கப்படுவதற்கு முடியாதெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் அக் கடன் தொகை மீள அறவிடப்படுவது நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டதுடன் இதற்காக போதிய அறவிட முடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர் மீதி ரூபா 1,623.69 தொகையானதுடன் 03 ஆம் ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 1,356.49 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடப்படுவதற்கான அதிகாரசபையால் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 31.22 மில்லியன் தொகையான ஐயக் கடன் மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்படுகையில் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மற்றும் கடன் அறவிடும் இயலுமை தொடர்பாக முறையான கவனம் கோரப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

2.2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஜல்தர செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 562.48 பெறுமதியான 395 வீடுகள் வீடமைப்பு அபிவிருத்தி வங்கியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இக் கொடுக்கல்வாங்கலுக்கு உரித்தான விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இதற்கு உரித்தான இலாபத் தொகையான ரூபா 215.89 மில்லியன் அதிகாரசபைக் கணக்குகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மட்டக்குளி, காக்கை தீவு, சீபீஸ் வீடமைப்புத் திட்டத்தின் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 51 ஆம் இலக்க காணி வியாபார நடவடிக்கைக்காக விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் இது அதிகாரசபையின் நோக்கத்துடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் துணைக் கம்பனியினதும் நிதி விளைவுகள் என்பன முன்னைய நான்கு ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிறுவகம் | 2011<br>ரூபா(மில்லியன்) | 2010<br>ரூபா(மில்லியன்) | 2009<br>ரூபா(மில்லியன்) | 2008<br>ரூபா(மில்லியன்) | 2007<br>ரூபா(மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| ஆதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நட்டம் | (518.29) | (666.73) | (502.66) | (646.74) | (784.75) |
| ஓஸ்யன்வீவ் டிவெலொப்மென்ட் கம்பனியின் இலாபம | 11.01 | 9.62 | 12.47 | 15.70 | 26.68 |

### 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட மீளாய்வு

கடந்த 05 ஆண்டுகளின் போது அதிகாரசபை தொடர்ந்து பாரியளவில் நட்டமடைந்துள்ளதனால் தேறிய சொத்துக்கள் 11% ஆல் குறைவடைந்திருந்ததுடன் இதன் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் ஆபத்தான நிலைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 தொழிற்படு மூலதன நிர்வாகம்

2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்துக்கள் விகிதம் முறையே 1:0.99 ஆகவும் 1:1.02 ஆகவும் இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது முறையே 1:0.90 ஆகவும் 1:0.92 ஆகவும் காணப்பட்டது. ஆங்கீகரிக்கப்பட்ட விகிதம் 2:1 ஆகவும் 1:1 ஆகவும் இருத்தல் வேண்டும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட பௌதீக வீடுகளின் எண்ணிக்கை 55,587 ஆன போதிலும் உள்ளபடியான நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை 14,278 மாத்திரமேயானமையால் நிர்மாண முன்னேற்றம் 26% மாத்திரமேயாகக் காணப்பட்டது. ஏவ்வாறெனினும், 2011 நவம்பர் 29 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் சேமிப்புகளின் முன்னேற்றம் 46% ஆகக் காணப்பட்டது.

(ஆ) செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் 3800 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்திற்கு இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ‘‘சகஸ்ர லங்கா’’ (முதலீட்டுச் செயற்திட்டம், அரசாங்க தனியார் பங்களிப்பு வீடுகள்) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,235 மில்லியன் பெறுமதியான 1270 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித நிர்மாணிப்பு நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிராததுடன் 2012 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 03 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் பொது முகாமையாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் முகாமைத்துவத் திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு டார்லி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச் கொண்ட காணியை தனியார் துறையின் பங்களிப்புடன் ஒருங்கிணைந்த செயற்திட்டத்திற்காக சிறந்த முகாமைத்துவ நடைமுறை பின்பற்றியிராத காரணத்தினால் ரூபா 1,000 மில்லியன் அளவிலான மதிப்பீட்டு நட்டம் கண்டறியப்பட்டது. இது தொடர்பாக அமைச்சரவையின் சிரேஷ்ட சட்ட ஆலோசகருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் படி அரச காணிகளின் சீவனஉரித்து ஒப்படைக்கபட முடியாத போதிலும் உரிய கம்பனிக்கு அதிகாரசபையால் சீவுனஉரித்து உறுதி வழங்கப்பட்டிருப்பதால் இவ் ஆதனங்களை மீளப் பெறுவதற்கான பூரணத்துவ உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அடகு செல்லுபடிக் காலத்தின் போது ஆதனத்தின் உரிய உறுதி இலங்கை வங்கி ஒன்றில் பிணைப் பொறுப்பாளராக வைப்புச் செய்யப்படுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டமை அதிகாரசபையின் பொது முகாமையாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) வீடமைப்புத் திட்ட நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் வீட்டுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 141 வீட்டுத்திட்டங்களுக்கான 3,509 வீடுகளின் பொருத்தத்தன்மைச் சான்றிதழ்கள் பெறப்படுவதிலான சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் 3357 வீட்டுத் திட்டங்களிற்காக மாத்திரம் திட்ட அங்கீகாரத்திற்காக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு 2011 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இந் நிலையில் வீட்டுத் திட்டங்களுக்கு உரித்தான வீடுகள், வீட்டு உரிமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு முடியாதிருந்தமையால் அவ் வீடமைப்புத்திட்டங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேலும் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 24.61 மில்லியன் பராமரிப்புச் செலவினமாகவும் ரூபா 84.03 மில்லியன் தொகை திருத்த வேலைகளுக்காகவும் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நாட்டின் 19 மாவட்டங்களின் அதிகாரசபைக்குரிய ஆதனங்களின் அத்துமீறிய குடியிருப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகளுடனான 229.4 ஏக்கர் காணி மீளாய்வாண்டின் இறுதியில் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த அளவில் 10 பேர்ச் இலும் கூடிய அளவு பயன்பெறும் காணியின் அளவு 187.7 ஏக்கராகக் காணப்பட்டது. 10 பேர்ச்சிற்குக் குறைவான முறைப்படுத்தப்படக் கூடிய காணியின் அளவு 22.6 ஏக்கராக இருந்ததுடன் 19.1 ஏக்கர் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொது முகாமையாளரின் 1998 திசெம்பர் 17 ஆம் திகதிய 99/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முறைப்படுத்தப்படக் கூடிய அத்துமீறிய குடியிருப்பாளர்களை முறைப்படுத்துவதற்கும் ஏனைய அத்துமீறிய குடியிருப்பாளர்களை முறைப்படுத்தும் நிகழ்ச்சி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை பொது முகாமையாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஈ) குருநாகல் மாவட்டத்தின் 526 குடும்பங்களுக்கு சூரிய சக்தி முறைமையைப் பெறுவதற்காக 1989 – 1994 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கடன் மீதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,248,206 தொகையானதுடன் மீளாய்வாண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எக் கடன்தொகையை அறவிடுவதற்காக குறித்த செயற்பாடும் செயற்பட்டிருக்கவில்லை.

©HARANGraph அதிகாரசபைக்கு உரித்தான லிபர்டி பிளாஸா சுற்றுலா விடுதி தனியார் நிறுவகத்திற்கு விற்பனை செய்யப்படுகையில் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதி பெறப்பட்டிராததுடன் அதிகாரசபை மதிப்பீட்டாளரின் மதிப்பீடு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும் இவ் ஆதனத்திற்கு உரித்தாக பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 11,520,000 ஆன போதிலும் தனியார் நிறுவகம் ஒன்றினால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 9,000,000 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக 2011 ஒக்டோபர் 14 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் பற்றிய குழு கலந்துரையாடல்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அப் செயற்பாட்டுக் குழுக் கூட்ட கட்டளைகளின் பிரகாரம் 03 மாதங்களுக்குள் ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 மே 31 இல் உள்ளவாறும் அக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

©HARANGraph நாராஹென்பிட்டி கிரிமண்டல மாவத்தையில் உள்ள அதிகாரசபைக்கு உரித்தான காணி அரசாங்க மதிப்பீடின்றி ரூபா 75 மில்லியன் தொகைக்கு எகோ வீடமைப்பு செயற்திட்டத்திற்கு 2003 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சரவைஅங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரின் 2007 பெப்ரவரி 10 ஆம் திகதிய மதிப்பீட்டாளரின் பெறுமதி ரூபா 121.5 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது தொடர்பாக 2011 ஒக்டோபர் 14 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் பற்றிய குழு வினால் விபரமான ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2012 மே 31 இல் உள்ளவாறும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கண்டி மாநகரசபைக்குரிய காணியில் அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 32 வீடுகளைக் கொண்ட மஹையாவ வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் தொகையான நிர்மாணிப்புக் கிரயம் உறப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான நிதி கண்டி மாநகரசபையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் செயற்பாட்டு திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபைக்கு உரித்தான ஹோமகம சலதர மற்றும் தியவன்னா கார்டின்ஸ் போன்ற வீடமைப்பு திட்டங்களின் 03 வீடுகள் வீடுகளை அகற்றும் முறைமைகளுக்கு அப்பால் எவ்வித உடன்படிக்கையும் இன்றி மூன்று நபர்களுக்கு எவ்வித முற்பணத் தொகையும் பெற்றுக்கொள்ளப்படாது குடியிருப்பிற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கண்டி மாவட்டக் காரியாலயத்தினால் கலக வீடமைப்புத் திட்டத்திற்காக 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ரூபா 2.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 16 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அவ்வீடுகளின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 1.355 மில்லியன் தொகை, மில்லகந்த மற்றும் பிரோஸெஸ்டர் போன்ற தோட்டச் செயற்திட்டங்களுக்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராததுடன் ரூபா 599,000 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) வீடமைப்பு நோக்கங்களுக்காக அரச மற்றும் தனியார் பிரிவுகளால் கையேற்கப்பட்ட/ கையேற்கப்பட இருந்த காணிகள் அண்ணளவாக 5,931 ஹெக்டேயர்கள் அளவிலானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இக் காணிகளுக்கு உரிய காணிப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. பெரும்பாலான காணிகள் அத்துமீறிய குடியேறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக காணிகள் நிச்சயமாக இனங்காணப்படுவதற்கு முடியாதிருந்தமையால் அத் தகவல்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமை பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

©HARAN Graph 1979 – 2010 காலப்பகுதியின் போது கையேற்கப்பட்ட காணிகளுக்கு உரித்தான நட்டஈட்டுத்தொகை நிர்வாக தாமதம் காரணமாக உரிய காலத்தில் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தினால் தனியார் காணிகளுக்காக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுப் பெறுமதி ரூபா 93.12 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் இதற்காக ரூபா 65.16 மில்லியன் தொகையான வட்டித்தொகை செலுத்தப்பட அதிகாரசபைக்கு நேர்ந்தது. இவ்வாறே காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் கையேற்கப்பட்ட காணிக்காக ரூபா 33.60 மில்லியன் தொகை மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

(ஊ) பல கைப்பற்றப்பட்ட காணிகளின் கைப்பற்றப்பட்ட நாளுக்கு பல ஆண்டுகளின் பின்னர் வரும் வருடத்திற்கு உரித்தாகக் கணிப்பிடப்படும் மதிப்பீட்டைச் செலுத்துவதனால் அதிகாரசபைக்கு பாரிய நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த முடியாதிருந்தது.

| காணியின் பெயர் | கைப்பற்றப்பட்ட ஆண்டு | கைப்பற்றப்பட்ட ஆண்டு | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| குரக்கனே வத்த | 1995 | 1999 | 2,000,000 |
| ஸ்வசக்திகம | 1981 | 1999 | 1.850,000 |

(எ) 2003, 2004 ஆம் 2005 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான அதிகாரசபையால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 14,381,122 தொகையான பெறுமதி சேர் வரித் தொகையை மீள அறவிடப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 யூன் 03 ஆம் திகதிய உள்நாட்டு வருமான வரித்திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான நிலுவை பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 24,775,876 தொகையும் இதற்கு உரித்தான தண்டனைப் பணத்தொகையான ரூபா 3,251,381 தொகையுமானதுடன் இந் நிலுவை வரி 2012 யூன் 15 ஆம் திகதி வரை தீர்க்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 வீடமைப்புக் கடன் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளின் பிரகாரம் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ரூபா 2,479.58 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதியும் ரூபா 4,734.80 மில்லியன் தொகையான மூலதன மீதியும் நிலவியதுடன் இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 2,647.34 மில்லியன் தொகையும் ரூபா 2,558.3 மில்லியன் தொகையுமான மீதி நிலவியது.

(ஆ) அதிகாரசபையால் பாதீடிடப்பட்ட அறவீட்டின் அளவு தீர்மானிக்கப்படுகையில் மொத்த கடன்பட்டோர் மீதியில் 50.78மூ ஆன கடன்பட்டோர் மாத்திரமே கருத்திற்கொள்ளப்பட்டமையால் இது கடன் முகாமைத்துவத்தில் நலிவான தன்மையென்பது அவதானிக்கப்பட்டது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்கு இணையான ஓர் கம்பனியில் ரூபா 5 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அம் முதலீடுகளில் பங்கிலாபம் வழங்கப்பட்டிராமையால் எவ்வித நலனும் அதிகாரசபைக்குப் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி நிதியத்தினால் 1991 ஆம் ஆண்டின் போது ரூபா 250 மில்லியன் தொகையான கடன் தொகை வருடாந்தம் 15% வட்டியுடன் மீளச் செலுத்துவதற்கு உடன்பட்டு பெறப்பட்டிருந்தது. இதற்கு உரித்தான வருடாந்த வட்டி முறையாகச் செலுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்த மூலதன மீதி ரூபா 55 மில்லியன் மாத்திரமேயாகும். இதன் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் தொகைக்காக ரூபா 195 மில்லியன் தொகையான மூலதன மீதி செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 228.16 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையால் சனாதிபதி நிதியத்தால் பெறப்பட்ட கடனுக்காக மிகக் கூடிய வட்டிச் சதவீதம் செலுத்தப்பட்ட போதிலும் அவ்வட்டிச் சதவீதம் கழிக்கப்படுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான ஓர் காணியின் ஊருகொடவத்த கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பிற்காக ரூபா 39.9 மில்லியன் தொகை 2005 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையால் செலவிடப்பட்டதை அடுத்து நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் இக் காணி 2006 மார்ச் மாதமளவில் ரீல் எஸ்டேட் தனியார் கம்பனியால் வீட்டுத் தொகுதி நிர்மாணிப்பதற்கு அவசியமான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அச் செயற்திட்ட நடவடிக்கைகளும் கைவிடப்பட்டிருந்தன. இக் கட்டிடத்தொகுதிக்காக அதிகாரசபையால் ஏற்கப்பட்ட மேற்குறித்த தொகையை மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக உரிய கம்பனி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடி ஓர் உடன்பாட்டிற்கு வந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் இப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது வாடகை வருமானமாக ரூபா 45.34 மில்லியன் தொகை உழைக்கப்பட்டிருந்ததுடன் வீடமைப்புத் திட்ட முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு ஒப்படைக்கப்படாமையால் அவ் வருமானத்தில் ரூபா 24.61 மில்லியன் தொகையான பராமரிப்புச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பூ ஓர் பகுதி நிர்மாணிக்கப்பட்டு பல்வேறு காரணங்களினால் கைவிடப்பட்டிருந்த வீடமைப்புத்திட்டங்கள் 02 இன் செலவினமான ரூபா 43மில்லியன் தொகையான நடைமுறை வேலையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) காலி மாவட்ட செயலகத்திற்காக கட்டிட நிர்மாணிப்புச் செலவினமாக ரூபா 1,106,176 தொகை நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அம் மாவட்டக் காரியாலயத்தின் நிர்மாணிப்புகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

4.6. இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) யாழ்ப்பாண மாவட்டக் காரியத்தினால் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் வீடமைப்புக்கடன் திட்டத்தின் (ரீசீசீஎஸ்) கீழ் வழங்கப்பட்ட ரூபா 5,965,000 பெறுமதியான 1,468 வீடமைப்புக் கடன்களை கோவைகள் காணாமற் போன காரணத்தினால் அக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக அதிகாரசபை போதிய சட்ட பூர்வ நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. கோவைகள் காணாமற்போயிருந்தமையால் சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்ததாக பொது முகாமையாளர் அறிவித்திருந்தார்.

(ஆ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டிடத்தின் சில மாடிகள் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2007 மார்ச் 02 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த குத்தகை வாடகைத்தொகை மதிப்பீட்டின் பிரகாரமான இறைகள் எக் காரணமும் குறிப்பிடாது 2008 சனவரி 01 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் மூலம் குறைக்கப்படுவதனால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 18,083,200 தொகையான திருண்ட குத்தகை வாடகை வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) அவிஸ்ஸாவலை மாணிக்கவத்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 76.07 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் வேலை பூர்த்திசெய்யப்பட்டிராத 75 வீடுகளின் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்காக உடன்படிக்கை ஏற்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக் கூட்டுத்தாபன வங்கியால் ரூபா 43.925 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இவ் வீட்டுச் செயற்திட்டத்தால் ரூபா 32.14 மில்லியன் தொகையான நட்டம் அவதானிக்கப்பட்டது.

4.7 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன் விற்பனைகளின் அடிப்படையில் வீடுகளை விற்பனை செய்கையில் வீட்டுத்திட்டத்தைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் விற்பனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் இதற்கு போதியளவு பணம் வீட்டுக் கொள்வனவாளரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் 117 தோட்டம், எல்விடிகல மாவத்தை (IV கட்டம்) 08 வீடுகள் திட்டமிடப்பட்ட சந்தர்ப்பத்தில் வீட்டுக் கொள்வனவாளரிடம் இருந்து அதிகாரசபைக்குப் பெறப்பட்ட பணம் வீட்டுப் பெறுமதியில் 1% இனைப் பார்க்கிலும் குறைவான பெறுமதியாக இருந்தது. வேளிநாட்டு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட 04 வீடுகளுக்காக ரூபா 4.97 மில்லியன் தொகை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு இருந்ததுடன் ரூபா 15.2 மில்லியன் பெறுமதியான 02 வீடுகளுக்கு ரூபா 50,000 உம் ரூபா 1,000,000 உமான முற்பணத் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராததுடன் 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக மிகுதித் தொகை அறவிடப்படாதிருந்தது.

(ஆ) ''சஹஸ்ர லங்கா'' வீடமைப்புச் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 100 மில்லியன் தொகையான மதிப்பீட்டில் 770 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதில் 04 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஒரு வீடமைப்புச் செயற்திட்டம் ஒன்றும் 2007 ஆம் ஆண்டின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரினால் கைவிட்டுச் சென்ற யக்கல சியனே உயனே யில் ஒரு பகுதி பூர்த்திசெய்த 05 வீடுகள் மீளத் தயாரிக்கப்படுவதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அப் பௌதீக முன்னேற்றம் 5% - 35% இடையில் காணப்பட்டது.

(இ) அதிகாரசபையிடம் உள்ள கூட்டு ஆதன முகாமைத்துவத்தை திருத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 255 மில்லியன் தொகையான மதிப்பீட்டின் கீழ் ரூபா 230 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 76.54 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் கீழ் மாலிகாவத்தை வீடமைப்புச் செயற்திட்டத்தின் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் 2011 ஏப்ரல் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2012 ஏப்ரல் 12 ஆம் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்கு அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பளித்திருந்த போதிலும் 2012 யூன் 15 கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறும் உரிய நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

4.8 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபை வளங்கள்

பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 2 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் வேறு நிறுவகத்திற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.'. 14 ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா 3.42 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. வரிசை அமைச்சிற்கு 07 வாகனங்களும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 05 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

4.8 பதவியணி நிர்வாகம்

மாவட்ட செயலகப் பதவியணியினர் மற்றும் பிரதேசச் செயலகப் பதவியணியினர் தொடர்பான நிலமை பின்வருமாறாகும்.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினா | உள்ளபடியான பதவியணியினா | மிகையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிறைவேற்று | 17 | 07 | - | 10 |
| மத்திய நிலை முகாமைத்துவம | 97 | 67 | - | 30 |
| கனிஷ்ட நிலை முகாமைத்துவம் | 143 | 94 | - | 49 |
| முகாமைத்துவ உதவியாளர்கள | 913 | 1271 | 358 | - |
| ஆரம்ப நிலை | 206 | 409 | 203 | - |
| மொத்தம் | 1376 | 1848 | 561 | 89 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையின் மனித வளத் திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2493 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2010 யூலை 01 ஆம் திகதிய அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 1376 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 1848 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக 561 ஊழியர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மிகையான பதவியணியில் ஒப்பந்த மற்றும் நாளாந்த படிப்பணக்கொடுப்பனவின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 161 உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அம் மொத்த ஊழியர்களுக்காக ரூபா 16,730,328 தொகை அடிப்படைச் சம்பளமாக அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக 18 உத்தியோகத்தர்கள் 03 மாதங்களுக்கு மேல் 01 மாதம் முதல் 09 ஆண்டு காலம் வரை பதில கடமைப் பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டுத்திட்டம்

அதிகாரசபையால் 2011 ? 2015 காலப்பகுதிக்காக கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2007 திவெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் ;

(I) கூட்டுத்திட்டச் செயற்பாடுகள், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பாதீட்டிற்கு இடையே தொடர்பைக் கட்டியெழுப்பும் விதம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடந்த 03 ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வு

(iii) செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
குறித்த ஆண்டுகளின் இறுதியில் கூட்டுத்திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான முன்னேற்றமும் செயற்படாத மற்றும் மந்த நிலையில் இயங்கும் பிரிவுகள் தொடர்பாக மதிப்பிட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பான ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சில மாவட்ட காரியாலயங்கள் சில ஆண்டுகளாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் செயற்பாட்டுக் கணக்காய்விற்கு போதிய கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

3.2.13 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முறையே ரூபா 723.96 மில்லியன் மற்றும் ரூபா 1,172.78 மில்லின் தொகைகளான உள்ளபடியான வருமான மற்றும் செலவினம் ரூபா 929.55 மில்லியன் மற்றும் ரூபா 1,192.71 மில்லியன் தொகையான பாதீடடப்பட்ட தரவுகளும் ஒப்பிடுகையில் ரூபா 20.5.59 மில்லியன் தொகையால் வருமானத்திலும் ரூபா 19.93 மில்லியன் தொகையால் செலவினத்திலும் வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் வழங்கல்

(ஆ) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

(இ) களஞ்சியம்

(ஈ) ஒப்பந்தங்கள்

(உ) முற்பணங்கள்

(ஊ) பதவியணி

(எ) வங்கிப் பணம்

(ஏ) பெறுமதி சேர் வரிக் கணிப்பீடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி